உ

கணபதி துணை.

# பழமலைக்கோவை.

இது

துறைமங்கலம்
சாமிநாதைய தேசிகரென்னும்
வீரசைவக் கவிஞரால் இயற்றப்பெற்றது.

சென்னை

மகாமகோபாத்தியாய—தாக்ஷிணாத்யகலாநிதி

## டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பலவான்குடி
'சிவநேசன்' அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

பவ௵ தைமீ

1935

விலை அணா 10.

உ

# இப்புத்தகத்தி லடங்கியவை.


பக்கம்.

1. முகவுரை 1—16

[கோவைகளின் இயல்பு; நூல்; பழமலையின் பெருமை: மணிமுத்தாநதி, மூர்த்திவிசேடம் முதலியன; நூலாசிரியர்; நூலாராய்ச்சி: மூர்த்தி, தலம், தீர்த்தம், வழிபட்டுப் பேறுபெற்றோர், பெரியோர் முதலியவர்கள் இயல்பு, பறவை தாவரங்களின் இயல்பு, உலக வழக்கச் செயல்கள், பழமொழிகளும் உலக வழக்குக்களும், உவமைகள், பழைய வரலாறுகள், ஒப்புமை, சொற்களும் தொடர்களும்.]

2. பழமலைக்கோவை மூலமும் குறிப்புரையும் ... 1—92

3. சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் ... 93

4. செய்யுட்களின் முதற் குறிப்பகராதி ... 94-100

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| முக. 2 | 27 | திருநடனத்துக்குக்குரிய | திருநடனத்துக்குரிய |
| ௸ 3 | 13,29 | முழும் கொலிநீர் | முழுங்கொலிநீர் |
| 22 | 10 | வனலி...சோர் | வனலினிற்சோர் |
| 32 | 27 | சுந்தரமூர்த்தியை | சுந்தரமூர்த்தியை |
| 75 | 8 | ரலர்க்கென | ரலர்க்கென் |
| 87 | 17 | ஊனசேர | ஊன்சேர |
| 90 | 27 | பொருந்தி | பொருந்திக் |
| 92 | 17 | திகங்ண் | திங்கண் |

உ
கணபதி துணை.

# பழமலைக்கோவை

## முகவுரை.

திருச்சிற்றம்பலம்.

கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற வெளியான் றன்னைக்
குருமணியைக் கோளரவ மாட்டு வானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவணவன் றன்னை
அருமணியை யடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சு மாடியைநா னபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்தவாறே.

(திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.)

திருச்சிற்றம்பலம்.

### 1. கோவைகளின் இயல்பு.

கோவை யென்பது அகத்திணைக்குரிய துறைகளுக்கு இலக்கியமாக ஒரு வரலாற்றுமுறை அமைய நானூற்றின் மிக்க கலித்துறைகள் கோக்கப்பெற்ற தமிழ்ப் பிரபந்தமாகும்; ஐந்திணைக்கோவையெனவும் இது வழங்கப்படும். திருவாதவூரடிகளால் இயற்றப்பெற்ற திருச்சிற்றம்பலக் கோவையாரும் இறையனாரகப்பொருளில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற பாண்டிக்கோவையும் பழையகோவைகளாகும். யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியராற் கூறப்படும் குமரசேனாசிரியர் கோவையும், தண்டியலங்கார வுரையாசிரியரால் சுட்டப்படும் தமிழ்முத்தரையர் கோவையும், ஒட்டக்கூத்தர் இயற்றிய காங்கேயன் நாலாயிரக்கோவையும், அம்பிகாபதி கோவையும் பழமையுடையனவென்றே தெரிகின்றன. பிற்காலத்துக் கோவைகள் பெரும்பாலும் தஞ்சைவாணன் கோவையைப் பின்பற்றி இயற்றப்பட்டவைகளாகும்.

கோவைகள், வழிபடு தெய்வத்தையேனும் ஆதரித்தவர்களையேனும் பாட்டுடைத்தலைவர்களாக அமைத்துப் புலவர்களாற் பாடப்பெறுவன; "யாவையும் பாடிக் கோவைபாடு" என்றுள்ளபழமொழியினால் ஏனைப்பிரபந்தங்களை இயற்றி நாப்பழக்கம் தேர்ந்தபுல

வர்களே இவற்றைப்பாடும் தகுதி யுடையவர்களென்பது பெறப்படும். இவற்றைச் சிறுகாப்பியங்களோடு சேர்த்துக்கூறுவர் தண்டியலங்கார வுரையாசிரியர். எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐவகை இலக்கணங்களும் நன்கு அமைவதற் கேற்றவண்ணம் இப்பிரபந்தங்கள் விளங்குகின்றன. சிவஞானச்செல்வராகவும் அழுதடியடைந்த அன்பராகவும் விளங்கிய மணிவாசகப் பெருமானே அழகிய திருச்சிற்றம்பல முடையாரது புகழ்வகையை அமைத்தற்கு இடமாக இத்தகைய பிரபந்தத்தைக் கைக்கொண்டாரென்பதும் சிவபிரானே அதனைத் தம் திருக்கரத்தால் எழுதினாரென்பதும் இந்தப் பிரபந்தங்களின் பெருமையை விளக்கும்.

## நூல்.

பழமலைக்கோவையென்னும் இந்நூலானது பழமலையிற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பழமலைநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது; துறைமங்கலத்தில் இருந்த சாமிநாதைய தேசிகரென்னும் வீரசைவக்கவிஞரொருவரால் இயற்றப் பெற்றது; 427 செய்யுட்களை உடையது.

## 2. பழமலையின் பெருமை.

பழமலையென்பது நடுநாட்டில் ஸ்ரீமணிமுத்தா நதிக்கரையில் உள்ளதொரு சிவஸ்தலமாகும்; சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டில் தலைமையான நான்கினுள் இத்தலம் * ஒன்றாகும். இது விருத்தாசலம், விருத்தகாசி, சிரகிரி, முதுகுன்று, குன்றை முதலிய திருநாமங்களால் வழங்கப்பெறும். இது பலபுராணங்களாலும், இதிகாசங்களாலும், வேறு பல நூல்களாலும் பலபடியாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இம்மலை சிவபெருமான் திருவுருவென்றும், திருமணிமுத்தாறு சத்தியுருவென்றும் இத்தலபுராணம் கூறும். †சிதம்பரம் சிவபிரான் திருநடனத்துக்குரிய தலமென்றும் இது குலாவி வீற்றிருத்தற்குரியதென்றும் கூறப்படும்.

இத்தஸ்தலத்தில் மரிக்கும்உயிர்களை மரணசமயத்தில் உமாதேவியார் தம்மடியில் வைத்து முன்தானையால் விசிறுவாரென்பதும் சிவபெருமான் அவ்வுயிர்களின் வலக்காதில் பஞ்சாட்சர உபதேசம் செய்தருளுவாரென்பதும் பல நூல்களிற் காணப்படுகின்றன.

---

* ஏனைமூன்று தலங்கள், காசி, சிதம்பரம், காளத்தி யென்பன.

† சீகாளத்தியுலா, 47-50.

" [illegible]த் துடையின்மேற் கிட்த்தித் துஞ்சும்
ஆசிலா உயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி
ஈசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையும் கண்டான்"

என்பது கந்தபுராணம்.

மகாப்பிரளய காலத்திலும் இந்தத்தலம் அழியாமல் மேலோங்கி நிற்பது;

"பாடு வாருக் கருளு மெந்தை பனிமுது பௌவமுந்நீர்
நீடு பாரு முழுது மோடி யண்டர் நிலைகெடலும்
காடு தானு மூடு மோடி ஞாலமு நான்முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத் துயர்ந்தது முதுகுன்றே"

"......... செழு நிலத்தை மூடவந்த மூவாத முழங்கொலிநீர்
கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றமே"

"ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றே" (திருஞா. தே.)

என்னும் திருவாக்குக்களாலும்,

" பழமலை பகரிற் பாய்புனல் யாண்டும்
பரந்தொரு பற்றிலா துலகம்
முழுவதும் கரக்கப் பெறுபிர ளயத்தின்
முகட்டினின் முடிவிலா திருக்கும் "
(திருக்காளத்திப்புராணம், தல விசிட்டமுணர்த்திய. 47)

என்பதனுலும் இது விளங்கும்.

இங்கே அகத்தியர் முதலிய முனிவர்களும், பிரமன் திருமால் முதலியவர்களும், வேறு பலரும் பூசித்துப்பேறு பெற்றனர்.

## மணிமுத்தாநதி.

மணிமுத்தாநதி இத்தலத்தை வழிபடுங் குறிப்பாக வலஞ் செய்தோடுகின்றதென்பர்;

" முழங்கொலிநீர் முத்தாறு வலஞ் செய்யு
முதுகுன்றத் திறையை " (திருஞா. தே.)

" முத்தி முத்தாறு வலஞ்செயு முதுகுன்றரை " (சுந்தா. தே.)

என்பவற்றால் இது குறிப்பிக்கப் பட்டிருத்தல்காண்க. அந்நதி கங்கையிற் சிறந்ததாகக் கருதப்பட்டு இறந்தாரென்பு இடப்படுதலின் அத்தி முத்தாறென்றும், தன்பால் மூழ்கினவருக்கு முத்தியை வழங்குதலின் முத்தி முத்தாறென்றும் வழங்கப்பெறும்.

மூர்த்திவிசேடம் முதலியன.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகரது திருநாமம் பாதாள விநாயகரென்பது; அது தமிழில் ஆழத்துப்பிள்ளையாரெனவழங்கும். சிவபிரான் திருநாமம் விருத்தாசலேசர், பழமலைநாதர் முதலியன; அம்பிகையின் திருநாமம் விருத்தாம்பிகை, பெரியநாயகி முதலியன வாம்.

இந்த ஸ்தலத்துக்குரிய விருட்சம் வன்னி.

இதனைச் சார்ந்ததாகக் கோபருப்பதம் என்னும் ஒரு சிறந்த சிவஸ்தலமுண்டு. அத்தலமும் இந்த ஸ்தலபுராணத்தாலும் வேறு பல நூல்களாலும் இத்தலத்துடன் சேர்த்தே சிறப்பிக்கப்படுவது. மகாநந்திபாராயண முனிவரென்னும் ஸித்தரொருவர் இருந்து சசிவர்ணனென்னும் மாபாவி யொருவனைத் தடுத்தாட்கொண்டு ஞானோபதேசம் செய்தற்கு இடமாகிப் பெருமைபெற்றது அது.

பழமலையைத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலிய மூவரும் பாடியுள்ளார்கள். ஸ்ரீ ஞானக்கூத்தரென்னும் பெரியாரால் தமிழில் இயற்றப்பட்டபுராணம் ஒன்று இதற்குண்டு. கவிஞர் பெருமானாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளால் இயற்றப்பெற்ற பழமலை யந்தாதி, பிக்ஷாடன நவமணிமாலை, பெரியநாயகியம்மை விருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறை யென்பனவும், குமார தேவரால் இயற்றப்பெற்ற பெரியநாயகி யம்மைபதிகம் என்பதும், குரு நமச்சிவாயரா லியற்றப்பெற்ற சில வெண்பாக்களும், வேறு ஒரு கவிஞரால் இயற்றப்பட்ட பழமலை வெண்பாவென்னுமொருநூலும், பிறவும் இத்தலசம்பந்தமானவை. கந்தபுராணம், சூதசங்கிதை, சிதம்பரபுராணம், திருக்காளத்திப்புராணம், திருக்காளத்திநாதருலா முதலிய பல தமிழ்நூல்களில் இத்தலத்தின்பெருமைகூறப்படுகின்றது. இத்தலத்துமுருகக்கடவுள் விஷயமாகஅருணகிரிநாதரால் இயற்றப்பெற்ற திருப்புகழ்கள் சிலவுண்டு.

## 3. நூலாசிரியர்.

இப்பழமலைக்கோவையின் ஆசிரியராகிய சாமிநாதைய தேசிகரென்பவர் துறைமங்கலம் கருணைச் சிவப்பிரகாசரென்பவருடைய குமாரர். இந்தநூல் அவரால் இயற்றப்பெற்று அரங்கேற்றியகாலம் சாலிவாகன சகாப்தம் ௧௬௮௨ (கி. பி. 1759) என்று இந்நூல் எழுதிய ஏட்டுச் சுவடியிலுள்ள குறிப்பொன்றினால் தெரிகின்றது.

எனவே இந்நூலாசிரியருடையகாலம் இற்றைக்குஏறக்குறைய 180 வருஷங்களுக்கு முன்பென்று புலப்படுகின்றது.

இந்நூலின் நடை முதலியவற்றைப் பார்க்கையில் இதனைத்தம் இளமையில் இவர் இயற்றியிருக்க வேண்டுமெனத் தோற்றுகிறது; ஆயினும் தலசம்பந்தமான வரலாறுகளையும், தாம் கற்றும் கேட்டும் அறிந்தபல செய்திகளையும் ஆங்கங்கே அமைத்திருக்கின்றார்.

## 4. நூலாராய்ச்சி.

### க. மூர்த்தி.

இவர் முதலில், 'பாதளத்தைங்கரனை' வாழ்த்தி இந்நூலைத் தொடங்குகின்றார். சிவபெருமான் பெருமைகளையும் பழமலையின் சிறப்பையும் அமைத்துச்செல்கின்றார். பழமலைவாணர், முதுகுன்றர், விருத்தாசலத்தர் (67) முதலிய சிவபெருமான் திருநாமங்களும் பெரியநாயகி யம்மையின் திருநாமமும் (1, 36, 151, 254) இடையிடையே எடுத்தாளப் படுகின்றன. அவ்வம்மையைப் பெண்ணுக் கருங்கலமாம் பெரியம்மை, பெண்ணுக்கரசியென்பர்.

### உ. தலம்.

திருமுதுகுன்றம்மிகப்பழமையானதலமென்பதை, "முன்மே லெழுந்த முதுகிரி" (82), "வேதன் படைத்த மலைகட் கிறையென வீழ்சடைநம், நாதன் படைத்த முதுகிரி" (86) என்பவற்றாலும், பலபுலவர்களாற் பாராட்டப்படுவ தென்பதை, "இசையார் பெருவளஞ் சூழ்முது குன்றர்" (55), "கற்றோர் பரவு முதுகுன்றர்" (96, 334), "சொன்மாலை வேய்ந்த திருமுது குன்றர்" (142), "பாடிப் புலவர் தொழுமுது குன்றர்" (145) என்பவற்றாலும், இத்தலத்தில் இறத்தலால் நற்கதி கிடைக்குமென்பதை, "செத்தார் பிறவாத்திருமுது குன்றர்" (70), * "மரியாதிருந்திட வேண்டிய பேர்கண் மரித்தனரேற், பரியாதுடலருள் சீர்முது குன்றர்" (381) என்பவற்றாலும், கைலையினும் சிறந்ததென்பதை "வெள்ளிக்கிரியை வெறுத்த முதுகுன்றர்" (403) என்பதனாலும் மாசிமகத்தில் விழாவுண் டென்பதை, "முதுகுன்றுறு கண்ணுதலோன் மாசிமகம்" (402) என்பதனாலும் புலப்படுத்தியிருக்கின்றார்.

---

* "பழமெற்பினயல், சூழமரிக்கு மியல்பையெஞ் ஞான்றுந் துணிந்திலையே" (பழமலையந்தாதி, 17) என்றார் சிவப்பிரகாசரும்.

"காசி சுடலை யெனமுது குன்றுறு கண்ணுதலோன்" (402) என இது காசியினும் மிக்கதெய்வப் பதைக் குறிப்பிக்கிறார். ஸ்ரீசிவப் பிரகாச சுவாமிகள் பழமலையந்தாதியில் இக்கருத்தை,

> "மாசி யதிகந் துறந்தார் மகிழ்குன்றை மாநகரோ
> காசி யதிகங் கொலோவென் பிரரயினக் காசியெனப்
> பேசி யதிகந் தகன்றிருந் தான்பரன் பேரடலை
> பூசி யதிகம் பரனீங்கி லானிப் புரியினையே"

என விளக்கியுள்ளார்.

இத்தலத்தில் தேவர்களின் பொருட்டு இறைவர் ஒருமுறை திருநடனம் செய்தருளியதை, "பொதுவினடம்புரி நம்முது குன்றர்" (393) என உய்த்துணர வைத்துள்ளார். விருத்தாசலபுராணம்,

> "வித்தக மாகிய சித்தர்கண் மெத்திய மெய்யென்னைச்
> சித்திர மான திருப்பதமெண்டிசை யுந்தோன்றச்
> சத்தி முகத்தும் பத்தர் முகத்துந் தன்கண்ணு
> முத்த நதிக்கணி ருத்த மளித்தான் முதுகுன்றன்"
>
> (நிருத்தச் சருக்கம், 12)

என்றுகூறும்.

பின்னும் இங்குள்ள திருக்கோயிற் கோபுரம், "வான்றொட்ட கோபுரம்" (240) என்றும், திருமதில், "சேணைப் பொருந்து மதில்" (255), "மாகத் தளவு மதில்" (374), "புங்கம் பொருந்து மதில்" (380), "சுதை யுற்றெழுந்த மதில்" (391) என்றும், மாடவீதி, "காரும் மதியுந் தவழ்மாட வீதி" (61) என்றும் சிறப்பிக்கப் படுகின்றன. இவை,

> "மாட மதிலணி கோபுரமணி மண்டபம்
> மூடி முகிறவழ் சோலை சூழ்முது குன்றரே" (சுந்தர. தே.)

என்னும் திருவாக்கை நினைப்பிக்கின்றன.

## ௩. தீர்த்தம்.

இத்தலத்திலுள்ள தீர்த்தங்களுள் திருமணி முத்தா நதியை இவ்வாசிரியர், "முத்தாறு சூழுமுதுகிரி"(14), "கொழிக்குந் தரள முத்தாறுடையார்" (32), "மணிமுத்த யாநதி சூழ்முது குன்றர்" (98), "மணிமுத்தவாறும்" (157), "திருமுதுகுன்றிற் பரவுறுநன் மணிமுத்த மாநதி" (337) என்னும் இடங்களிற் பாராட்டியுள்ளார்; இவற்றுள் 'கொழிக்குந் தரள முத்தாறு' என்பது,

"[illegible]ருதிரு நித்திலம்வா ரிக்கொழிக்கு முதுகுன்றமே"
(திருஞா. தே.)

என்னுந்திருவாக்கை உட்கொண்டு அமைக்கப்பட்டதென்று தோற்றுகிறது. அந்நதியிலுள்ள புண்ணிய மடுவென்னுந்துறை "காமடுச் சூழுந் திருமுது குன்றர்" (390) என்பதிலும், பிறதடாகங்கள், "பங்கேருகத்தடஞ் சூழ்முது குன்றர்" (34), "பைங் குவளைத் தடஞ் சூழ்முது குன்றர்" (64), "சங்காழ் புனற்றடஞ் சூழ்முது குன்றர்" (112), "தடமார் முதுகுன்றர்" (243), "வாளை குதிக்குந் தடமுது குன்றர்" (262), "அன்னஞ் செறிதடஞ் சூழ்முது குன்றர்" (263), "அனம் பூங்கமலந் துன்னேர்த் தடமுதுகுன்றர்" (293), "வாளைத் தடஞ்சீர் பெறுமுது குன்றர்" (301), "குருகின் விளங்கிய பூந்தடஞ் சூழ்முது குன்றர்" (342), "செங்காவி நீர்த் தடஞ் சூழ்முதுகுன்றர்" (369), "பூமேவிய தடஞ்சூழ்முது குன்றர்" (419) என்பவற்றிலும் கூறப்படுகின்றன.

## ச. வழிபட்டுப் பேறுபெற்றோர்.

இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றோர்களுள் அகத்தியர், "முன்னீர் குடிக்குமுனிதாழ்பழமலை முத்தர்" (17), "விந்தமடக்கு முனிதாழ் முதுகுன்றர்" (191), "பண்டார் குறுமுனி தாழ்முது குன்றர்" (278), "கடலைக்குடிக்க முனிதாழ் முதுகுன்றர்" (404) என்பவற்றிலும், திருமால் "விண்டுவந்தேத்தும் பழமலை வாணர்" (43), "அலையி லிருந்தவன் தாழ்முதுகுன்றர்" (197), "கண்ணன் பரவுந் திருமுது குன்றர்" (400) என்பவற்றிலும், பிரமதேவர், "விரைசேர் மலரவன் போற்றும் பழமலை மெய்யர்" (48), "விதியும் பணியுந் திருமுது குன்றர்" (93), "முன்னை மயற்கருள் செய்முது குன்றர்" (147), "நச்சிப்பணியும் விதிமுது குன்றர்" (200), "அனத்தற் கருள் சிவனார் முதுகுன்று" (264), "அஞ்சத்தவன் பணிமாமுது குன்றர்" (327) என்பவற்றிலும், இருவரும் (அயனரி), "இருவர் வழுத்து முதுகுன்றர்" (52), "இருவர்க்கருளொ மொருமுதுகுன்றர்" (297) என்பவற்றிலும், இந்திரன், "பன்னாட் டத்திந்திரன் சூழ்முது குன்றர்" (166) என்பதிலும், சூரியன் "இனன்றாழ் முதுகுன்று" (302) என்பதிலும், வாணாசுரன், "வாணற் கருள்புரி முதுகுன்றர்" (158) என்பதிலும், சசிவன்னன் "முன்னோர் சசிவன்னன் றாழ்முது குன்றர்" (216) என்பதிலும்,

பதஞ்சலி, "அரவு பணிமுது குன்றம்" (322) என்பதிலும் சொல்லப்பட்டுள்ளார்கள். இந்தத் தலத்திற்குரிய புராணத்தால் இவருட் சிலர்வழிபட்ட வரலாறுகளே பெறப்படுகின்றன; ஆயினும்,

"நெடியானும் நான்முகனு மிரவியொடு மிந்திரனும்
முடியால் வந்திறைஞ்சு முதுகுன்ற மமர்ந்தவனே"

. (சுந்தா. தே.)

என்னும் தேவாரத்தாலும் பிறவற்றாலும் பலர் வழிபட்ட செய்திகளை அறியலாம். உமாதேவியாருக்கு ஒரு சமயம் பழமலைநாதர் அருள்கூர்ந்த செய்தி, "தேவிக்கருளுந் திருமுது குன்றர்" (304) என்பதனாற் பெறப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பெற்ற பொன்னை மணிமுத்தாநதியில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்திலே பெறும்படி. சிவபெருமான் அருள்செய்த அரியவரலாறு "ஆற்றில்விடுத்த பொருள் குளத்தேயுற வன்று நம்பி, வீற்றிலிருக்க வருண்முதுகுன்றர்" (35) என்று பாராட்டப்பெறுகிறது. இத்தலம் பலவகைச் சிறப்புடையதாக விளங்குதலின் இங்கே முனிவர் பலர் இடையறாது தவம்புரிந்தும் பழமலைநாதரை வழிபட்டும் வாழ்த்தியும் வந்தனரென்பது,

"நாரானபன் முனிவர்தொழ விருந்தானிடம்"
"முறையால் மிகு முனிவர்தொழு முதுகுன்று"
"மூவாதபன் முனிவர் தொழு முதுகுன்று"

"ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை முழுதுணர்ந்தைம்
புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே"
"முறையான் முனிவர் வணங்குங் கோயின்முதுகுன்று"

என்னும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருவாக்குக்களாலும்,

"இளக்குறு தவத்தோர் தரித்துறை விருத்த
கிரியமர் பெரியநா யகியே"

"கேதமி றவத்தோர் சூழ்தரும் விருத்த
கிரியமர் பெரியநா யகியே" (பெரியநாகி யம்மை பதிகம்)

என்னும் குமாரதேவர் திருவாக்குக்களாலும்,

"வழுவிந்து வினைப்பகை சாய்தரவும்
மாயைக்கலை யாவழி யெய்திடவும்

[illegible] மாமல மற்றிடவும்
[illegible] தமறச் சிற்போதமிகுச்
[illegible]ம்படி யும்பெறி னிங்கிதுபோல்
[illegible] ஊனதோவிலை யென்றுயர் மாமறைநூல்
மூழு நன்னெறி மாதவர் தாமகலா
முதுகுன்றமு நம்பதி யென்றுணரே"

(திருச்சிற்றம்பலச் சருக்கம், 79)

என்னும் சிதம்பரபுராணச் செய்யுளாலும் புலப்படுகின்றது. இவற்றைநினைந்த இந்நூலாசிரியரும், "அறவர் வழுத்துந் திருமுதுகுன்றர்" (83) என்றும், "செறிமா தவர்வாழ் திருமுதுகுன்றர்" (91) என்றும், "முனிவோர் பரவுந் திருமுது குன்றினர்" (144) என்றும், "துறவிக் குலங்க டொழுமுது குன்றர்" (172) என்றும் பாராட்டுகின்றார்.

பழமலைநாதரை, "புலனவியாத துரிசினர்க்கும், பிறவி யொழிக்குந் திருமுது குன்றர்" (161), "கலர்கண்டு முத்தி பெறுமுது குன்றர்" (193), "கல்சுஃறினுஞ்சுத்த மாக்கு முதுகுன்றர்" (326) என்று கூறுவதால் அவருடைய பெருங்கருணைத் திறத்தைப் புலப்படுத்துகிறார்.

உவமைகளாகவும் பிறவாறாகவும் இந்நூலாசிரியர் அங்கங்கே அமைத்துள்ள மக்கள் இயல்புகளும், பொருள்களின் இயல்புகளும், உலகவழக்கங்களும், நீதிகளும், பழையவரலாறுகளும் பல.

## ரு. பெரியோர் முதலியவர்கள் இயல்பு.

'பெரியோர் மொழிகள் வழுவிலர்' (27), 'அறிவிற் பெரியர் மொழிபிறழார்' (290), 'ஏரார் பெரியரைக் காணின் இகத்தினும் இன்பமுண்டு' (398), 'பெரியோர் சிறியோரிடம் வருகுவரோ' (406) என்பவற்றாற் பெரியோர் இயல்புகளையும், 'மன்னர்கள் அருளும் துயரும் ஆக்குதல்போல்' (5), 'வெங்கோ லரசன் கொடுமையை வேறொரு செங்கோலரசனழிக்குந் திறம்போல்'(318) என்பவற்றில் மன்னர் செயல்களையும், 'சிறியார் சிறுபொருள் கண்டால் மகிழ்வினைச் சேர்ந்திடல்போல்' (268) எனச் சிறியோர் தன்மையினையும், 'உண்டுடுத் தீயார் பொருள்போன்ற தென்றனுடலழகே' (215),'உன்னார் இறுகும்படிக்கு முடிந்திடும் பொன்னென' (294) என உலோபிகள் இயல்பையும் எடுத்துக் கூறுகின்றார்.

'ஊழும் விலக்கப்படுமே முயற்சி யுறுபவர்க்கே' (19) என முயற்சியின் பெருமையையும், 'ஊழ்வினைவசம் புத்தி' (34), 'நிதி மழை பெய்யினும் நல்வினையில்லார்க்கு நீங்குதல்போல்' (99), 'தம்மைத் தொடர்ந்த வினைப்பயன்' (213) எனஊழின் வன்மையையும், 'ஊழ் பொருந்தும் உடம்புயன்' (302) என அவ்வூழ் தலைவனையுந் தலைவியையும் ஒன்றுபடச் செய்ததென்பதையும் புலப்படுத்துகிறார். 'நெஞ்சுக்குரிய மெய்க்கல்வி' (42) எனக்கல்வியைப்பற்றி இவர் கூறுதல் 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' (ஔவையார்) என்பதன் கருத்தை விளக்குகின்றது. 'பிறவிப்பயன்பெறக் கற்றிட' (410) என்பதனாற் கல்வியின் இன்றியமையாமையையும், 'கற்றார் பயன்பிறர் தீமையைநீக்கல்' (412) என்பதனாற் கல்விப்பயனையும், 'பொறுத்தேயிருந்திடுநாம் புகழ்பெற்றனம்' (407) என்பதுமுதலியவற்றால் பொறுமையாற் புகழுண்டாதலையும் உணர்த்துகின்றார்.

கூ. பறவை தாவரங்களின் இயல்புகள்.

பறவைகள் சிறகிற் பெடையை அணைந்து இன்புறுதல்(172), அசுணப்பறவை பறையொலியினால் வருந்தல் (224), காகத்தின் இருவிழிக்கும் ஒருமணி அமைந்திருத்தல் (244, 374), சகோரம் நிலவையுண்ணுதல் (295) முதலியபறவைகளின் இயல்புகளையும், தாமரை நீரின் நிப்படராமை (24), பயிர்கள் சந்திரனால் வளம்பெறுதல் (64), தாழை மின்னலைக்கண்டு பூத்தல் (114, 386), கள்ளிருளில் நொச்சிமலர் உதிர்தல் (200), மலர்க்கொடி தென்றலால் அலர்தல் (228), நெல்லுங்கரும்பும் நிலவளத்தைப் புலப்படுத்தல் (239), பலாசமரம் பங்குனிமாதத்தில் மலர்தல் (384) முதலிய தாவரங்களின் இயல்புகளையும் இந்நூலில் அங்கங்கே காணலாம்.

எ. உலகவழக்கச் செயல்கள்.

தாம்புக் கயிற்றின் உதவியால் கூவல் நீரைக்கொள்ளுதல் (69), பத்திரங்கொண்டு அருச்சித்தல்(286), மணியைப் பொன்னிற் பதித்தல் (305), தேனிறாலைத்தீக் கொளுத்தி யெடுத்தல் (366), கிணற்றில் விழுந்தபொருளை எடுப்பவர் முதலில் நீர்நிலைபார்த்தல் முதலிய உலகவழக்கச் செயல்களை இந்நூலாசிரியர் உவமை முதலியவைகளாகச் சார்த்தி அறிவிக்கின்றார்.

அ. பழமொழிகளும் உலகவழக்குக்களும்.

இலவுகாத்தகிளி (89), இலைமறைகாய் (197), பாலிற் சுழலுங்

குழல் (250), காற்றைப் பிடித்துக் கரகத்தடைத்தகதை (258), ஊர் வாயைமூட உலைமூடியுண்டோ (313)என்னும் பழமொழிகளை எடுத்தாள்கின்றார். உலகவழக்குத் தொடர்மொழிகளையமைத்து, வருந்துபவர்கள் 'நான் செய்ததீவினை' (198)என்றுநொந்துகொள்ளுதலையும், ஒருவருக்காக ஒருகாரியம் செய்பவர்கள் 'நின்முகத்துக்காகச் செய்தேன்' (366) என்று சொல்லுதலையும், ஒருத்திபுகழுடன் வாழ்தல் 'யாருடையமனைவி' (375) என்று யாரும் கூறுவதாற் புலப்படுதலையும், இரக்கமுள்ளவரென்பதைக் குறிப்பிக்க 'பெண்ணோடுபிறந்தவர்" (418) என்று சொல்லுதலையும் இதன்கட் காணலாம்.

## ௯. உவமைகள்.

தலைவன் முதலியோர் தங்கள்கருத்தை உவமை வாயிலாக உணர்த்தும் முறையில் பல்வகை உவமைகள் காட்டப்படுகின்றன. அவற்றுட் சிலவருமாறு:—

தலைவன் தான் தலைவியினாற் பெற்ற இன்பத்தைப் பிறர் அறியாரென்பதை 'உண்டவர்க்கன்றி உணவின்பம்தெரியாது' என்னும் உவமையாற் புலப்படுத்துகிறான் (43); பாங்கன் தன்னை இடித்துக் கூறியதைக் கேட்டு வருந்தியதலைவன் பாங்கனசெயலை, 'பிணியுற்ற நீள்துயருற்றோர்க்கு வேறோர் பிணி தருதலுடன் ஒப்பிடுகின்றான் (45); அவன் பாங்கி நகைத்துத் தன்னைப் புறக்கணித்தபோது அவள்செயலை, 'நோயுற்ற மெய்யினர்க்கு அந்நோய் மிகவுற நொக்குதலைப்' போன்றதென்கின்றான் (113); தலைவியின் மெலிவுகண்ட தாய் வெறியாட்டுத் தொடங்கியதைத் தோழி, 'இச்செயல் கையில் ஒருநோய் இருக்க அதனை அறியாமல் நன்றாக இருக்கின்ற காலை முடமென்று சொல்லிக்கட்டுக்கட்டுதல் போல இருக்கிறது' என்று சொல்லுகின்றாள் (230); தன்னோடு இன்புற்றிருக்கும் தலைவியைப் பிரிந்து பொருளுக்காகச் செல்லும் தலைவனைப் பார்த்துத் தோழி, 'நின் செயல்சீர்மணி செல்வத்திடை கலிசேர்த்திடு செய்தியைப்போன்றது' எனக்கூறுகின்றாள் (210); தலைவி தன்னைப்பிரிய அதனால் வருந்திய தாய் சிந்தாமணி பெற்று இழந்தவரைத் தனக்கு உவமை கூறிக்கொள்கின்றாள் (331.).

## ௧௦. பழைய வரலாறுகள்.

இதிகாச புராண வரலாறுகள் சில இதில் வந்துள்ளன: இராமர் பொன்மானைத் தொடர்ந்துசென்றது(78), அருச்சுனன் பிடித்த

வில் புகழ்பெற்றதென்பது (367), தமயந்தி நளனுக்கு மாலையிட்டது (377), அவள் அவனுடன் காட்டிற்குச் சென்றது (328), வள்ளிநாயகியாருக்கு நீழல் செய்ய முருகக்கடவுள் வேங்கைமரமாக நின்றது (231), வள்ளிநாயகியார் முருகக்கடவுளோடு சென்றது (330), அவரைத் தெய்வயானை யம்மையார் வெறாமல் மகிழ்ந்தேற்றுக் கொண்டது (403) முதலியவற்றை இதனுட் காணலாம்.

பெரியபுராணத்திலுள்ள வரலாறுகளுள், "அறவர் வழுத்துந் திருமுது குன்றி னமரிறைவர், குறவர் குடித்த புனலமுதாகக் குளிர் சடைமேற், றுறவர் வழுத்த அடைத்தனர்" (83) எனக் கண்ணப்ப நாயனார் இறைவரது திருமுடியில் தம் வாயிற் கொணர்ந்த நீரால் அபிடேகம் செய்ததும், "வனத்தகன்பில் வேடரைப்போற் சுந்தரனை வழிமறித்துத் தனத்தன்பி னாற்கொள் பழமலையார்" (146) எனச் சிவபிரான் சுந்தரமூர்த்திநாயனாரை வழிமறித்துப் பொன் பறித்ததும், "முற்ச்சிக்கை நம்பிகட்செய் முதுகுன்றர்" (314) என ஆவணவோலைகாட்டி அவரை ஆட்கொண்டதும், "பாட்டிற் குரிய வெழிற்சுந்தரற்குப் பரவையினைக், கூட்டியருளுந் திருமுது குன்றர்" (314) என அவருக்குப் பரவைநாய்ச்சியாரை மணஞ் செய்வித்ததும், "பரவைக்குச் சந்து செலுமுதுகுன்றர்" (416) என அவருக்காகப் பரவையிடந்தூது சென்றதுமாகிய செய்திகள் இதில் ஆட்சிபெற்றுள்ளன.

### கக. ஒப்புமை.

இந்நூலாசிரியர் பல பழைய நூல்களிற்கண்ட சொற்றொடர்களையும் அரிய கருத்துக்களையும் அங்கங்கே எடுத்து அமைத்திருக்கின்றனர்.

'ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்'

என்னுந் திருக்குறளைச் சுட்டி, 'ஊழைப்புறங்கருந் தாளென வள்ளுவரோதியதால்' (115) என்றும்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்பதை நினைந்து, 'பொறுப்பார் தமக்குப் புகழலவே சொலும்' (387) என்றும்,

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை"

என்பதைக் குறித்து, 'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மையடைதலில்லா,திகழ்வாரைத்தாங்க னலந்தமிழ் வேதமிசைத்ததுவே' (399) என்றும்,

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"

என்பதைக்கருதி, 'நிலத்திற் கிடந்தமை கால்காட்டு மென்னு நிகழ்மொழிபோல்' (409) என்றும்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்பதை உட்கொண்டு,'சுருங்கிடையாள், அமையாகு மென்றேட் புல்கனைந்தா லு மருந்தினம்'(37)என்றும்அமைத்துள்ள பகுதிகள் இவருக்குத் திருக்குறளின்பா லுள்ள அன்பை விளக்கும்.

இவர் தம் முன்னோராகியசிவப்பிரகாசசுவாமிகள்வாக்கிலிருந்து பலகருத்துக்களை இந்நூலில் எடுத்தாண்டிருக்கின்றார். 'கண்ணளத் தற்கரும் பேமொழி லாள்தனுக் காட்டிலனேற், பண்ணளக்கும் மொழி யாய்தூ ரிகையென்றும் பற்றிலனே' (105) என இவர் கூறுவது,

"எழுதா விடிற்புகழ் வேண்டிய யான்
கையா லெடுத்தது தூரிகை யேயல்ல காரிகையே"

என்னும் வெங்கைக் கோவைச் செய்யுளையும், 'இளங்கதி ரென்ன வெழுமுது குன்றர்' (133) என்பது,

"உதயா திபனென நின்றார்தம் வெங்கையில்"

என்பதையும், 'உண்டுடுத்தீயார் பொருள்போன்ற தென்ற னுடலழகே, (215) என்பது,

"ஈயார் பொருளு மிறையாக் கிணறுமென
......நலமிழந் தேன்"

என்பதையும், 'கரத்திற் படுபிணிக் கின்கான் முடமெனக் கட்டுதல் போல்......வெறியாட்டை மதித்தனளே' (230) என்பது,

"தலைமேற் படுமெறிக் கோர்கான் முடக்குந் தகைமையென்னக்
கொலைமேற் பயிலு மெமர்வெறி யாடல் குறித்தனரே"

என்பதையும், 'நீலக் கருங்குழல் போலிருள் சேர்ந்து நிகழிரவில்' (236) என்பது,

"கொன்காட்டி லுன்குழல் போலே யிருண்டவிக் கூரிருள்வாய்"

என்பதையும், 'ஒருவர் சொல்லாது முக்காலமுமறி நெஞ்சத் தொடர்பினரே' (356) என்பது,

"வெங்கையி லேநற் கடவுடர
முக்கா லமுமுணர்ந் தீர்"

என்பதையும் பின்பற்றி அமைந்திருத்தல் காண்க.

இந்திரன் பலமலைகளையும் சிறையரிந்தவனாயினும் இம்மலையைக் கண்டு அஞ்சுவானென்னும் பொருள்பட,

"புரந்தர னஞ்சு பழமலை வாணன்"

எனப் பழமலையந்தாதியில் அவர்கூறியதன் கருத்தை, பிறமலைகள் இந்திரன் தம் சிறைகளை யரிந்து விடுவானென அஞ்சினும் இம்மலை அஞ்சாதென்னும் பொருள்பட,

"இந்திரற் கஞ்சாத் திருமுதுகுன்றர்" (401)

என இந்நூலாசிரியர் வேறுருவத்தில் அமைத்திருக்கின்றார்.

## கஉ. சொற்களும் தொடர்களும்.

இவர் முல்லைப்பூவைக் கற்பின்றுணையெனுமோர் போது (12) என்றும், அக்கினியை வளியாக்குவோன் (94) என்றும், புகலில்லை யென்னும் பொருள்பட, 'திக்கில்லை'(247)என்றும், திரிதலென்னும் பொருள்பட 'நடமாடுதல்' என்றும் கூறுவர். மறிச்சு (223), சந்திச்சு (319), தெரிஞ்சு (305), நஞ்சு (நைந்து,) என்னும்மரூஉ மொழிகளும்; இன்றிய (12, 87), சொற்பனம் (214), வெய்யில் (266), தளம் (தலம், 292), வாறு (339), அம்மனல் (அழகிய அனல், 361), தேயர் (தேசத்தினர், 397) முதலிய சிலவகைப் பிரயோகங்களும்; நங்குதல் (பழித்தல், 34),சனங்கள் (218, 353, 355), களை (களைப்பு, 219), வரி (புலி, 262), தூறு (இழிவு347), தொலை (நெடுந்தூரம், 348) முதலிய அரும்பதங்களும் இதில் வந்துள்ளன.

பின்னும், இதன்பால் தற்குறிப்பேற்றம்,சிலேடை, விரோதம் முதலியஅணிகளும் அகப்பொருளுக்குரிய இறைச்சி உள்ளுறை யுவமம் முதலியனவும் அங்கங்கே காணப்படும்.

இக்கோவையெழுதியுள்ள ஏட்டுப்பிரதி ஒன்று 40 வருஷங்களுக்குமுன்பு திருமழிசைச் *சிவப்பிரகாசையரென்பவரிட மிருந்து கிடைத்தது. அதன்பின்பு காஞ்சிபுரம் ஸ்ரீகங்காதர முதலியாரென்பவரிடமிருந்த வேறோர் ஏட்டுச் சுவடியைப் பார்த்துச்சிலபாடபேதங்கள் குறிக்கப்பட்டன.

முதலிற் கூறப்பட்ட ஏட்டுச்சுவடியின் முதலில்,

'ஆழத்துப் பிள்ளையார் துணை. குருபாதந் துணை. துறைமங்கலம் கருணைச் சிவப்பிரகாசச் சுவாமியார் குமாரர் சுவாமிநாத சுவாமியா ரருளிச் செய்த பழமலைவாணர் கோவை ரத்தாட்சி௵ ஆவணி௴ ௧௮௳ பூருவ பட்சம் சஷ்டியும் சோமவாரநாள் அனுஷநட்செத்திரமும் கூடினசுபதினம் தனுசுலக்கினத்தில், விருத்தாசலம் தெய்வ சிகாமணி அய்யர் பேரப்பிள்ளை சுவாமிநாத அய்யருக்குப் பழமலைக்கோவை எழுதத்துடங்கினது. சிவகடாட்சம்'

என்பனவும், இறுதியில்,

'ஸ்ரீகுருவசவலிங்காயநம: சிவனேகதி, திருமூலதேவன்றிருவடிவாழ்க. சாலிவாகன சகாத்தம் ௲௬௮௨ ௵ இத்தினமேற் செல்லாநின்றவிக்கிரம௵ கும்ப௴ ௧௧௳ சுக்கிலபட்சம் சதுர்த்தெசியும் ஆயிலிய நட்செத்திரமும் கூடின............பழமலையாரும் பெரியநாயகியம்மனும் மகாரத உச்சப சமையத்திற் பழமலையார் கோவை அரங்கேற்றி நிறைவேறினது. பழமலைநாதசுவாமியார் துணை. பெரியநாயகியம்மன் துணை. சிவகடாட்சம். தேவி சகாயம்'

என்பனவும் எழுதப்பட்டிருந்தன. இவற்றால் இந்நூலாசிரியர் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகளுடைய இளவலாகிய ஸ்ரீ கருணைப்பிரகாசருடைய பரம்பரையினராக இருக்கலாமென்று ஊகிக்கப் படுகிறது.

ஸ்ரீவிருத்தாசலேசர் திருவருளால் இப்பொழுது இக்கோவை குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று. இந்நூல் எளிய நடையில் அமைந்திருத்தலின் குறிப்புரை சுருக்கமாகவே எழுதப்பட்டது. இதனைத் தமது 'சிவநேசன்' பத்திரிகைவாயிலாக வெளியிடுவித்த அப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்களுடைய சிவநேசமும் தமிழன்பும் பாராட்டற்

* இவர் பிற்காலத்தில் திருப்பேரூர் மடத்தில் மடாதிபதியாக வீற்றிருந்தவர்.

பு[illegible]ன; இவ்வாறு இவர்கள் செய்வித்தலானது, இதுவரை வெளிவராத வேறு நூல்களைப்பிரசுரித்தற்கு எனக்குப்பேரூக்கத்தை அளிக்கின்றது.

வழக்கம்போல இதனை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும் பொழுதும் உடனிருந்து தம்மால்இயன்ற உதவிகளை அப்பொழுதப் பொழுது புரிந்துவந்த அன்பர்களுக்கு ஸ்ரீ விருத்தாசலேசர் திருவருளால் எல்லாநலங்களும் அமைய வேண்டுமென்று அப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

(குறள் வெண்பா)

எண்ணலேய் நூற்பணியீ டேற விருத்தகிரி
அண்ணலே என்றும் அருள்.

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
சென்னை. 14-1-35

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்,

உ

கணபதி துணை.

# பழமலைக் கோவை

## காப்பு.

### ஆழத்துப் பிள்ளையார்.

கட்டளைக்கலித்துறை.

1. சீர்தங்கு பூங்கொடி யாகும் பெரியம்மைத் தேவியர்விண்
ஏர்தங்கு நன்முது குன்றர்தங் கோவைக் கினிதருளும்
போர்தங்கு மைவர் கதைகொம்பி னாற்பொற் கிரியெழுதும்
பார்தங்கு பாதளத் தைங்கரத் தானை பதமலரே.

## நூல்.

### க. கைக்கிளை.

காட்சி.

2. பூவும் பொழியும் புயலுங் கயல்களும் பூங்கனியும்
வாவும் பசும்பொற் குடங்களுங் கொண்ட மலர்க்கொடியைப்
பாவும் புகழ்தற் கருஞ்சீர்ப் பழமலைப் பண்ணவனார்
மேவுஞ் சிலம்பினிற் கண்டன மின்று வியப்புறவே. (க)

ஐயம்.

3. வண்டார் திருமல ரோமணி நாகம் வயங்குலகோ
விண்டார் புரங்க ளெரித்தார் பழமலை வெற்பிடமோ
வெண்டா ரலைப்புன லோவிசும் போவிவ் வியன்புவியோ
தண்டார்க் கருங்குழற் செவ்வாய் மடவனந் தங்கியதே. (உ)

---

### குறிப்புரை.

1. பெரியம்மைத் தேவியர் - பெரியநாயகி யென்னும் திருநாமத்தை யுடைய தேவியையுடையவர். பாதலத்து ஐங்கரத்து ஆனை - பாதாள விநாயகர்; ஸ்தலவிநாயகர்; இவர் ஆழத்துப் பிள்ளையாரென்றும் கூறப்படுவார்.

2. பூ - தாமரைமலர்; கனி - கோவைக் கனி.

3. வெண்தார்: தார் - ஒழுங்கு.

துணிவு.

4. ஏலக் கருங்குழல் சேர்முது குன்ற ரெழில்வரைமேல்
நீலக் கருங்கண் ணிமைத்தலும் பூவடி நீணிலத்திற்
கோலப் படுதலு மென்மலர் வாட்டமுங் கொள்வெயர்வும்
சாலப் பொருந்தலி னின்னவ ளிந்நிலஞ் சார்பவளே. (ங)

குறிப்பறிதல்.

5. தெருளும் பொருள்தரு நன்முது குன்றர் செழுஞ்சிலம்பில்
அருளுந் துயரு மகனில மன்னர்க ளாக்குதல்போல்
இருளுங் கருங்குழ லிம்மட மாதி னிணைவிழிகள்
மருளு மெனக்கு மகிழ்வுந் துயரும் வழங்கியவே. (௪)

---

## உ. இயற்கைப் புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கு எண்ணல்.

6. கையார் மழுவர் பழமலை நாதர் கவின்வரைமேல்
மையார் வரிவிழி மானனை யாரை மனமிருத்தின்
நையா நிரக்க வறிவுடை யோர்களு நாமுநெஞ்சே
பையா ரரவல்கு லிம்மாதைக் கேட்கிற் பழியிலையே. (க)

இரந்துபின்னிற்றல்.

7. மின்னார் சடையர் பழமலை வாணர் வியன்சிலம்பிற்
பொன்னு ரெழிலுடைப் பூங்கரும் பேநின் பொருவிழியால்
என்னு ருயிரை வருத்துதல் செய்துன் னெழின்முகஞ்சாய்த்
தொன்னார் புரிதுயர் செய்தா லுனக்கழ கோவிதுவே. (உ)

முன்னிலையாக்கல்.

8. மானீன்ற கண்ணி யிடத்தார் பழமலை வான்சிலம்பில்
தேனீன்ற பூங்குழற் சேடிய ரோடுஞ் செறிமலர்சேர்
வானீன்ற வெற்பிற் சுனைகுடைந் தாடி மருவிலையென்
கானீன்ற கூந்தற் பிறைநுதன் மாதே கழறுவையே. (ங)

---

4. ஏலம் - மயிர்ச் சாந்து.

5. தெருளும் பொருள் - சிவஞானம்.

6. அறிவுடையோர்களும் அவரை இரக்க நையார்; 'அறிவுடையோர்' என்றது, விசுவாமித்திரமுனிவர் முதலியோர்களை நினைந்து.

### மெய்தொட்டுப் பயிறல்.

9. பணியா ரரவைக் கொளுமுது குன்றர் பனிவரையில்
அணியார் முலைக ளிடைமுறிக் கத்தலை யார்ந்திருந்தே
மணியா ரரிகாள் குழற்பூ மதுவுண வைகினிரென்
தணியா ருமது பழியினை யிந்தத் தரணியரே. (௯)

### பொய்பாராட்டல்.

10. தாழுங் குழலுடை யாயுன் முகத்தோர் சசியுறலும்
ஏழும் புவியுந் தொழுமுது குன்ற ரெழிற்சடைமேல்
ஆழும் புனித வறலாடித் தன்மறு வாற்றியுங்கள்
கேழு மடையவன் றேவக லாதவண் கிட்டியதே. (௰)

### இடம்பெற்றுத்தழால்.

11. கொன்றைச் சடையர் பழமலை நாதர் குளிர்சிலம்பில்
வென்றிப் படைவிழி வார்கடல் வீழ்வே தனையகற்றக்
குன்றிற் றிகழ்முலை மீதணை தற்கிக் குளிர்பொழிலே
அன்றிப் பிறிதிலை நெஞ்சுவப் பெய்து மகவிடமே. (௰௧)

### வழிபாடுமறுத்தல்.

12. காதா ரரவக் குழையார் பழமலைக் கண்ணுதலுட்
டாதார மின்றிய வென்மனச் சோகத்தை யாற்றுவிப்பாய்
சூதார் பணைமுலைத் தோகையர் கற்பின் றுணையெனுமோர்
போதார் வழையிற் படர்மா தவியெனும் பூங்கொடியே. (௰௨)

### இடையூறுகிளத்தல்.

13. மாது கவரு மிடத்தார் பழமலை வான்சிலம்பில்
தாது கவரு மரியிரை பூந்துணர்த் தண்பொழில்வாய்
காது கவருங் குழையாய் சுனையிற் கருங்குவளைப்
போது கவரு மெழிலென வோகண் புதைத்ததுவே. (௰௩)

---

9. பணி - ஆபரணம். தலை - கூந்தலில். என் - யாதுகாரணம் பற்றி? அரிகாள் - வண்டுகளே.

10. உறலையும் கேழையும் அடைய; கேழ் - ஒப்பு; மகளிர்க்குச் சந்திரனை உவமைகூறுதல் மரபு.

12. இன்றிய - இல்லாத. கற்பின் துணையெனும் போது - முல்லை. வழை - சுரபுன்னை. மாதவி - குருக்கத்தி.

13. அரி இரை - வண்டுகள் முழங்குகின்ற. குவளைப்போது எழிலைக் கவரு மெனவோ.

நீடுநினைந்திரங்கல்.

14. முத்தாறு சூழு முதுகிரி நாதர் மொழிவரைப்பூங்
கொத்தாறு போற்பசுந் தேன்சொரி சோலைக் குளிர்மனையில்
மொய்த்தாறு கால்வீழ் குழலாய் நுசுப்பின் முலைச்சுமையை
வைத்தாறுகின்றபொழுதுமுண்டோவென்மணிப்புயத்தே(௯)

மறுத்தெதிர்கோடல்.

15. கஞ்சன் றலைகொள் கரத்தார் பழமலைக் காவலர்தம்
நெஞ்சஞ் செறிமயல் நீர்ப்பெரு வெள்ள நிலைதடுக்கத்
தஞ்சஞ் செறிநிறை யாங்கரை நின்று தடுப்பரிதால்
நஞ்சஞ் சுவதென் மனமே தவஞ்செய்து நண்ணிலமே. (௧௦)

வறிதுநகைதோற்றல்.

16. தேன்வீழுஞ் சோலைப் பழமலை வள்ளல் திருச்சிலம்பில்
மான்வீழுங் கண்ணிவள் பின்னே திரிந்துற வாடியவனை
தான்வீழும் வேலவன் வீணெனை வுன்ன லொழிப்பதற்குக்
கான்வீழுங் கூந்தல் வறிதுபுன் மூரலைக் காட்டினளே. (௧௧)

முறுவற்குறிப்புணர்தல்.

17. முன்னீர் குடிக்கு முனிதாழ் பழமலை முத்தர்வெற்பில்
பொன்னு ரெழிலி முகமா கியவிப் புதுமதியின்
மின்னார் கிரண மெனுங்குறு மூரல் விளங்குதலால்
என்னு ருயிரெனு மைவார் குவளை யெழில்பெற்றதே. (௧௨)

முயங்குதலுறுத்தல்.

18. செங்நெற் செறிபணை சூழும் பழமலைத் தேவர்வெற்பில்
கன்னற் சிலையை மதன்முறித் தோய்ந்திடக் கண்டனன்யான்
மின்னற் கருமழை மாமுகில் சூழும் வியன்பொழில்வாய்ப்
பன்னற் கரிய பணைமுலை போகம் பலித்தபின்னே. (௧௩)

---

14. முத்தாறு - மணிமுத்தா நதி.

15. நஞ்சு - நைந்து.

16. இது கவியின் கூற்று.

17. வில்வலன் வாதாவிகளைக் கொன்றதனால் வந்த பழியை இத்தலத்தில் இறைவனை வழிபட்டு அகத்திய முனிவர் போக்கிக்கொண்டனரென்பது இத்தலபுராண வரலாறு. எழிலி - எழிலை உடையவள்; 50.

18. போகம் - இன்பம், விளைவு.

புணர்ச்சியின் மகிழ்தல்.

19. தாழு மவர்க்கருள் செய்முது குன்றர் தடஞ்சிலம்பில்
சூழு முலகினிற் றுளா லிவள்நற் றுணைமுலைகள்
வீழும் புலன்வழி மேவின மென்றால் வியன்புவியில்
ஊழும் விலக்கப் படுமே முயற்சி யுறுபவர்க்கே. (கச)

புகழ்தல்.

20. வளவே ருழுவயல் சூழ்முது குன்றர் மணிவரையெங்
களவே ருறுங்குழற் செவ்வாய்க் கருவிழிக் காரிகைதன்
இளவே ருறுதன மொப்பத் தலைகீ ழியல்தவத்தால்
இளவே ருறுதலி ஞலிள நீரென் றியம்பினரே. (கரு)

---

## ௩. வன்புறை.

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்.

21. ஏறூர் கொடியர் பழமலை வாண ரிருஞ்சிலம்பில்
வீறூர் புணர்முலை மெல்லிய லேநின் விளங்கிழையார்
கூறூ ரணியிது வேறென வையங் குறித்திடனீ
வேறூர் புகல்வதென் னணச்ச நீங்கி விளங்குகவே. (க)

பெருநயப்புரைத்தல்.

22. தண்ணூர் மலர்ப்பொழில் சூழ்முது குன்றர் தடஞ்சிலம்பில்
விண்ணூ ரமுதற ழென்னுயி ராமிவர் மெல்லிடைமேற்
கண்ணூர் கருமுக வாண்முகை போலுங் கயத்தினிடைப்
பண்ணூ ரிசையளி காள்கண்ட துண்டேற் பகருவிரே. (உ)

தெய்வத்திறம்பேசல்.

23. பாரும் விசும்புந் தொழுமுது குன்றர் பனிவரைமேல்
நீருங் குளிர்ச்சியு நீங்காத வாறெமை நேரிழைவிண்
சேரு மலையிடைக் கூட்டிய வூழைச் சிதைப்பவரார்
ஆருந் தளிர்நிற மேனியென் வாடி யயர்வதுவே. (௩)

---

19. தாளால் - முயற்சியால்.
20. களவு - களாப்பழம். இள ஏர் - இளமையழகு.
21. விளங்கிழையார் - தோழிகள்.

பிரியேனென்றல்.

24. சங்கார் பணைசூழ் பழமலை வாணர் தடஞ்சிலம்பில்
கொங்கார் மலர்க்குழற் கொப்பனை யாய்நினைக் கூடியும்யான்
தங்கே னொருநொடிக் காலம தாயினுந் தங்கியிடிற்
பங்கே ருகங்க ளறலின்றி யெங்கும் படர்ந்திடுமே. (௪)

பிரிந்துவருகென்றல்.

25. சூலார் வளைகள் வயலூர் முதுகுன்றர் தொல்வரைமேற்
காலால் மரப்பூம் பணையசைந் தாடல் கடுத்திடயான்
சேலார் பிறழ்கண்ணி நீவிளை யாடிவண் சென்றடைவன்
மாலா ருயர்பூந் துணர்செறி சோலை மருங்கினுக்கே. (௫)

இடமணித்தென்றல்.

26. மலைபெற்ற கன்னி யிடத்தார் முதுகுன்றர் வான்சிலம்பிற்
சிலையுற்ற விற்புரு வத்தா யுனது செவிவிழிகள்
நிலையுற்ற தம்மிடங் கூடிய தென்னவென் னெய்தலுமுன்
அலைவற்ற நன்மலைச் சாரலுஞ் சேர்ந்திங் கணுகியவே. (௬)

## ௪. தெளிவு.

27. விண்ணிற் சிறந்த திருமுது குன்றர் வியன்சிலம்பில்
மண்ணிற் பிறந்த பெரியோர் மொழிகள் வழுவிலவென்
றெண்ணிப் பிரிந்த வெனைமற வாதங் கிருந்துவிடார்
கண்ணிற் சிறந்த மணிபோல் வருவர்நங் காவலரே.

## ௫. பிரிவுழி மகிழ்ச்சி.

செல்லுங் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்.

28. தேனுண்ட வண்டு குழன்மே லெழுந்து சிறிதலம்ப
மானுண்ட கண்ணி னெழுதிய மைநுதல் வேர்வழிப்பக்

---

24. பங்கேருகங்கள் - தாமரைமலர்கள். அறல் - நீர்.

25. மால் ஆர் - மேகங்கள் நிறைந்த. யான் சென்றடைவ னென்க.

26. சிலையுற்றவில் - சிலைமரத்தாற் செய்யப்பட்ட வில்; சிலை - ஒருமரம்; "அரிமா னிடித்தன்ன வுஞ்சிலை வல்விற், புரிநாண்புடை" (கலி - கரு: க - உ) என்பதன் உரையா லுணர்க; ஒலித்தலுமாம்.

கீரனுண்ட சோலைப் பழமலை வாணர் கவின்வரைநம்
ஊனுண்டவேற்கண் ணுயிர்செல்லனெஞ்சேயுரைப்பரிதே. (க)

பாகனொடுசொல்லல்.

29. விடங்கொண்ட கண்டர் பழமலை வாணர் வியன்வரைப்பொற்
குடங்கொண்ட தான்றனி கான்வழி போகக் குலைந்ததுளம்
திடங்கொண்ட வாயத்தை நோக்கிப்பின் பார்த்தவள் செல்வதுபார்
படங்கொண்ட வெல்கொடித் திண்டேர் செலுத்துறும் பாகவின்றே.
(உ)

## ௩. பிரிவுழிக் கலங்கல்.

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்.

30. முகமைந் துடைய பழமலை நாதர் மொழிவரைமேல்
நகனைந் துறவெழு கொங்கையர் நாப்ப ணணுகுமிவள்
அகனைந் துறவெனை யிங்கே மருவ வணைந்ததுதான்
சகனைந் துறவெழு மிந்திர சாலத் தரமதுவே. (க)

வாயில்பெற்றுய்தல்.

31. மழைதாழ் பொழில்புடை சூழ்முது குன்றர் மணிவரைமேல்
இழைதாழ் குவிமுலை யென்னுயிர் வாட்கண் ணெனையருளக்
கழைதாழ் பசுந்தோ ளொருமட மாதின் கவினெழில்சேர்
குழைதாழ் முகத்திற் குடியிருந் தேயன்பு கொண்டதுவே. (உ)

பண்புபாராட்டல்.

32. கொழிக்குந் தரளமுத் தாறுடை யார்தங் குளிர்வரைமான்
விழிக்கு முலைக்கு மலையுயர் விந்தம் விளம்பிடினேர்
அழிக்கு மவைகள் குறுமுனி கையா லடக்கலினைப்
பொழிக்கு முகமதி பொன்னார் மதிதேய்ந் துறுதலினே. (௩)

---

29. தான் என்றது தலைவியை. குழைந்தது உள்ளம். திடங்கொண்ட - தைரியத்தைப் பெற்ற. படம் - ஆடை.

30. நகம் - மலை. கொங்கைய ரென்றது பாங்கியரை.

31. உயிர் வாள் கண் - உயிர்போன்ற தலைவியினது வாளைப்போன்ற கண்.

32. அலை - கடல். விந்தம் - விந்தகிரி. நேர் அழிக்கும்; நேர் - ஒப்பு. முகமதி மதியின் ஒப்பை ஒழிக்கும்.

பயந்தோர்ப்பழிச்சல்.

33. அரந்தை யகற்றுந் திருமுது குன்ற ரணிவரைமேல்
இரந்தென தாவிக் குறுதுணை யென்ற வெனக்கருளி
வரந்தரு மாதைப் பயந்திடு தந்தையு மாலனையும்
புரந்தா ருக சசியாக விந்தப் புவியிடையே. (௪)

கண்படை பெருது கங்குல் நோதல்.

34. பங்கே ருகத்தடஞ் சூழ்முது குன்றர் பனிவரைமேற்
சங்கோர் கவற்றுங் களத்தா ரளித்த தணிவிலின்பம்
நங்கா விழிதுயில் யாமத்து மேவி நலிவுசெய்தாற்
பொங்கூழ் விதிவசம் புத்தியென் றோதுறல் பொய்யலவே. (ரு)

---

எ. இடந்தலைப்பாடு.

தந்த தெய்வந் தருமெனச் சேறல்.

35. ஆற்றில் விடுத்த பொருள்குளத் தேயுற வன்றுநம்பி
வீற்றி லிருக்க வருண்முது குன்றர் வியந்தருளும்
போற்றிவ் விரைசெறி காவகத் தேமுன் பொருத்துதெய்வம்
காற்றில் வருமழை போலநெஞ் சேயினுங் காட்டிடுமே. (க)

காண்டல்.

36. பெண்ணுங் கருங்கல மாம்பெரி யம்மையைப் பெட்பொடுபால்
நண்ணிக் கருங்களஞ் சேர்முது குன்றர் நவில்சிலம்பில்
விண்ணிற் கருங்கல மாகிய மாதரை மேவலொத்துக்
கண்ணுக் கருங்கல மாகுமிம் மாதரைக் கண்டனமே. (உ)

முயங்கல்.

37. எமையாளு மையர் பழமலை வாண ரிருஞ்சிலம்பில்
சுமையா கியமுலை யாற்றினந் தேய்ந்து சுருங்கிடையாள்
அமையாகு மென்றோட் புலன்களைந் தாலு மருந்தினமவ்
விமையோரு மென்போற் றவம்புரிந் தார்க ளிலையிலையே. (௩)

---

33. இரந்து நீ துணை என்ற எனக்கு; நீ என்ற ஒருசொல் வருவிக்க.

34. நங்கா - பழிக்கப்படாத.

35. நம்பி - சுந்தரமூர்த்தி நாயனர். வீற்றில் - கவலை இல்லாதநிலையில்.

37. விண்ணோர்கள் கட்புலம் ஒன்றினலேயே இன்பம் நுகர்வரென்பது நூல்வழக்கு; இதனைச் சிந்தாமணியில், உஉஉ, உ௲உ - ஆம் பாடல்களாலும் அவற்றின் உரைகளாலு முணர்க.

புகழ்தல்.

38. ஆவிக் குறுதுணை யாமுது குன்ற ரணிவரையாள்
காவிச் செழுமல ரொவ்வா திலங்குங் கவின்விழிகள்
தூவிக் கணையையுஞ் சொல்வே லினையுந் துரப்பதனால்
வாவிக் கயல்கள் வளஞ்சேர்ந் திமைத்தலை மாற்றியவே. (௪)

---

அ. பாங்கற் கூட்டம்.

தலைவன் பாங்கனைச் சார்தல்.

39. தணிக்கும் பவத்தர் தொழுமுது குன்றர் தடஞ்சிலம்பில்
அணிக்கு மழகு பொருத்து மெழிலுடை யாயிழையார்
பிணிக்குப் பகர்மருந் தாகுந் துணைவனைப் பெட்புறுவோம்
குணிக்கும் புலத்துயர் கொள்ளனெஞ் சேயுன் குறையொழியே. (க)

பாங்கன் தலைவனை உற்றது வினுதல்.

40. ஏற்றுக் கொடியர் பழமலை யீச ரெழிலடியைப்
போற்றித்தொழுகிலர்காலன்முன்வாடிப்பொருந்துதல்போல்
வேற்றுப் படிவமுந் துன்படை நெஞ்சமு மேவினையால்
தோற்றிப் பிழைவரவென்னோவென்காவல சொல்லுகவே. (உ)

தலைவன் உற்றதுரைத்தல்.

41. சுருதிப் பொருளர் பழமலை யீசர் சுடர்க்கிரிமேற்
பருதிக் கதிர்நுழை யாப்பொழிற் சூழலொர் பைந்தொடிதன்
பொருதிக் கணையொடு நீள்விழி வார்கடல் போந்தழுந்தி
வருதிக் கறிகில னன்பவென் னெஞ்ச மயங்கினனே. (௩)

தலைவனைப் பாங்கன் கழறல்.

42. நஞ்சுக் குரிய மிடற்றுூர் பணியி னகமுயிர்த்த
வஞ்சிக் குரிய பழமலை வாணர் மணிச்சிலம்பா
மஞ்சுக் குரியபொன் மின்கொடி போல்பவள் வாள்விழியால்
நெஞ்சுக் குரியமெய்க் கல்வியை நீக்குத னீதியன்றே. (௪)

---

38. இமைத்தலை - பிரகாசித்தலை. விழிகளானவை மாற்றின.

39. ஆயிழையார் பிணி - தலைவியால் உண்டான பிணி. துணைவனை - பாங்கனை. பெட்புறுவோம் - விரும்புவோம்.

40. படிவம் - வடிவம்.

41. இக்கணையொடு பொருது.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

43. விண்டுவந் தேத்தும் பழமலை வாணர் வியன்சிலம்பில்
உண்டுவந் தோர்க்கன்றி மற்றோர்க்கவ் வின்ப முணர்வரிதால்
வண்டுவந் தார்க்கு மலர்வார் கருங்குழன் மாதினைநீ
கண்டுவந் தாற்பின் னவமதிப் பாயலை கல்வியனே. (௫)

பாங்கன் கிழவோற்பழித்தல்.

44. சங்கந் தவழ்வயல் சூழ்முது குன்றர் தடஞ்சிலம்பிற்
சிங்கஞ் சிறுநாற் பிணிப்புண் டிருந்தெனத் தெவ்வடுதோட்
டுங்கந் துறந்தனைப் போன்றவர் நெஞ்சிற் றுணிவொழிதே
அங்கந் தளருத லோர்மானுக் காக வணியலவே. (௬)

கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்.

45. அணியுற்ற நீள்மறு காரும் பழமலை யார்சிலம்பில்
பிணியுற்ற நீள் துயரு ற்றோற்கு வேறோர் பிணிதரல்போல்
மணியுற்ற வார்குழற் கண்வலைப் பட்டு வருந்தெனைநீ
தணிவற்ற நெஞ்சொடு நண்ப தகாமொழி சாற்றினையே. (௭)

பாங்கன் தன்மனத்தழுங்கல்.

46. கைந்நாக கங்கணர் நன்முது குன்றர் கவின்சிலம்பில்
மைந்நாகம் வங்கக் கடன்மூழ்கல் போலநம் மன்னுளமாம்
கைந்நாக மாமலை மூழ்கி வெளிப்படக் கண்டிலமால்
பைந்நாக வல்குற் படாமுலை யாள்கட் பரவையிலே. (௮)

பாங்கன் தலைவனோடழுங்கல்.

47. குலைசாய் கதலிகள் சூழ்முது குன்றர் குளிர்சிலம்பில்
சிலைசாய் புருவ வொருமாதுக் காகச் செறிகதிர்ச்செங்
குலைசா யயிற்கரத் தண்ணலுன் கல்வி குணங்குன்றுமேல்
மலைசாய் வுறினிலை வைப்பவ ராரிந்த வையகத்தே. (௯)

பாங்கன் அஃது எவ்விடத்து எவ்வியற்றென்றல்.

48. * * * * * * (௧0)

---

46. கைந்நாகமென்றது மலைக்கு விசேடணம்.

47. கதிர்ச் செங்குலை - கிரணக் கொத்து.

48. * இச்செய்யுள் எனக்குக் கிடைத்த பிரதிகளில் இல்லை.

தலைவன் அஃதிவ்விடத் திவ்வியற் றென்றல்.

49. களவே கருங்குழல் வேலே விழிகள் கலைமதியின்
பிளவே நுதலென் னுயிரா கியவொரு பெய்வளைக்கு
வளவேய் செறியும் பழமலை வாணர் மணிச்சிலம்பே
உளமே பொருந்து மிடமாகு நண்ப வுரைத்திடினே. (கக)

பாங்கன் இறைவனைத் தேற்றல்.

50. பொருந்தா ரரணம் பொடித்தோர் முதுகுன்றர் பூஞ்சிலம்பில்
முருந்தார் சிறுநகைச் செவ்வாய் முகிண்முலை மொய்குழல்சேர்
திருந்தா ரெழிலியைக் கண்டிங்கு வந்து செறியளவும்
இருந்தார் மணிப்புய நோவாம னீயிங் கிருந்தருளே. (கஉ)

பாங்கன் குறிவழிச் சேறல்.

51. கண்ணார் நுதலர் பழமலை வாணர் கவின்சிலம்பில்
நண்ணார்ச் செருத்த வயில்மன்ன னெஞ்ச நலிவுசெய்த
பெண்ணா ரமுது மலர்ப்பொழில் சேர்ந்து பிறங்கிடுமோ
தண்ணார் சுனையின் விளையாடி யிந்தத் தனிப்புனத்தே. (கங)

பாங்கன் இறைவியைக் காண்டல்.

52. மின்னே யிடைபொன் மலையே முலைகள் வியன்முகிலே
மன்னோர் குழல்கள் பெறுமிவள் நம்முடை மன்னவன்சொல்
பொன்னே யிருவர் வழுத்து முதுகுன்றர் பூஞ்சிலம்பில்
தன்னே ரிலாத விடமாகு மிந்தத் தடம்பொழிலே. (கச)

பாங்கன் இகழ்ந்ததற்கு இரங்கல்.

53. பணையார் தடங்கள் செறிமுது குன்றர் பனிவரைமேல்
துணையார் குவிமுலைப் பாரத்தி னெல்கித் துவளிடையும்
கணையா ரெழி லுடைத் தோளு முடையவிக் காரிகைதன்
பிணையார் விழிவலைப் பட்டா லெவர்திடம் பெற்றவரே. (கரு)

பாங்கன் தலைவியை வியத்தல்.

54. விரையார் மலர்ப்பொழில் சூழ்முது குன்றர் வியன்சிலம்பில்
வரையார் தடந்தோ ணமதிறை காம வளர்பிணிக்குத்

---

50. எழிலி - அழகுடையவள்.
53. கணை - திரட்சி.

தரையா ரமுதுற ழிம்மட மாதின் றனிவிழிசேர்
உரையா ருண்மருந் தல்லாற் பிறமருந் தொன்றிலையே. (கசு)

பாங்கன் தலைவனை வியத்தல்.

55. இசையார் பெருவளஞ் சூழ்முது குன்ற ரெழில்வரையில்
நசையார் வனப்புறு மிம்மட மாதி னகைமுகத்தின்
மிசையார் விழிவச் சிரத்தால் மதனெனும் வேந்தெறிய
அசையா திருந்ததெவ் வாறெம் பிரான்ற னகமலையே. (கஎ)

பாங்கன் தலைவனுக்குத் தலைவிநிலை கூறல்.

56. பிறைகொண்ட செஞ்சடை நன்முது குன்றர் பெருவரையாய்
கறைகொண்டவேல்விழிசெவ்வாய்புணர்முலைகாம்புறழ்தோள்
சிறைகொண்ட வேரி னவயவம் பெற்றுநின் சிந்தையின்கண்
நிறைகொண்ட பூங்கொம்பு சோலையி லேதனி நின்றதுவே. ()

தலைவன் குறிவழிச் சேறல்.

57. பந்தங் கெடுத்தெனை யாண்முது குன்றர் பணிவரையில்
அந்த மலர்ப்பொழிற் சூழலி லென்னுயி ரம்புயமும்
சந்த முறுஞ்செங் கனியுங் குவளையுந் தானணிந்து
வந்திங் குறத்தனி நின்றிடு மோதவ வன்மையினே. (கசு)

தலைவன் தலைவியைக் காண்டல்.

58. சூலார் முகில்படி காமுது குன்றர் சுடர்க்கிரிமேல்
சேலார் வரிவிழிச் செங்கனி வாயித் திருந்திழையாள்
நூலா ரிடையைத் தனங்கள் வருத்த நுவல்பொழிலில்
மாலா ரெழிலியை நோக்குறு மஞ்ஞையின் மன்னினளே. (உ0)

கலவியின் மகிழ்தல்.

59. பாம்பா கியபணி பூண்முது குன்றர் பணிவரையில்
காம்பா கியதோ ளமுதனை யாடன் கனிரிதழின்
தீம்பா கியலமு துண்டிமை யோருணுந் தெள்ளமுதம்
வேம்பா கியதெனி னென்போல வாரின்ப மேவினரே. (உக)

---

55. வேந்து - இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" தொல் அகத்திணை. சூ. 5.

57. உயிரென்றது தலைவியை.

58. மால் - பெருமை.

புகழ்தல்.

60. விண்கொண்ட சீருடைத் தென்முது குன்றர் வியன்சிலம்பில்
பண்கொண்டமென்மொழியாம்பலஞ்செவ்வாய்பழுத றுமோர்
தண்கொண்டமென்மலர்ப்பூந்தொடைவேய்ந்திடுதாழ்குழலின்
கண்கண்ட பின்னல வோகணை வெந்நிடக் கண்டதுவே. (உ௨)

தலைவன் தலைவியைப் பாங்கியோடு வருகெனப் பகர்தல்.

61. காரு மதியுந் தவழ்மாட வீதிக் கவின்முதுகுன்
றுரும் புரிசடைத் திங்களங் கண்ணி யமலர்வெற்பில்
நீரு நிழலு மணித்தாகி வெம்மையை நீக்குதல்போல்
சேருங் கனங்குழை நின்பாங்கி பின்வரச் சேர்ந்தருளே. (உ௩)

தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

62. உழைகண்ட கையர் பழமலை யீச ருயர்சிலம்பில்
மழைகண்ட மஞ்ஞை மகிழ்வது போல மணிகுயின்ற
இழைகண்ட கொம்மை யிளமுலை யாயுனை யேத்தியுறும்
குழைகண்ட கண்ணினர் சூழலிற் சென்று குறுகுவையே.(உ௪)

---

## ௯. பாங்கி மதியுடன்பாடு.

பாங்கி ஐயமுற்றோர்தல்.

63. அடியார் பிறவி யகற்றும் பழமலை யண்ணல்வெற்பிற்
படியார் சுனைபடிந் தாடலிற் கண்செம்மை பற்றியதோ
கடியார் பொழின்மலர் கொய்தத னாலோ கனைவிழிசேர்
துடியா ரிடையினர் வண்டலி னேமெய் துவண்டதுவே. (௧)

ஐயந் தீர்தல்.

64. பைங்குவ ளைத்தடஞ் சூழ்முது குன்றர் படர்சடைமேற்
றங்கு வளத்தினும் பைங்கூழ்க் கமுது தருதலினும்

---

60. அம்புகள் அம்பறாத்தூணியிற் போடப்பட்டு முதுகிற் றூங்கப்படுவ தனால் 'வெந்நிடக்கண்டது' என்றார்.

61. அணித்தாகி - ஒன்றற்கொன்று சமீபித்ததாகி.

63. படி - ஒப்பு; படிதலுமாம்; படிதல் - நீராடுதல்; முதனிலைத் தொழிற்பெயர். கடி - மணம். வண்டல் - மகளிர் விளையாட்டு.

பொங்கு திரைப்பாற் கடலிற் பிறந்த புதுமையினும்
செங்கை*குவித்துப் பிறைதொழ வேண்டுந் திருந்திழையே.(௨)

சுனைவியந்துரைத்தல்.

65. நீர்மேவு செஞ்சடைச் சீர்முது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
றூர்மேவு கூந்தலின் மாதே நினதிதழ் சார்சிவப்பும்
கூர்மேவு வாட்கண் கருமையுங் கொண்டுன் குழலிடத்தில்
ஏர்மேவு முல்லை புனைந்த சுனையி னிடமெதுவே. (௩)

சுனைநயப்புரைத்தல்.

66. நஞ்சார் மிடற்றர் பழமலை நாதர் நவில்சிலம்பில்
மஞ்சார் குழலி நுதற்குறு வேர்வும் வருவனப்பும்
பஞ்சா ரடிநின் னுடல்போல் வருமேற் புகர்சுனைநீர்
நெஞ்சார வாடி யுனைப்போல் வரவே நினைகுவனே. (௪)

தகையணங்குறுத்தல்.

67. விண்ணிற் சிறந்த விருத்தா சலத்தர் வியன்சிலம்பிற்
கண்ணிற் சிவப்புங் கவிரிதழ் வெண்மையுங் காட்டிலையேற்
பெண்ணிற் சிறந்த வவளை மறைத்துன்னைப் பேசனுமாம்
நண்ணிற் சிறந்த வவள்வந்த பின்னர் நடந்தருளே. (௫)

நடுங்க நாட்டம்.

68. நந்திக் கொடியுடை நம்முது குன்றர் நவில்சிலம்பில்
அந்திப் பிறைநிகர் கூர்ங்கோடு மார்பி லழுந்தும்வகைத்
தந்திப் பெருமலை பாய்ந்தது சீறியத் தந்திசெந்நீர்
சிந்திச் சிதைய வடர்த்தான்கை வேல்கொண்டோர் சேவகனே. (௬)

தலைமகன் பாங்கியை இரவுவலியுறுத்தல்.

69. பாம்பை யடுத்த சடைமுது குன்றர் பனிவரைமேற்
றும்பை யடுத்து மணிக்கூவ னீரைத் தருபவர்போற்

---

64. கூழ் - பயிர்; பைங்கூழ்க்கு அமுது தருதல்: சந்திர கிரணத்தால் பயிர்களுக்குக் கரு உண்டாகுமென்பர்; "மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பதுன் னிடத்தம்மை வைத்திடுஞ் சத்தியேகாண்" மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழ், அம்புலிப். 5.

66. பஞ்சு ஆர் அடி - செம்பஞ்சுக்குழம்பை அணிந்த அடி; பஞ்சை ஒத்த அடியுமாம்.

67. விண்ணின் - சிவலோகம் போல.

தீம்பை விடுத்த விவள்வா யமுதுண்டு சேர்வதற்குக்
காம்பை யடுத்தகற் றேட்பாங் கியைத்தனி காண்குவமே. (எ)

பாங்கியை ஊர் வினுதல்.

70. செத்தார் பிறவாத் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
இத்தீர் மலையிற் றனியன் புனத்துக் கியல்புதியேன்
எய்த்தார்க் கருளு முமதா கியபதி யெவ்விடங்காண்
கொத்தார் மலர்க்குழற் கொம்பனை யீர்நின்று கூறுவிரே. (அ)

பேர் வினுதல்.

71. விரிக்குந் தலையுடைத் தாழையு மாவும் வியக்கமுகும்
நெருக்கும் பொழில்புடை சூழ்முது குன்றர் நெடுஞ்சிலம்பில்
இருக்கும் பதிப்பேர் சொலல்பிழை யேனு மிலங்குறுநீர்
தரிக்கும் பெயரா யினுமட வீர்சொலத் தக்கதுவே. (கூ)

கெடுதி வினுதல்.

72. முன்னீர் பருகு முகிலுழ் முதுகுன்றர் மொய்வரைமேல்
மன்னீர் வடிக்கணை பாய்விசை யாலொரு மான்கலைமெய்
செந்நீர் விழுபுண் மருவப் புனத்தினிற் சேர்ந்ததுண்டோ
பொன்னீர் தெளித்த பொறிசுணங் கார்முலைப் பூவையரே. (கo)

மொழியாமை வினுதல்.

73. பிளவு மதியணி நன்முது குன்றர் பெருவரைவிண்
அளவு பிறைநுதன் மங்கைய ரேயும் மவிர்நகையேர்

---

69. கூவல் - கிணறு: தீம்பு - கீழ்மை; "தீம்பாய், மறக்குமோ" என்றார் கம்பர். காம்பு - மூங்கில்.

70. செத்தார் பிறவாத் திருமுதுகுன்று: "தூசினு லம்மை வீசத் துடையின்மேற் கிடத்தித் துஞ்சும், ஆசிலா வுயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி, ஈசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக், காசியின் விழுமி தான முதுகுன்ற வரையுங் கண்டான்" (கந்தபுராணம், வழிநடைப். 13), "நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு நல்கிய தந்தையுந் தாயும் நம்பனு நீயு மல்விர்நும் மூர்க்கே நவின்றவம் முறையுளீர் நீவிர், பாடியா ரணஞ்சொலீண்டுமாய் வனதாம் பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப் பழமலை தனது பெயர்வலக் காதிற் பகர்ந்தருள் செயப்பெறுஞ் செயலால்" (பெரியநாயகியம்மை விருத்தம், 6 ) என்பவற்றாலும் இது விளங்கும்.

72. விழு புண்: வினைத்தொகை. 73. ஏர் - அழகை.

விளைவு தருபுனல் வேலையில் மேவு வியன்றளம்
களவு கொளுமென வோமொழி யொன்றுங் கழறிலிரே. (கக)

இவர்மனத் தெண்ணம் யாதெனத் தேர்தல்.

74. நீரும் பிறையு மணிமுது குன்றர் நெடுவரையும்
ஊரும் பெயருஞ் சொலுமென்பர் பின்ன ருயர்கலையோன்
ருரும் கணையுடன் வந்ததுண் டோவென் றறைகுவர்நீர்
ஒரு மொழியிலி ரென்பரென் னேவிவ ருட்கொளலே. (கஉ)

எண்ணந் தெளிதல்.

75. இன்று ரிவரென் றறிந்தில முன்ன ரெமையறியார்
மின்னார் சடையர் பழமலை வாணர் வியன்வரையீர்
பன்னீர் பதியெனப் பேசிப் பிறிது பகர்வதெல்லாம்
பொன்னு ரிவள்பொருட் டென்றென் மனத்திற் பொருந்தியதே.(கரு)

கையுறை ஏந்தி வருதல்.

76. தாவு முழைகொள் கரத்தார் பழமலைத் தண்சிலம்பிற்
காவும் பொறியு மொருங்குடன் வைகிக் கலந்துறல்போல்
மேவுந் தலைவி யிருளையைச் சார்ந்த வியலிடநம்
நோவும் பரிவு மிதுவே யமைதி நுவலுதற்கே. (கச)

தலைவன் அவ்வகை வினுதல்.

77. மறையார் புகழுடை மாமுது குன்றர் மணிவரைமேற்
பிறையார் நுதலுடைப் பெய்வளை யீர்நும் பெரும்புனத்தே
கறையார் கணைபாய் துயரிற் கலங்கிக் கடுவிசையாற்
குறையார் மனத்தொர் கலைவந்த தோவிங்குக் கூறுவிரே. (கரு)

பாங்கி தலைமகற்கு எதிர்மொழி கொடுத்தல்.

78. மன்மா லறியாப் பதமுது குன்றர் மணிவரைமேற்
பொன்மான் றொடரும் புயல்வண்ணன் போலிப் புனம்வருவீர்
வின்மால் கணைபட வெய்துயிர்த் தஞ்சி வெருண்டெழுந்த
வன்மான் கலைதனி வந்திடக் கண்டு வதிந்திலமே. (கசு)

---

75. பதி பன்னீர் - ஊரைச் சொல்லுங்கள். பொன் ஆர் - திருமகளை ஒத்த.

76. கா - சோலை. பொறி - வண்டு. இருளை - தோழி.

77. கறை - இரத்தம்.

78. புயல் வண்ணன் - இராமன்.

பாங்கி இறைவனை நகுதல்.

79. சிலையுங் கணையுங் கரத்திற் பிடிக்கிலர் சேணயன்மால்
தலையு மெலும்பு மணிமுது குன்றர் தடஞ்சிலம்பிற்
கலையு மிவர்மனக் கள்ளத்தைப் பெற்றது கட்டுரைக்கிற்
கொலையும் வடியு முறுவேல் விழியுடைக் கொம்பனையே. (கஎ)

பாங்கி மதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

80. விண்ணம் விரும்பு மெழின்முது குன்றர் வியன்வரைப்பொன்
வண்ணம் விரும்பு மியலெழி லாள்புனம் வைகியதும்
நண்ணம் புயமுகத் தான்கலை தேடுறச் சார்ந்ததுவும்
எண்ணம் பிறிதா மெனவிவர் கண்க ளியம்பியவே. (கஅ)

---

## கo. பாங்கியிற் கூட்டம்.

தலைவன் உட்கோள் சாற்றல்.

81. பாளைக் கமுகு செறிமுது குன்றர் பனிவரைமேல்
வாளுக் கிகலும் விழியீர் தொடலை மருவுதற்கு
நாளைக் கழுங்கு மதியைப்பந் தாக்கவு நான்வலியேன்
வேளுக் குருகுறு மென்மேற் சிறிதருண் மேவிடினே. (க)

பாங்கி குலமுறை கிளத்தல்.

82. முன்மே லெழுந்த முதுகிரி வாணர் மொழிவரையாய்
கன்மே லெழுந்த குறமாதை வேறு கழறுவதென்
தன்மே லெழுந்த வறுமையி னேருந் தயங்குறுசெம்
பொன்மே லழுத்திப் புனைகுவ ரோவக்கின் புன்மணியே. (உ)

தலைவன் தலைவியை உயர்த்திக் கூறல்.

83. அறவர் வழுத்துந் திருமுது குன்றி னமரிறைவர்
குறவர் குடித்த புனலமு தாகக் குளிர்சடைமேற்

---

79. கலை - கலைமான். வடி - கூர்மை.

81. தொடலை- மகளிர் விளையாட்டு. நாள் - நட்சத்திரம்; நாளைக் கழுங் காக்கவு மென ஆக்கவு மென்பதனை முன்னும் கூட்டுக.

82. அக்கின் புன் மணி - சங்குமணி.

றுறவர் வழுத்த வடைத்தன ரேற்சீர் சொலுமுமதே
மறவர் பிடித்த வடிவே லனையகண் மங்கையரே. (௩)

பாங்கி அறியாள் போன்று வினுதல்.

84. வனைவார் குழலி யிடமுது குன்றர் மணிவரைமேற்
சுனைநீர் குடைந்து குளிர்பொழிற் பூத்துணர் சூடியபின்
நனைசேர் வரைகூய்க் கொடியூச லாடிய நங்கையருள்
உனையார் வருத்தினள் திண்டோ ளுச வுரையெனக்கே. (௪)

இறையோன் இறைவி தன்மை இயம்பல்.

85. நந்தா மணிவிளக் காமுது குன்றர் நவில்சிலம்பில்
இந்தார் முகங்கணை நீள்விழி வாய்கவி ரீர்மலரின்
கொந்தார் குழல்முகில் வேய்தோள் மலைமுலை கூறிடை நூல்
சந்தார் தளிரடி யென்மனத் தேவந்த தாழ்குழற்கே. (௫)

பாங்கி தலைவி அருமை சாற்றல்.

86. வேதன் படைத்த மலைகட் கிறையென வீழ்சடைநம்
நாதன் படைத்த முதுகிரி நாட நவில்மடந்தை
சீத னகத்தி லிருத்துவ ளுளுந் திகழ்விதுவேல்
ஈதென் னெளிய ளெனநீ யியம்ப லிறையவனே. (௬)

---

83. குறவர் - கண்ணப்ப நாயனர்; அமுது - திருமஞ்சனப்புனல்; "தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு, மருமுந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகத், திருமஞ் சனக்குடம் பல்லா லவன்மென்று தின்றதசை, அருமந்த போனக மன்றேநங் காளத்தி யப்பருக்கே" (திருக்காளத்தி நாதர் இட்ட காமியமாலை, 3) என்னும் செய்யுள் இங்கே அறியற்பாலது. சீர் உமது என்க.

84. நனை - பூவரும்பு; தேனுமாம். வரைகூய் - மலையெதிர் கூவி; வரையெதிர் கூவல் மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. கொடி ஊசல் - கொடிகளால் அமைத்த ஊஞ்சல். நங்கையருள் - பெண்களுக்குள்ளே.

85. இந்து - சந்திரன்; ஆர்: உவம உருபு. வாய் கவிர் - வாய் முள்ளுமுருங்கைப்பூப் போன்றது. இடையானது நூல். சந்து - சந்தனம்.

பி - ம். 'கொந்தார் முகில்குழல்'

86. சீ - திருமகள். தன் அகத்தில் நாளும் இருத்துவள்; அகம் - மனம்.
பி - ம். 'சீத னகத்தி னிருத்துவ ளுலுந் திகழ்விலளேல்'

தலைமகன் தலைவி இன்றியமையாமை இயம்பல்.

87. நேரின் றியபுகழ் நன்முது குன்றர் நெடுவரைமேற்
காரின் றியபயிர் பூமேற் றழைத்திடல் கண்டிடினும்
போரொன் றியவயிற் கண்ணுளை நீங்கிப் புவியிலுயிர்
ஏரொன் றியமட மாதே தவப்பய னெய்திலனே. (எ)

பாங்கி நின்குறை நீயே சென்று உரையென்றல்.

88. மின்போன் றவிர்சடை யார்முது குன்றர் வியன்சிலம்பா
பொன்போன் றவள்மன மேற்பன சொல்லிப் பொருத்துதற்கு
நின்போன் றவர்க்குத் தகுமது நீசென்று நின்குறைசொல்
என்போன் றவர்க்குத் தகாமொழி யாகுமற் றிம்மொழியே. ()

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

89. வயலாற் சிறந்த திருமுது குன்றர் மணிவரைமேல்
இயலாற் சிறந்த பசுங்கிளி பன்னு ளிலவதனை
மயலாற் சுழன்றது போலுன்னைக் காத்து வருந்தியது
கயலாற் பிறழ்ந்த விழியா யெனது கடுவினையே. (கூ)

பாங்கி தலைவி இளமைத்தன்மை தலைவற்கு உணர்த்தல்.

90. சேவைக் கொடியி லுடையார் முதுகுன்றர் செஞ்சிலம்பிற்
பூவைப் புரக்கு மதியா லுயர்ந்த புரவலதன்
பாவைக் கிரங்கிப் பசித்தெனத் தன்முலைப் பால்கொடுக்கும்
பூவைக்குன் னேயைத் தவிர்ப்பதெவ் வாறு புகலுவதே. (க0)

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்.

91. செறிமா தவர்தாழ் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பிற்
பிறியாத வன்பாற் றுயர்கொண்ட வென்னைப் பெருவிழியின்

---

87. நேர் இன்றிய - ஒப்பு இல்லாத; இன்றிய: "இருளு மின்றிய" (பாசவதைப் பரணி.) பூமேல் - பூமியின்மேல். உயிர்வர் ஒன்றிய - உயிரானது அழகோடு ஒன்ற; உயிரென்றது தன்னுயிரை. தலைவியை நீங்கின் உயிர் நீங்குமென்பது கருத்து.

89. 'இலவுகாத்த கிளியைப்போல்' என்பது ஒரு பழமொழி.

90. சேவை - ரிஷபத்தை. பூவை - பூமியை. பாவைக்கு - பிரதிமைக்கு. பசித்தென - பசித்ததென; விகாரம். பூவைக்கு - நாகணவாய்ப் பறவையைப் போன்றவளுக்கு.

மறியா தவள்போற் சிறிதருள் வைத்த வளர்குழலை
அறியா தவனென நீசொலக் கேட்டன ளாயிழையே. (கக)

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

92. வானுந் தொழுநந் திருமுது குன்றர் மணிவரைமேல்
தேனுந் தலர்க்குழற் பூங்கொடி மாதைச் செறிபொதும்பிற்
கானுந் தலர்க்கரந் தீண்டிய துண்டெனிற் காண்பிறரால்
ஊனுந் தியவடி வேலோய் பயனென னுனக்கிவணே. (கஉ)

தன்னிலை தலைவன் சாற்றல்.

93. விதியும் பணியுந் திருமுது குன்றர் வியன்சிலம்பில்
மதியு மரையுந் தொழுமுகத் தாயிந்த மாதையென்னைச்
சதியும் பதியு மெனவோத நீயருள் சார்ந்திலையேல்
வதியு மெனது துயர்நீங்க வேறு வழியிலையே. (கங)

பாங்கி உலகியல் உரைத்தல்.

94. செம்மேனி யையர் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பீர்
எம்மேனி யாருயிர்ப் பொன்னு ளிடத்தினி விச்சையுண்டேல்
உம்மேனி வாடிடக் காரிய மென்னீ ருலகியலால்
வம்மேநிதானவளியாக்குவோன்முன்வரைந்துகொண்மே.(கச)

தலைமகன் மறுத்தல்.

95. மறையோ ரெரிமுன் வரைகுவன் செங்கனி வாய்மயிலைப்
பிறைசேர் முடிமுது குன்றர் வரையிற் பிறங்கமுதே
குறைசே ரெனது மயலேறும் வருத்தங் குலையவின்று
பொறைசே ருமது விழியா ளருளைப் பொருந்துபின்னே. (கரு)

---

91. மறியாதவள் போல் - தடைசெய்யாதவளைப்போல.

92. தேன் உந்து. உனக்குப் பிறராற் பயனென் எனக்கூட்டுக.

93. விதி - பிரமதேவர்; உம்: உயர்வு சிறப்பு. மரை - தாமரை. மாதைச் சதியும் என்னைப் பதியுமென ஒத என நிரனிறையாகக் கொள்க.

பி - ம். 'எனது தவநிற்க வேறு'

94. வம்மே - வாரும்; 'வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய் நின்றது' (பொருந. 101, ந.) நிதான வளி ஆக்குவோன் முன் - ஆதிகாரணமாயுள்ள காற்றினால் உண்டாக்கப்படுபவனாகிய அக்கினியின்முன்; நிதானம் - ஆதிகாரணம்; காற்றிலிருந்து தீயுண்டாகுமென்பர்.

பி - ம். 'செழுஞ்சிலம்பா', 'வம்மேனி கான்செல் வழியாக்குவோன்'

95. பொருந்துபின் - பொருந்தியபின்.

பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

96. விற்றோ ளுடைய புரவல வேடர் மிகுகொடியர்
கற்றோர் பரவு முதுகுன் றர் வெற்பிடைக் கண்டனரேற்
சற்று யினுநெஞ் சிரங்காத் தறுகணர் தங்கலைநீ
பொற்றே ரிரவியு மேல்பாற் புகுந்தனன் போதுகவே. (கசு)

தலைமகன் கையுறை புகழ்தல்.

97. சந்திரன் மேவு சடைமுது குன்றர் தடஞ்சிலம்பிற்
சுந்தர மேவுந் தனமயி லேயித் துலங்குதழை
இந்திரன் மேவுறு நாட்டினு மில்லை யிமயமுயர்
மந்தர மேவு மலர்வார் பொழிலினும் வைகிலதே. (கஎ)

பாங்கி கையுறை மறுத்தல்.

98. மணிமுத்த மாநதி சூழ்முது குன்றர் மணிவரையாய்
அணிபெற்ற நின்றழை யெங்கையிற் கொண்டிடி னுடைவர்கள்
தணிவற்ற நெஞ்சுடன் கொள்வார் வெகுளியைத் தாழ்குழலார்
பணியுற்ற வுள்ளத் தயிர்ப்ப ரதனாற் பரிக்கிலமே (கஅ)

ஆற்று நெஞ்சினோடு அவன் புலத்தல்.

99. மதுமழை பெய்யும் பொழில்சூழ் முதுகுன்றர் மால்வரைமேல்
நிதிமழை பெய்யினு நல்வினை யில்லார்க்கு நீங்குதல்போல்
மதியுறு நெஞ்சே யிரங்குவ ளென்று மயங்கினைநீ
துதியுறு நந்தழை போல்வாடி னையத் தொடங்கினையே. (ககூ)

---

96. தங்கலை - தங்காதே. போதுக - செல்க.

பி - ம். 'தங்கலிர்நீர்', 'போதுவிரே'

97. இமய மலையிலும் மந்தர மலையிலும் மேவிய.

பி-ம் 'இமய முதல்'

98. சூழ்தல் - வலம் வருதல்; "முத்தி முத்தாறு வலஞ்செயும் முது குன்றரே" (திருஞா. தே) அயிர்ப்பர் - ஐயுறுவார்.

99. "நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின் நதியெலாம் நவமணி தரினும், காடெலா மாடை காய்க்கினும் மேகங் கனகமே பொழியினும் மடவீர், ஆடலே புரியு மம்பல வாண ரவரவர்க் கமைத்ததே யல்லால், வீடெலாங் கிடந்து புரண்டுருண் டழினும் விதியலா துளதுவே றுளதோ" என்னும் பழம் பாடல் இங்கே கருதற் குரியது.

பாங்கி ஆற்றுவித்தல்.

100. செந்தா மரைமங்கை யன்னாள் மனத்தைத் திருத்தியிந்நாள்
சந்தார் தழையினை வாங்குவ னுனைத் தடம்பொழில்சூழ்
நந்தார் முதுகுன்றர் நாடா வுனது நல்வகற்றி
இந்தா ரிரவு கழித்திவண் மேவுவை யேகுதியே. (உ0)

கிழவோன் மடலே பொருளென மதித்தல்.

101. கனத்திற் றிகழ்கண்டர் நம்முது குன்றர் கழலிணையே
சனத்திற் பிறவி யொழிக்கு மருந்தெனுந் தன்மையைப்போல்
அனத்திற் றிகழுறு மங்கையர் காம வனலி...சோர்
மனத்திற் கரிய மருந்து மடலன்றி மற்றிலையே. (உக)

பாங்கிக்குத் தலைவன் மடலேற்றினை
உலகின்மேல் வைத்துரைத்தல்.

102. சோலைத் திருமுது குன்றர்தம் வெற்பிற் சுடர்த்தொடியார்
மாலைத் தரித்த மதியுடைக் காளையர் மன்னுலகின்
வேலைப் பரித்தகைப் மன்னவா வீதியில் மெய்ந்தெருக்கை
ஓலைப் பனைப்பரி யூர்வார் கிழிபற்றி யொன்றுதலே. (உஉ)

அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்.

103. பணியேறு செஞ்சடை தாழ்முது குன்றர் பணிவரைமேல்
அணியே றியமுலை மங்கைநல் லீரும் மடிபடிவென்
பிணியே றியவென் மனத்தாழ்வு றப்பெறு கிலனேல்
மணியே றியமட லூர்வன் விடியல் மறுகிடையே. (உ௩)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்.

104. மல்லைத் தரித்த திணிதோட் பெருந்திறல் மன்னவகல்
வில்லைத் தரித்த முதுகுன்றர் வெற்பிலெம் மெல்லியலாள்

---

100. சந்தார் தழை - சந்தனத்தழை. இந்து ஆர் இரவு; இந்து - சந்திரன்.

101. மனத்திற்கு அரிய. கனத்தின் - மேகத்தைப்போல. சனத்தில் பிறவி - மனிதர்களுக்குள் ஒருவராய்ப் பிறத்தலை.

102. சுடர்த் தொடியார் மாலை - பெண்கள்பாலுள்ள காம மயக்கத்தை. பரித்த - தாங்கிய. எருக்கை மெய்ந்து. கிழி - படம்.

103. மணி மடல் மாவிற் கட்டப்படுவது.

வல்லைத் தரித்த தனத்தே ரெழுதினும் வாய்மழலைச்
சொல்லைத் தரித்திட வெவ்வா றெழுதுவை சொல்லெனக்கே.()

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்.

105. விண்ணளக் கும்பொழில் சூழ்முது குன்றர் வியன்சிலம்பில்
மண்ணளக் கும்மவன் மைந்தனு நானா வரைகிழியிற்
கண்ணளத் தற்கரும் பேரெழி லாள்தனுக் காட்டிலனேற்
பண்ணளக் கும்மொழி யாய்தூ ரிகையென்றும் பற்றிலனே.()

பாங்கி அருளியல் கிளத்தல்.

106. விடும்பற் றுடையார்க் கருண்முது குன்றர் வியன்சிலம்பா
நெடும்பொற் பனைபட னீபெற் றனன்றி னிகழ்பெடையி
னொடும்பற் பலபார்ப் புடன்வாழ் மனைசிதை வுற்றிடுமால்
குடும்பத் தலைவுசெய் யத்தகு மோவருட் கொற்றவர்க்கே. ()

பாங்கி கொண்டுநிலை கூறல்.

107. வள்ளற் றகைமை யுடையார் முதுகுன்றர் மால்வரையாய்
உள்ளத் தனமுன் னுரைமறுத் தாலவ் வொளியிழையைக்
கொள்ளத் தருமறை கூறிய வண்ணங் குவலயத்தே
தள்ளத் தகையது மன்றுபின் னூறுந் தருமுணக்கே. (உ௭)

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்கு உணர்த்தல்.

108. எருக்கு மிதழியுங் கொண்முது குன்ற ரெழில்வரையீர்
விரிக்குங் குழலும் பொடியாத் தனங்களு மேவினளை
உருக்கு மனமுடை யாளென வெண்ணி யுயர்விழிவு
தரிக்கு மறிவிலர் போலே தளர்தல் தகாதுமக்கே. (உ௮)

---

104. வல் - சூதாடு கருவி. தனத்தேர் - தனத்தினது அழகை.

105. மண் அளக்கும் அவன் மைந்தன் - திருமால் மைந்தனாகிய மன்மதன். வரை கிழியில் - உருவம்வரைந்த படத்தில். தனு - உடல். தூரிகை - எழுதுகோல்; "எழுதா விடிற்புகழ் வேண்டியயான், கையா லெடுத்தது தூரிகை யேயல்ல காரிகையே" வெங்கைக். 108.

106. விடும் பற்றுடையார் - பற்று விட்டவர்; இது விகுதி பிரித்துக் கூட்டலின் பாற்படும்.

107. உள்ளத்து அனம் - உன்னுடைய நெஞ்சிற் குடிகொண்ட அன்னம் போன்ற தலைவி.

108. விரிக்குங் குழல் முதலியவற்றால் தலைவி பேதைப் பருவத்தினள் என்பதைக் குறிப்பிக்கின்றான்.

தலைவன் தலைவி வருத்திய வண்ணம் உரைத்தல்.

109. வானிற் செறிபொழில் சூழ்முது குன்றர் மணிவரையில்
தேனிற் சிறிது சுவைத்துளி யேனுந் தெவிட்டுதல்போல்
கானிற் பொருந்து மயிர்குழ லாயுன் கருங்கணியென்
ஊனிற் பொருந்து முயிர்த்துன் பியல்பா வுஞற்றினளே. (௱௯)

பாங்கி தலைமகள் செவ்வி அருமை செப்பல்.

110. வன்னிக் குறுசொல் பயிற்றிலள் பந்து மணிக்கழங்கும்
மின்னுக் குறழிடை யாரொடு மாடிலள் மேவுறுதம்
பன்னிக் கிடமருள் நன்முது குன்றர் பணிவரையிற்
கன்னிக்கி யான்சொல்வ தெவ்வா றிருந்திறற் காவலனே. (௱௰)

தலைவன் தலைவி செவ்வி எளிமை செப்பல்.

111. கார்காட்டு பூங்குழல் மெல்லிய லாள்முன் கடிதுசென்று
வார்காட்டு திண்முலை யாயென் வரவை வகுத்துரைத்தாற்
பார்காட்டு விண்சீ ருறுமுது குன்றர் பணிவரைமேல்
ஆர்காட்டு நீயென வந்தே தழுவி யகங்கொளுமே. (௱௧)

பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதல்.

112. சங்காழ் புனற்றடஞ் சூழ்முது குன்றர் தடஞ்சிலம்பா
செங்கேழ் மணியு மவைதரிப் போருஞ் சிறந்துறநூல்
தங்கேழ் வடத்தினுக் கின்றி யமையாத் தகைமையைப்போல்
நுங்கூழ் புணர்ப்பினு மென்னை மறைப்பி னுமக்கரிதே. (௱௨)

அந்நகை பொறுது அவன் புலம்பல்.

113. தேயுற்ற வெண்பிறை சூடு முதுகுன்றர் செஞ்சிலம்பில்
நோயுற்ற மெய்யினர்க் கந்நோய் மிகவுற நொக்குதல்போற்
பாயுற்ற மான்விழி மெல்லிய லாள்மயல் பற்றெனைநீள்
வேயுற்ற தோளிணை யாய்மிக வாட விளம்பினையே. (௱௩)

---

109. தேனில் சுவைத்துளி சிறிதேனுமெனக் கூட்டுக. தெவிட்டுதல் - மயக்குதல். கருங் கணி - கரிய கண்களை உடையவள். துன்பு - துன்பத்தை. உஞற்றினள் - செய்தாள்.

110. வன்னிக்கு - கிளிக்கு. பன்னிக்கு - தேவியாருக்கு. இடம் - இடப் பாகத்தை.

112. வடம் - மாலை. வடத்தினுக்கு நூல் இன்றி யமையாத தகைமை யைப் போல். நுங்கு ஊழ் - நுகர்தற்குக் காரணமாகிய நல்வினை.
பி-ம்: 'மணிவட முந்தரிப் போரும்'

113. 'நொக்குதல் - அடித்தல்; வழக்கு.

### பாங்கி தலைமகனைத் தேற்றல்.

114. தன்னைக்கண் டார்பவம் போக்கு முதுகுன்றர் தண்சிலம்பா
மின்னைக்கண் டாலலர் கேதகை போலத்தன் மெல்லியருள்
என்னைக்கண் டாலரு ளெம்பெரு மாட்டிக் கிதஞ்சொலியான்
நின்னைக்கண் டாரத் தழைகொளு வேனின் னினைவகலே(௱௪)

### பாங்கி கையுறை யேற்றல்.

115. வாழைக் குலையினை மஞ்ஞைகள் தீண்டும் வளமுடைத்தண்
கூழைப் பெறுவயல் சூழ்முது குன்றர் குளிர்சிலம்பின்
ஊழைப் புறந்தருந் தாளென வள்ளுவ ரோதியதாற்
காழைப் பொருந்திய நெஞ்சள்கை யுற்றதுன் கைத்தழையே.()

### கிழவோன் ஆற்றல்.

116. விடைகாட் டியகொடி சேர்முது குன்றர் வியன்சிலம்பில்
உடல்வாட்டி யின்ப முயிர்க்கீ பவர்களை யொப்பவின்று
தொடைகாட் டியகுழ றீமொழி கூறிப்பின் சொல்லுமின்பெண்
இடைகாட்டி யென்றழை தன்கையில் வாங்கின ளின்புறவே. (௱௬)

### இறைவிக்கு இறைவன் குறையறிவுறுத்தல்.

117. பாரோர் தவத்தால் வருமுது குன்றர் பணிவரைமேல்
ஆரோ வொருவர் புனத்தயல் யான்போ யணுகுதொறும்
ஏரோர் பசுந்தழை கைப்பிடித் தேவந் தியம்பிலர்சொல்
காரோர் கருங்குழ லாயவ ரெண்ணங் கருதரிதே. (௱௭)

### இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்.

118. கூனும் பிறையணி வான்முது குன்றர் குளிர்சிலம்பில்
மானுங் கலையும் புனத்தரு கேவந்து வன்றலையிற்

---

114. கேதகை - தாழை; அது மின்னலைக் கண்டால் மலர்வது; "மின் பொருட்டினுற் கேதகை மலர்ந்திடும்" (கந்த. மாயைப். 7.) மெல்லியருள் - பாங்கியர்களுக்குள்ளே. அருளும் எம் பெருமாட்டிக்கு. ஆரத் தழை - சந்தனத் தழையை.

115. கூழை - பயிர்களை. தாள் - முயற்சி; "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித், தாழா துஞற்று பவர்" என்பது இங்கே சுட்டப்பட்ட திருக்குறள். உற்றது என்றது, துணிவு பற்றி.

116. தொடை காட்டிய குழலென்றது பாங்கியை.

றேனுஞ் சுரும்பு மிரைத்திடக் குன்றவர் தேனழிக்கும்
வானுஞ் செறிகுரல் கேட்டோ டுதல்பார் வயங்கிழையே.(௱௮)

பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்.

119. வேலைக் கடுவிட முண்டோர் முதுகுன்றர் மென்சிலம்பில்
மாலைக் குழலி மறைப்பதென் னேயினி வார்களிறு
கோலைக் கொடுபுனத் தேவந்த தோவென்ற கொற்றவர்நின்
மாலைக் கொடுவண்ட லாடுழைக் கண்டனன் வந்திடவே. (௱௯)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

120. திருந்தா ரரணம் பொடித்தோர் முதுகுன்றர் செஞ்சிலம்பில்
விருந்தா யொருவ ருடல்மெலி வோடு வியன்றழையை
வருந்தா மலர்க்கை கொடுவந் தனரென நம்மரபிற்
பொருந்தாமொழியைப்புகலத்தகுமோபொலங்கொடியே.(௪0)

பாங்கி என்னை மறைத்தது என்னெனத் தழால்.

121. முன்பாத வன்பல் லுகுத்தோன் முதுகுன்றில் முண்டகமார்
தன்பாத மேதன் னடியார்க் கருளுந் தகைமையைப்போல்
உன்பாத மேதுணை யென்றிருந் தேனை யொறுத்தியென்றால்
என்பா தகமன்றி யானென்சொல் வேன்மல ரேந்திழையே.()

பாங்கி கையுறை புகழ்தல்.

122. செந்தா திதழிச் சடையார் முதுகுன்றர் சீர்வரையார்
தந்தார் தழையிது வாடாது தன்னைத் தரித்திடுமுன்
சிந்தா குலங்க ளகற்றுவ தென்றுஞ் சிலம்புறுவோர்
இந்தார் புகத்தா யணியத் தகுமீ தெளியதன்றே. (௪௨)

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

123. வாழு முதுகிரி யார்வெற்பர் காட்டினர் வஞ்சிகண்ணால்
வீழு மதகரி தன்பிடி யோடு விளைதினையும்

---

118. இரைத்திட - ஒலிக்க. குன்றவர் - வேடர். மானும் கலையும் வந்து குரலைக் கேட்டு ஓடுதலைப் பாரென்று முடிக்க.

119. கோலை - அம்பை. மாலை - மயக்கத்தை. வண்டலாடு உழை - விளையாடும் இடத்தில். கொற்றவர் வந்திடக் கண்டனனென்க.

120. விருந்தாய் - புதியவராகி.

121. பி-ம். 'உகுத்தோர் முதுகுன்றர்'

122. இதழி - கொன்றை. சிலம்புறுவோர் அணியத் தகும்.

சூழுங் கழையும் வயிறுர மேய்ந்து துலங்கருவி
தாழும் புனலுண் டசோக நிழலிற் றயங்குதலே. (௧௩)

தோழி தலைவனை மறுத்தற்கு அருமை மாட்டல்.

124. வேணித் திருமுடிச் சீர்முது குன்றர் வியன்சிலம்பர்
ஆணிப் பசும்பொன் னனையாய் புனத்தி னயலடைந்தாற்
பாணித் தழையொடு முன்னிற்பர் வந்து பணிமொழிகள்
பேணிப் பணிபவர்க் கென்று லரிதினிப் பேசுவதே. (௨௪)

தோழி தலைமகன்குறிப்பு வேறாக நெறிப்படக்கூறல்.

125. முனிவோர் பரவுந் திருமுது குன்றர் மொழிவரையார்
மனியார் நறுந்துள வேய்ந்தவ ேனாடு பகைகொளவோ
முனிவார் மறலி யொடுபகை கொண்டு முரணுறவோ
குனிவார் சிலைநுத லாயறி யேனெஞ்சிற் கொண்டதுவே.(௨௫)

தோழி தலைவியை முனிதல்.

126. மானென் றுகையர் பழமலை வாணர் மணிவரைமேல்
தேனென் று பூங்குழன் மின்னே யென்றுறு சிந்தையின்கண்
ஊனென் றலவுயி ரொன்றே யெனவிங் குறுதலினால்
நாணின் றடாமொழி சொல்லுதி யினமனம் நண்ணலையே. (௨௬)

தலைவி பாங்கியை முனிதல்.

127. கோழிக் கொடியன் பிதாமுது குன்றர் குளிர்சிலம்பிற்
பாழித் திணிபுயத் தோர்வே லவனைப் பணிபுரிவோர்
சூழிப் புனத்தயற் கண்டே னெனும்பழி சொல்லினையால்
ஆழிப் புவியிடை யிவ்வல ரெந்நா ளகலுவதே. (௨௭)

தலைவி கையுறை ஏற்றல்.

128. சேனும் பரவுந் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பிற்
காணு மயிலியற் பொன்னனை யாய்நின் கருத்தினுளே

---

123. வஞ்சி: விளி. கழை - மூங்கில். வெற்பர் தயங்குதலைக் கண்ணுற் காட்டினரென்க.

125. "விரையூர் குழலியர்" (தஞ்சை. 102) என்னும் செய்யுளைப் பின் பற்றியது இது.

126. சிந்தையின்கண் உறுதலினாலென்க.

127. பணி புரிவோர் - பாங்கியர் முதலியோர். ஓர் வேலவனைக்கண் டேனென்னும் பழியை.

பூணும் படிய விடமில் புணர்முலைப் பூவையர்பூண்
நாணு மலர்ச்சொ லுங் காப்பதுண் டேற்றமை நல்குவையே. ()

இறைவி கையுறை ஏற்றமை
பாங்கி இறைவற்கு உணர்த்தல்.

129. மழையைக் கொளும்பொழில் சூழ்முது குன்றர் மணிவரையாய்
தழையைப் பிடியென வீதலும் வாங்கித் தடங்கணெற்றிக்
குழையைத் தரித்திடு வார்செவிச் செவ்விதழ்க் கொம்பனைதன்
இழையைப் பொருந்தும் புணர்முலை மேல்வைத் திருந்தனளே. (௱௨௯)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்.

130. அருள்விழி கொண்ட பழமலை நாத ரவிர்சிலம்பில்
உருள்வலி கொண்ட விரதமன் னவிண் ணுயர்தருவின்
இருள்குடி கொண்ட மலர்செறி காவின் றிலங்கிழையின்
திரள்குடி கொண்ட முலையேந் தொடலை செயுமிடமே. (௱௩௰)

பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்.

131. உணர்வார்க் கரிய திருமுது குன்ற ருயர்சிலம்பிற்
றுணர்வார் பொழிலிற் கொடியூச லாடிச் சுனைகுடைந்து
வணர்வார் குழலா ரொடுமலை யேறி மலர்பறிப்பப்
புணர்வா ரிளமுலைப் பூங்கொடி யேயாம் பொருந்துவமே. (௱௩௧)

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

132. தம்மா திடத்துறை செய்முது குன்றர் தடஞ்சிலம்பில்
எம்மாவி யன்ன விலங்கிழை வார்குழ லேந்திழையாய்
இம்மா தவிப்பந்தல் நீவிளை யாடுக வேர்மலிந்த
செம்மா துறையுந் திருமலர் கொய்திவண் சேர்குவனே. (௱௩௨)

---

128. பூணுகியநாணும்: "பெண்பா லவர்கட் கணியாய்ப் பிரியாத நாணும்" சீவக. 1961. நாணையும் பழிமொழியையும் காக்கும் எண்ணம் உன் கருத்தினுள்ளே இருப்பின் கொடுப்பாயாக.

129. கொம்பனை என்றது தலைவியை.

130. உருள் - சக்கரம்; 'வட்டக்காலாற் சிறந்த தேர்' என்பர், ந. தொடலை - மாலை. இடம் கா என்க.

பி-ம். 'உருள்படி கொண்ட'

131. உணர்வார்க் கரிய திருமுதுகுன்றர்: "உணர்ந்தார்க் குணர்வரியோன் றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்" (சிற். 9), "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" (பெரிய.) வணர் - வளைவு.

132. மாதவி - குருக்கத்தி.

தலைவி இறையோனிடத் தெதிர்ப்படல்.

133. இளங்கதி ரென்ன வெழுமுது குன்றரை யேத்தினர்தம்
உளங்கவ ராணவ வல்லிரு ணீங்கி யுறுவதுபோல்
விளங்கிய மாமய லாகிய காரிருள் வீந்திடவே
களங்கமில் மாமதி யிக்கா வகத்தினிற் கண்டனனே. (நங)

புணர்ச்சியின் மகிழ்தல்.

134. மண்ணின்ப மெய்த வருமுது குன்றர் மணிவரைமேல்
விண்ணின்ப முண்டென வாகமத் தாற்சிலர் வேண்டுவர்காண்
கண்ணின்ப மெய்த வுறுமமு தாகிய காரிகைசேர்
பெண்ணின்ப முற்றபின் பேரின்ப முண்டெனப் பேசிலமே.()

புகழ்தல்.

135. விண்டென்றுங் காணுப் பதமுது குன்றர் வியன்சிலம்பில்
வண்டொன்று பூந்தொடை வார்குழ லாய்நின் மணியிதழ்த்தேன்
கண்டென்று சொல்லி னதுவுமோர் பெண்ணைக் கலப்புளதால்
விண்டொன் றமுதஞ் சுவைக்குடைந் தேமெய் வெளுத்ததுவே.(நரு)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

136. வேலைப் பொடித்த திருமுது குன்றர் வியன்சிலம்பில்
நாளைக் கடுத்த மணிக்கோவை சூழ்ந்து நறவுமிழ்ந்த
பாளைக் கமுகு நிகர்மிடற் றுய்வரு பாங்கியொடுன்
தாளைப் பரவுறுஞ் சேடியர் கூட்டத்தைச் சார்ந்தருளே.(நசு)

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.

137. சூலுக் குளைந்து சுரிமுகச் சங்கஞ் சுழல்வயல்சூழ்
வேலிக் கிணைந்த கழைமுது குன்றர் வியன்சிலம்பில்

---

133. இளங்கதி ரென்ன வெழுமுது குன்றர்: "உதயா திபனென நின் றூர்தம் வெங்கையில்" வெங்கைக் கோவை, 15.

134. காரிகை - அழகு.

135. விண்டு - திருமால். கண்டு - கற்கண்டு. அதுவும் ஓர் பெண்ணைக் கலப்பு உளதால் - அந்தக் கற்கண்டும் ஒரு பனையின் தொடர்பை உடையது; பனையிலிருந்து கற்கண்டு செய்வதுண்டு. அதுவும் தான் இன்பம் பெற வேண்டி ஒரு பெண்ணைக் கலத்தலை உடையது என்பது இங்கே தோன் றும் வேறுபொருள்.

136. நாளைக் கடுத்த - நட்சத்திரத்தை ஒத்த.

கோலுக் கிணைந்த நெடுங்கூர் விழியுடைக் கொம்பனையைம்
பாலுக் கியைந்த மலர்கொணர்ந் தேனிவை பார்த்தருளே. (௱௩௭)

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

138. அடியர்க் கிரங்குந் திருமுது குன்ற ரணிவரைமேற்
படியர்க் கமுதங் கிடைத்தென நின்றிடும் பைந்தொடியாய்
நெடியற் குறழு முயர்பொழின் மென்மலர் நீயணிந்தாய்
மிடியர்க் கரிய திருவனை யாரிட மேவுவையே. (௱௩௮)

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்.

139. பிறவா வழியருள் சீர்முது குன்றர் பெருவரையாய்
பறவாப் பசுங்கிளி போல்வா ளிரங்கப் பரிவுறுத்தின்
உறவா யுனைச்செய் யெமக்கிட ரெய்த லுறுமெனநீ
மறவா தொழியின்று போலென்று நெஞ்சிடை மன்னவனே. ()

பாங்கி தலைமகனை உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.

140. பரைப்பால் விளங்க வுறுமுது குன்றர் பணிவரையீர்
மரைப்பா லுலையிடைச் செய்தினைச் சோறு மறித்தசையும்
வரைப்பால் மதுவுட னுண்டிலைக் கூரை வதிந்துசென்றால்
தரைப்பா லுமக்கு வருங்குறை யேதினிச் சாற்றுவிரே. (௱௪0)

விருந்து இறை விரும்பல்.

141. நீரார் சடையர் திருமுது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
காரார் குழலீ ருமதிரும் பாடியிற் கான்மரைப்பால்

---

137. கழை - கரும்பு. கோலுக்கு - அம்புக்கு. கொம்பு அன்னை - பூங்கொம்பு போல்வாய். ஐம் பாலுக்கு - கூந்தலுக்கு.

138. படியர்க்கு - பூமியிலுள்ளவர்களுக்கு. கிடைத்தென - கிடைத்ததைப்போல. நெடியற்கு உறழும் - திருமாலை ஒத்த; நெடியற்கு: உருபுமயக்கம். மிடியர்க்கு - வறியவர்களுக்கு.

139. கிளி போல்வாளென்றது தலைவியை. பரிவுறுத்தின் - துன்பமுறச் செய்தால்.

140. பரைப் பால் - உமாதேவியாருக்குரிய பாகம். மரைப்பால் உலையிடைச் செய் - மரையாவின் பாலுலையில் செய்யப் பெற்ற. மறித் தசை - மான் நிணம். வரைப்பால் மது - மலையினிடத்தே உள்ள தேன். இலைக் கூரை: "இலை வேய் குரம்பை" மதுரைக். 310.

சீரான மானின் றசைவார் கிழங்கு செறிநறுந்தேன்
பாரார் விரும்பு மமுதல வோரீர் பகர்வதென்னே. (சுக)

---

## கக. பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கல்.

142\. சொன்மாலை வேய்ந்த திருமுது குன்றர் சுடர்க்கிரியார்
வன்மாலை தந்து பிரிந்தே கியபின் வளர்முலையாய்
பொன்மாலைத் தேரினன் மேல்பாற் கடலிற் புகுந்திடுமுன்
புன்மாலைப் போது வரவரத் துன்பம் பொருந்தியதே. (க)

பாங்கி புலம்பல்.

143\. நந்திக் கொடியுடை நன்முது குன்றர் நவில்சிலம்பில்
தந்திக் கிணையெனும் பூண்முலை யாள்மெய் தளர்வுறவே
பந்திப் புரவி யுடைத்தே ரினனெனப் பார்புகல்வோன்
அந்திப் பொழுதை வருவித்து வெய்யவ னாயினனே. (உ)

தலைவன் நீடத் தலைவி வருந்தல்.

144\. முனிவோர் பரவுந் திருமுது குன்றினர் மொய்வரைமேல்
தனியேனை யிங்குற வாயளித் தேகுந் தடம்புயத்தார்
பனிமா மலர்கொய்து குன்றெதிர் கூவியிப் பைந்தொடியின்
இனியார் வருமுன்ன மிங்குவந் தேகுற வெண்ணிலரே. (௩)

தலைவியைப் பாங்கி கழறல்.

145\. தேடிப் பதியைக் குலக்கொடி யார்க டெருமரல்பார்
பாடிப் புலவர் தொழுமுது குன்றர் பணிவரையார்
கூடிப் பிரிந்தன ரென்றே மனத்துயர் கொண்டுமிக
வாடிப் புலம்பலை நீயொழி வாய்நன் மலர்த்திருவே. (௪)

---

141\. பாடி - இங்கே குறிஞ்சிநிலத்து ஊர். மரை - ஒருவகை மிருகம்.

142\. தேர் இனன் - தேரையுடைய சூரியன்; இனன் - சூரியன்; தேரை யுடையவனெனினும் பொருந்தும்.

143\. வெய்யவன் - சூரியன்; தீய செய்கையை யுடையவனென்பது மற்றொரு பொருள்.

144\. இனியார் - ஆயத்தார்.

145\. பதியை - கணவர்களை. குலக் கொடியார்கள் - கற்புடைய மகளிர். புலம்பலை - புலம்புதலை.

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

146. வனத்தன்பில் வேடரைப் போற்சுந் தரனை வழிமறித்துத்
தனத்தன்பி னுற்கொள் பழமலை யார்தந் தமிழ்க்கிரியிற்
புனத்தன்பர் போலப் பொருந்தின ராகிப் பொருந்திலர்தம்
மனத்தன்பிலார்க்குப்பலவார்த்தைபேசின்வருவதென்னே. ()

தலைவி பாங்கியோடு பகர்தல்.

147. முன்ன மயற்கருள் செய்முது குன்றர் மொழிவரையில்
அன்ன மருந்தின் மணமகிழ் செய்யு மதுவிலையேற்
சின்ன முறுதலும் போலே தலைவர் செறிவிரிவால்
வன்னம் பிறழ்விழி மாதே மகிழ்துயர் வந்தனவே. (சு)

தலைவியைப் பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

148. நனைகா வலர்பொழி சீர்முது குன்றர் நவில்சிலம்பிற்
புனைகா வலரிடைப் புந்திவைத் தாசை பொருந்தினைநீ
தினைகாவல் செய்திட வைத்தநம் மன்னை தெரிந்தனளேல்
மனைகாவ லாக விருத்திடி னென்செய்வம் வார்குழலே. (எ)

நீங்கற்கு அருமை தலைவிநினைந்திரங்கல்.

149. பிறக்கு முயிர்க்குத் துணைமுது குன்றர் பெருவரைவிண்
பறக்குங் குலத்தினு ளன்றிலம் பேடை பதிபிரிந்தால்
இறக்கு மெனிற்கடல் சூழ்புவி தன்னிடை யேந்திழையார்
பொறுக்குந் துயரது வன்றலென் னுவி பொறுப்பரிதே. (அ)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

150. பார்மே லமரர் பணிமுது குன்றர் பனிவரைமேற்
கூர்வே லனைய விழிநீரை மாற்றிக் கொடியிடைநந்
தார்மேல் விளங்கும் புயத்தார் வரவினைச் சாற்றுதல்போல்
தேர்மே லசைத்த மணிக்குரல் கேண்மின் செவியுறவே. (கூ)

---

146. பழமலைநாதர் சுந்தரமூர்த்தியை வழிமறித்துத் தனத்தைப் பறித்தது திருமுருகன் பூண்டியில்.

147. அயற்கு - பிரமதேவனுக்கு. அது - அவ்வன்னம். செறிவு இரிவால் - செறிவாலும் இரிவாலும்; நிரனிறை. வன்னம் - நிறம்.

148. நனையைக் காவிலுள்ள அலர் பொழிகின்ற; நனை - கள்.
பி-ம். 'பொருந்தினமேற்'

149. பறக்கும் குலம் - பறவைக்குலம். பதியென்றது ஆண் அன்றிலை. அது வென்றது 145 - ஆம் செய்யுளிலுள்ள பாங்கியின் கூற்றை.
பி-ம். 'துயரது வென்றல்'

150. மாற்றி மணிக்குரலைக் கேளென இயைக்க.

தோழி சிறைப்புறமாகத்
தலைமகற்குச் செறிப்பு அறிவுறுத்தல்.

151. செங்காற் பசிய கிளிகா ளிறகு செறிமயில்காள்
பங்காள் பெரியம்மை சேர்முது குன்றர் பணிவரையார்
எங்கா தலியை மறந்தா ரெனினு மியம்புறுநீர்
பொங்கா தரவின் மறவா திருந்திடும் புந்தியிலே. (௧௦)

பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்பறிவுறுத்தல்.

152. கூனிரும் பாலெமர் நீள்புனங் கொய்வர் குளிர்பணிக்கற்
றேன்விரும் பும்மொழி னம்முது குன்றர் செழுஞ்சிலம்பா
வான்விரும் பும்மொழி லெம்பெரு மாட்டி மலர்முகத்தை
மான்விரும் பும்புனத் தேயினிக் காண வழக்கில்லையே. (௧௧)

பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி
ஓம்படை சாற்றல்.

153. வெளியு முருவு முடைமுது குன்றர் வியன்சிலம்பா
கிளியு மயிலுந் தினைப்புனத் தேயினிக் கிட்டல்விடும்
தளியு முகிலு முறழ்மது வார்ந்த சுரிகுழன்மேல்
அளியு முறவு மறவாம னெஞ்சி லருள்குவையே. (௧௨)

தலைமகன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

154. நஞ்சுக் குரிய களமுது குன்றர் நவில்சிலம்பில்
வெஞ்சொற் குறவர் புனங்காவ னீக்கி விரைமலரார்
மஞ்சுக் குறழ்குழல் வல்லியன் னாளை மனையில்வைப்பார்
அஞ்சிப் பதைத்து மனமே மயல்கொளி னுவதென்னே. (௧௩)

---

151. பெரியம்மை: இத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

152. கூனிரும்பு - அரிவாள்; "கொடும்பிறை வடிவிற் செய்த கூனிரும் பங்கை வாங்கி" (திருவிளை. நாட்டுச். உஎ.) பணிக்கற்றேன் - உமாதேவியார்; பணிக் கல் - இமயமலை. வழக்கு - நியாயம்; வழங்குதலுமாம்.

153. வெளி - அருவத்திருமேனி. உரு - உருவத்திருமேனி. கிளியும் மயிலும் கிட்டுதலை விடாநிற்கும்.

பி-ம். 'தினைப்புனத் தேயினிக் கிட்டல்விட்டு'

154. மஞ்சுக்கு - மேகத்தை; உருபுமயக்கம்.

பி-ம். 'மனையிருத்தில், அஞ்சிப் பதைத்து'

## ௧௨. பகற்குறி யிடையீடு.

### இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

155. பாயு மறிக்கரத் தார்முது குன்றர் பனிவரையாய்
சாயுங் குரலுடை நற்றினை கொய்யத் தமர்செறிந்தார்
ஆயும் வடிவிற் கிளிகளுஞ் சோலை யடுத்தனவால்
தாயு மடிக்கடி வந்தாள் புனத்திற் றடையறவே. (௧)

### பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கல்.

156. கலையிற் பரந்த புகழ்முது குன்றர் கவின்சிலம்பிற்
சிலையிற் சிறந்த நுதலாய் தினைப்புனஞ் சேர்ந்தபினுன்
முலையிற் பசலையைக் கண்டயிர்ப் போடு முகங்கறுத்தாள்
இலையிற் படுபணித் தோளரைக் காணா லியல்பலவே. (௨)

### இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்.

157. மணிமுத்த வாறு மருவியஞ் சாரலும் வான்பொழிலும்
அணிபெற்ற சிற்றிலு மாறும் புனமு மகமுறவின்
பணியுற்ற வார்சடை யார்முது குன்றர் பனிவரையும்
துணிவுற்று நெஞ்சம் பிரிவரி தாகிச் சுழலுறுமே. (௩)

### ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல்.

158. வாணற் கருள்புரி நன்முது குன்றர் வரைக்கிளிகாள்
காணற் கிறைவன் வருமெனி னன்பொடு கட்டுரைப்பீர்
பாணிற் குரிய மொழிபல கூறிய பைந்தொடியாள்
சேணிற் கரிய சிறுகுடில் சேருஞ் செயலினையே. (௪)

### பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

159. மணியார் மிடற்றர் திருமுது குன்றர் வரைக்கிளிகாள்
பணியார் புணர்முலைச் செவ்வாய்க் கருங்கட் பசுங்கிளிமாற்
பிணியா ரெனைப்புனத் தேயகன் றெங்குப் பெயர்ந்தனுநீர்
அணியா ரொருமொழி கூறித் தணிப்பீ ரகத்துயரே. (௫)

---

155. குரல் - கதிர்.

156. இலையிற் படு பணி - இலை வடிவமாக உள்ள ஆபரணம்; "இலைமுகப் பைம்பூ ணிறை" நீதிநெறிவிளக்கம்.

157. ஆறும் - வழியும்.

158. வாணற்கு - வாணாசுரனுக்கு. பாண் - இசை. சேணில் - நெடுந் தூரத்திலுள்ள.

தலைமகன் வறுங்களம் நாடி மறுகல்.

160. பங்க மிலாத பொழின்முது குன்றர் பணிவரையில்
அங்க மிலாத மதன்கணை பாயு மகத்துயரைத்
தங்க லிலாம லகற்றுந் திருவைத் தணந்தபுனம்
திங்க ளிலாத விராப்போ லிருந்தது சீரகன்றே. (௬)

தலைமகன் தலைமகள்வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்.

161. துறவு விரும்பிப் புலனவி யாத துரிசினர்க்கும்
பிறவி யொழிக்குந் திருமுது குன்றர் பெருவரையாள்
உறவு கருதி மனமே யவளூ ருறவிரும்பல்
உறவி யமுதை யுணவா விரும்புத லொத்ததுவே. (௭)

---

## ௧௩. இரவுக்குறி.

இறையோன் இருட்குறி வேண்டல்.

162. அரவின் குழையணி சீர்முது குன்ற ரணிவரைமேல்
இரவின் மலையிடை வேடனம் பாலெந் திளைத்துவந்தாற்
கரவின் மனத்துட னூரிட மீதல் கனங்குழையீர்
உரவின் றலைவ ருலகியல் பென்ன வுரைத்தனரே. (௧)

பாங்கி நெறியினது அருமை சாற்றல்.

163. குருகார் மலர்த்தடஞ் சூழ்முது குன்றர் குளிர்சிலம்பில்
அரிகால் படமதந் தாழிப மோடு மரிநெறிக்கண்
விரிமா விருளிற் றனிவரு மாறெவன் வேலவசெவ்
வெரிகா லிடியொடு கந்தரஞ் சூழ்தரு மிம்மலைக்கே. (௨)

தலைமகன் நெறியினது எளிமை கூறல்.

164. கலையாகத் தோலைப் புனைமுது குன்றர் கவின்வரையில்
முலையாகும் வெங்கரி மெல்லிடைச் சிங்கத் துடன்முரணும்

---

161. துரிசினர்க்கும் பிறவி ஒழித்தல்: "கலர்கண்டு முத்தி பெறுமுது குன்றர்" (௧௯௬) என்பர் பின். உறவி - எறும்பு.

162. வேடனம்பால் - வேடனுடைய அம்பால்; வேளின் பாணத்தா லென்பது மற்றொரு பொருள்; வேள் - மன்மதன். ஊரிடம் - ஊர் இடம்; ஊரு இடம்; ஊரு - துடை; சிலேடை.

163. அரி - சிங்கம். அரில் - சிறுதூறுகள். கந்தரம் - மேகம்.

நிலைகாண நெஞ்சம் வெருவுவ தன்றி நெடுவனத்திற்
கொலைகா ணரிகரி வந்தவற் றுற்பயங் கொள்ளலமே. (௩)

பாங்கி அவன்நாட்டுஅணியியல் வினுதல்.

165. செறிதழை யாது மலைமலர் யாது திருந்திழையும்
வெறிதுணர்ச் சோலையுஞ் சாந்தமும் யாவை மிகுகுரல்சேர்
மறியுறு பாணியர் சீர்முது குன்றர் மணிச்சிலம்பா
பொறியுறழ் நின்னுட் டரிவையர்க் கென்றும் புகலுதியே. (௪)

தலைவன் அவள்நாட்டுஅணியியல் வினுதல்.

166. பன்னுட்டத் திந்திரன் சூழ்முது குன்றர் பனிவரைமேல்
என்னுட் டணிகள் சொலிற்பயன் யாதிங் கியம்புமுங்கள்
பொன்னுட் டரிவைய ராடிடஞ் சந்தனம் பூண்டழையும்
முன்னுட் டவத்தால் வருபூங் கொடியீர் மொழிந்திடுமே. (௫)

தலைமகற்குப் பாங்கி தன்நாட்டுஅணியியல் சாற்றல்.

167. பாந்தளம் பூணணி நன்முது குன்றர் பனிவரையாய்
காந்தளம் போது செறிபிண்டி மென்றழை கைமலைமுத்
தேந்திளங் கொங்கை நறுஞ்சாந் தணிந்தங் கிருளுறைந்த
பூந்துணர் மாதவிக் கீழிருந் தாடுவர் பூவையரே. (௬)

இறைவிக்கு இறையோன் குறையுறவுறுத்தல்.

168. போர்கொண்ட வேலற் றருமுது குன்றர் பொருப்பினர்தம்
ஏர்கொண்ட பூண்முலை மானனை யாய்நம் மிறையவர்தாம்
நீர்கொண்ட கொண்ட லதிர்மலைச் சார னெடுவனத்திற்
கார்கொண்ட வல்லிரு ளின்பால் வரவு கருதினரே. (௭)

---

164. கலையாகத் தோலைப் புனே. ஆடையாகத் தோலைப் புனைந்த; கலை - ஆடை; கலைமானின ஆகத்தி லுள்ள தோலைப் புனைந்த என்றுமாம்; "உடையொன்றிற் புள்ளி யுழைத்தோலுங் கொண்டார்", "வெள்ளிபோற் புள்ளி யுழைமான்றோல் சேர்ந்த, உடை யுடையான்" தேவாரம். இடையாகிய சிங்கத்துடன். அரி கரி - சிங்கமும் யானையும்.

165. வெறி - நறுமணம்; வெறித்துணர்: தொகுத்தல் விகாரம். பொறி - திருமகள்.

166. பல் நாட்டத்து - பல கண்களையுடைய. முன்னுள் தவத்தால்.

167. காந்தள் அம் போது - காந்தட்பூவே அழகிய பூ. பிண்டி - அசோக மரம். அசோகந்தழையே எங்களுக்குத் தழை.

168. வரவு - வருதலை.

நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல்.

169. பந்தந் தவிர்க்குந் திருமுது குன்றர் பணிவரையார்
நொந்தங் கிரவிற் புலிசெறி சாரலை நோக்கியன்பால்
வந்திங் குறநெஞ்ச மேநா மொருப்படின் மாநிலத்திற்
குந்தம் பொருவும் விழியார் கருத்துக் கொடுமையதே. (அ)

தலைமகள் நேர்ந்து பாங்கியோடுரைத்தல்.

170. மடைதங்கு சங்குமுத் தீனும் பணைசூழ் மணிமுதுகுன்
றிடைதங்கு முன்னவன் வெற்பிடை மாதே யிசையுநின்சொற்
றடைதங்கு சொல்லிலை யென்பா விருள்வழி சாருநர்க்குப்
புடைதங்கு வல்விலங் கேதஞ் செயாவணம் போதுகவே. (கூ)

தலைமகள் நேர்ந்தமை பாங்கி தலைமகற்கு உரைத்தல்.

171. வேலைப் பிடித்த குமரனை யொத்திடு வேலவமால்
சோலைப் புறத்ததி ரும்முது குன்றர் சுடர்க்கிரிமேல்
சேலைப் பிடித்த மதனே யகலத் திருந்திழைதன்
காலைப் பிடித்து மருந்தருள் பெற்றேன் கசிவகலே. (க0)

பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுத்தி வந்து
தாய்துயில் அறிதல்.

172. துறவிக் குலங்க டொழுமுது குன்றர் சுடர்க்கிரியில்
நறவைத் தருமலர் சேர்பொழி லின்கணிந் நள்ளிருள்வாய்
இறகிற் பெடையை யணைத்து மனமகி ழின்பொருவிப்
பறவைக் குலங்கள் குரலவி யாதநென் பைந்தொடியே. (கக)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவறிவுறுத்தல்.

173. கொந்தார் கடுக்கை முதுகுன்றர் வெற்பிற் குளிர்மயிலே
மந்தா நிலம்பூ மணங்கொண்டு வீசிய மாலையின்கண்
செந்தா மரைமலர்த் தேன்வேட்டு வந்திடு தேனையொத்து
வந்தார் நமது மனங்கொள்ளை கொண்டிடு மன்னவரே. (கஉ)

---

169. குந்தம் - வேல்.

170. வல் விலங்கு - யானை முதலிய வலிய மிருகங்கள். ஏதம் - துன்பம்.

171. மால் - மேகம். சேலை - மீனக் கொடியை. மதன் நோயகல அருளாகிய மருந்தைப் பெற்றேன். கசிவு - வருந்துதலை.

172. இன்பு ஒருவி - இன்பத்தை நீங்கி.

173. தேன் - மது, வண்டு.

பாங்கி தலைமகளைக் குறியிடத்திற் கொண்டுசேறல்.

174. செய்வேள் சிலையார் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பர்
மைவே லுறழ்விழி மானே யிரவின் வழியிருட்குக்
கைவேல் விளக்கா வருந்திவந் தாரவர்க் கண்டுவந்து
நெய்சேர் மலர்மா தவிநிழ லாட நினைந்தருளே. (௧௩)

பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல்.

175. புல்லை யுரித்த திருமுது குன்றர் பொருப்பிடைநீள்
வில்லை முறித்த புருவத்தி னாய்செறி வெண்ணகைக்கு
முல்லை கடுத்த வெனவுறு மந்த முரணழித்தே
இல்லை பகையெனக் கொய்திவண் சார்வ னிருத்தியிங்கே. (௧௪)

தலைமகன் தலைமகளைக் குறியிடத்து எதிர்ப்படல்.

176. பந்தாடு மங்கையர் சூழ்முது குன்றர் பனிவரையார்
சிந்தா குலத்துட னிப்பலைச் சாரற் செறியிருள்வாய்
வந்தா ரெனநும் மனத்தருள் கொண்டோ மடமயிலே
செந்தா மரைமலர்க் கோயிலை நீங்கினை சேர்ந்ததுவே. (௧௫)

தலைமகள் ஆற்றினது அருமை நினைந்து இரங்கல்.

177. கலையார் புகழ்முது குன்றர்தம் வெற்பிற் கணிபெயர்த்தே
அலையா றறலி னெறிகாண் பரிதா யணுகிருட்கண்
கொலைபா ரரியுடன் வேங்கையுஞ் சேர்ந்த கொடுவனஞ்சூழ்
மலையார் குறிச்சியி னெவ்வாறு வந்தனை மன்னவனே. (௧௬)

தலைமகன் தலைமகளைத் தேற்றல்.

178. விடந்தங்கு கண்டர் பழமலை யார்தம் வியன்சிலம்பில்
வடந்தங்கு திண்முலை மாதே நினது வரிநெடுங்கண்
இடந்தங்கு வெண்மை யுடனிருள் சேர்ந்த வியல்பிதென்னத்
தடந்தங்கு கொண்டல்கண் மின்னனிருள் காட்டின சார்நெறிக்கே. (௧௭)

---

174. செய் வேள் சிலை ஆர் - செய்யின்கண் வேளின் சிலை ஆர்ந்த; செய் - வயல்; வேள் - மன்மதன்; அவன் சிலை - கரும்பு. கண்டு உவந்து. நெய் - தேன்.

175. புல் - புலி. கடுத்த - ஒத்தன; கோபித்தன வென்பது மற்றொரு பொருள். உறும்: முற்று.

177. கணி - வேங்கைமரம்; கணியைப் பெயர்த்துக் கொண்டு. அறலின் - நீர் வெள்ளத்தால்.

178. மின்னையும் இருளையும்.

புணர்தல்.

179. பங்க முழுதுந் தடைப்பார் முதுகுன் றிற் பைங்கொடியாய்
தங்க முழுதும் பெறும்பண் ணவர்க டலங்கமுதம்
எங்கு முழுதுஞ் சுவையிலை வாயி னிடையளவே
அங்க முழுதுஞ் சுவையுள நின்கனி ஞரமுதே. (கஅ)

புகழ்தல்.

180. சினங்கொண்ட காலனைத் தம்மடி மைக்காச் சிதைத்தவர்நல்
அனங்கொண்ட பூந்தடஞ் சூழ்முது குன்ற ரணிவரைமேற்
கனங்கொண்ட மென மலர்க் கூந்தலின் மாதே கவினுறுநின்
தனங்கண்ட பின்னல வோவிள நீர்குலை சாய்த்ததுவே. (கசு)

தலைமகனைத் தலைமகள் குறிவரல் விலக்கல்.

181. இலங்கு மயிலற் பெறுமுது குன்ற ரெழில்வரையாய்
வலங்கொண் மதனன் கணையாற் கலங்கி வடமணிந்த
துலங்கு மணிமுலை யின்பத்தை மேவத் துணிவொடுநீ
விலங்கு செறியு மிருண்மலைச் சாரலின் மேவலையே. (உ0)

தலைமகன் தலைமகளை இல்வயின் விடுத்தல்.

182. தோயங் குடிகொள் சடைமுது குன்றர் சுடர்க்கிரிமேற்
பாயம் புறமுழு நெடுங்கூர் விழியுடைப் பைங்கொடியாய்
நேய நினதிடை வைத்தே மருங்கினி னீக்கமறு
ஆயம் படர்ந்து நினைத்தேடு முன்னங் கடைந்தருளே. (உக)

பாங்கி தலைமகளை எய்திக் கையுறை காட்டல்.

183. நீங்கரு மாதி னிடமுது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
கோங்கரும் பேய்க்கும் புணர்முலைச் செவ்வாய்க் கொடியிடைநற்
பூங்கரும் பொத்த சுவைச்சொல்லி நின்வார் புரிகுழற்குத்
தாங்கரும் பாரஞ் செயாதிந்த முல்லைத் தனியலரே. (உஉ)

பாங்கி தலைமகளை இற்கொண்டு ஏகல்.

184. வாடாத சீருடை நன்முது குன்றர் மணிவரைமேல்
ஓடாத வேல்விழிச் செவ்வாய்ப் புணர்முலை யொண்டொடியாய்

---

180. தனங்...சாய்த்ததுவே: "கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாலி கைக் காரிகைநின், குழல்கண்ட பின்னல்ல வோவற னீருட் குளித்தது வே." தஞ்சை வாணன் கோவை, சுo.

182. தோயம் - நீர்; ஆகாயகங்கை.

வீடாத வன்பு நமதிடைக் கொண்டு விளங்குறுமாய்
தேடாத முன்னே யடைகுவ நாநந் திருமனைக்கே. (உ௩)

பிற்சென்று பாங்கி தலைமகனை வரவு விலக்கல்.

185. அம்பிசைந் தாருஞ் சிரமுது குன்ற ரணிவரைமேற்
கம்பிசைந் தாருங் களத்தானை யெண்ணிய காவலநீ
வம்பிசைந் தாரும் பொழிலிருள் வாரல் மரச்சிறிய
கொம்பசைந் தாலு முறங்கா தெமது குறக்குடியே. (உ௪)

தலைமகன் மயங்கல்.

186. காலின் வளைமுத் துயிர்க்கு முதுகுன்றர் கார்வரைமேல்
வேலின் விளங்கிய கண்ணிவ ளன்பினின் வேறுரைவை
நூலி னுடங்கிய நுண்ணிடை வார்குழ ளெய்தினினீ
பாலின் விடத்தைக் கலந்தது போலப் பகர்ந்தனையே. (உ௫)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

187. விண்டிடு பூவார் தடஞ்சூழ் முதுகுன்றர் வெற்பிறைவா
மண்டிருள் கூரும் வழிபோ நினக்கு வருத்தமுற்ற
வண்டலர் தாமக் குழலாண் மனத்துயர் மாற்றுதற்குத்
தொண்டக மார்த்துன் பதிசேர் தமைதனைச்சொல் லுதியே.()

புணர்ந்தவன் சேறல்.

188. பொடியே யணியுந் திருமுது குன்றர் பொருப்பிடத்தில்
துடியே புரையுஞ் சிறுநுசுப் பாய்நுஞ் சுடர்ப்பசும்பொற்
கொடியே புரையுந் திருந்திழை நல்லோர் குடிகொளுமோர்
வடிவே விளக்கல வோவிருள் சேரும் வழியெனக்கே. (உ௭)

---

184. விளங்குறும் ஆய் - தாய்.

185. அம்பு - நீர். கம்பு - சங்கு. சிறிய மரக்கொம்பு. குறக்கொடி யெனவும் பாடம்; இதற்குத் தலைவி யென்று பொருள் கொள்க.

186. காலின் வளை - வாய்க்காலின்கண் உள்ள சங்கு. பாலின்...பகர்ந்தனையே: "வஞ்சங் கலந்த கலிவென்ற வாணன்றென் மாறைவெற்பிற், றஞ்சங் கலந்தசொற் றையலும் யானுந் தனித்தனியே, நெஞ்சங் கலந்த நிலைமையெல் லாங்கண்டு நீயமுதின், நஞ்சங் கலந்தனை யோநனை வார்குழ னன்னுதலே." தஞ்சைவாணன் கோவை, க௮எ.

187. நினக்கு - நின்பொருட்டு. தொண்டகம் ஆர்த்து - தொண்டகப் பறையை முழக்கி; இப்பறை குறிஞ்சி நிலத்துக்குரியது.

188. திருந்திழை வடிவே விளக்கு: "இணரொளி பரப்பிகின் றிருடு ரப்பன, திணிசுடர் நெய்யுடைத் தீவி ளக்கமோ, மணிவிளக் கல்லன மகளிர் மேனியே." கம்ப. நகரப். ௫௧.

## கச. இரவுக்குறி யிடையீடு.

### இறைவிக்கு இகுளை இறைவரவுணர்த்தல்.

189. கருகுங் களத்தர் திருமுது குன்றர் கவின்சிலம்பில்
முருகுங் கடியும் விரிமலர்ச் சோலையின் மொய்யிருள்வாய்
உருகு மனத்தி னிரண்டுமொன் றாக வுடனெருங்கிக்
குருகும் பெடையு முறங்காத் துழனியென் கொம்பனையே. (க)

### தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்குணர்த்தல்.

190. துன்பர் தமக்குத் துணையென நின்றவர் சொன்மனத்தில்
இன்பர் தமக்கங் கருண்முது குன்ற ரணிவரைமேல்
அன்பர் குறியென வேறோர் குறியி னடைந்துநெஞ்சம்
முன்பறி யாத துயர்கொண்டு மீண்டனன் மொய்குழலே. (உ)

### பாங்கி தலைமகன் தீங்கெடுத் தியம்பல்.

191. விந்த மடக்கு முனிதாழ் முதுகுன்றர் வெற்பிடத்திற்
குந்தங் கடக்குங் கொடுங்கூர் விழியுடைக் கொம்பனையாய்
சந்தங் கிடக்குந் தொடைத்தோளர் செய்குறி தாம்பிழைத்தார்
பந்தங் கடக்கு மூலைப்பசப் போநம் பகையென்பதே. (ங)

### தலைவன் புலந்து போதல்.

192. அனமே செறியுந் தடமுது குன்ற ரணிவரைமேற்
சினமே செறியு மரியு முழுவையுஞ் சேர்வனத்திற்
கனமே யுறழுங் குழற்கா விருள்வரக் கற்பனைசெய்
மனமே யெனது துயர்நீயு மேவி வருந்துவையே. (ச)

---

189. முருகு - தேன். கடி - வாசனை. இரண்டடலும் ஒன்றாக நெருங்கி: "ஒருருவை யீருருவா யுடைக்கின்ற துலகம்பே, ஈருருவை யோருருவா யிசைக்கின்ற தெனதம்பே" பாசவதைப் பரணி, காமன் கூற்று, கககூ.

190. துன்பர் தமக்குத் துணையென நின்றவர்: "அடுபழி யஞ்சா நீச ராயினு நினைக்கி னச்சம், படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும், விடுவகை யின்றி வேறு களைகணு மின்றி வீயக், கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி" (திருவிளை. மாபாதகந். ௬௫) என்னும் அருமைச் செய்யுள் இங்கே நினைவுக்கு வருகின்றது.

191. சந்தம் - அழகு, சந்தனம். பசப்போ: ஓகாரம் எதிர்மறை.

192. கற்பனைசெய் - கற்பித்த.

புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண்டிரங்கல்.

193. கலர்கண்டு முத்தி பெறுமுது குன்றர் கவின்சிலம்பில்
மலர்கொண்டு தாதி னரிசனம் பூசிமெய் வண்டினங்கள்
பலகொண்டு நின்றிடு பாடல மாதே பதியிருளென்
நலமுண்ட வன்பர்வந் தாரோவிக் காவி னவிலுவையே. (௫)

தலைமகள் பாங்கியோடு உரைத்தல்.

194. வாவித் தடமலர் சேர்முது குன்றர் மணிவரைமேற்
காவித் தடமல ரொவ்வாக் கருங்கட் கவினுடையாய்
தாவிற் செறிவினிச் சோலையிற் செய்குறி தப்பினர்நம்
ஆவிக் குரிய தடந்தோளின் மன்ன ரரையிருளே. (௬)

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்.

195. வானலங் கொண்ட திருமுது குன்றர் மணிவரையார்
தானலங் கொண்ட மொழிதவ றாது தண்ணளியால்
தேனலங் கொண்ட வரிதான் கணியினைச் சேர்ந்ததுண்டே
பானலங் கண்ட சருக்கரை மென்மொழிப் பைங்கொடியே. (௭)

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல்.

196. மாகத் தவர்கள் பணிமுது குன்றர் மணிவரைமேற்
சோகக் கடலு ளமைவீழ்த்தி நீர்முன் சொலும்வகைகள்
போகத் துறந்து வரவொழித் தீரும் புரிப்புதுமை
தாகத் துடன்கண்டு சார்ந்திருப் போமெனத் தங்கினமே. (௮)

---

193. தாதாகிய அரிசனத்தைப் பூசி; தாது - மகரந்தம்; அரிசனம் - மஞ்சள். வண்டினங்கள் - வண்டுகள், வளையல்கள். பாடல மாதே - பாதிரிமரமாகிய பெண்ணே!

194. தாவு - இடம்; திசைச்சொல்; "ஆயமின்னூர், தம்பால் விரைந்து செல் வாமினி நாமிந்தத் தாவகன்றே"(திருவாவடுதுறைக் கோவை, ௧௫௬.) இருளில் மன்னர் செய்குறி தப்பினரென இயைக்க.

195. அது தண்ணளியாகும்; ஆல்: அசை. அரி - மாலை; வண்டெனலுமாம். கணி - வேங்கைமரம். கண்டசருக்கரை - கற்கண்டு; இப்பெயர் கண்டு சருக்கரை யென்று பழைய உரைகளிற் காணப்படும்.

பி-ம். 'தவறாது தண்மையினால்,' 'கணியினைச் சேர்ந்ததுண்டோ'

196. புரி - ஊரினுடைய. உம்முடைய ஊருக்கு வர எண்ணியிருந்தே மென்பது கருத்து.

### இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பேற்றல்.

197. அலையி லிருந்தவன் றாழ்முது குன்ற ரணிவரைமேல்
மலையி லிருந்த வமுதனை யீருமை மன்னுறவெல்
நிலையி லிருந்த பொழிலெங்குந் தேடி நெடிதுநின்றேன்
இலையின் மறைந்த கனிபோன் றிருப்பி னிருப்பிரென்றே.(கூ)

### தலைமகள் குறிமருண்டமை தோழி தலைமகற்கு உரைத்தல்.

198. வான்செய்த பூசை கொளுமுது குன்றர் மணிவரைமேல்
தேன்செய்தபூம்பொழிற்கண்ணின்குறியெனச்சிந்தையினுற்
கூன்செய்த வார்குழ லல்ல குறிக்குக் கலங்கிநின்றே
நான்செய்த தீவினை யென்றுவந் தாளரு ளுயகனே. (கO)

### தோழி தலைமகன் சொல்லிய கொடுமையைத் தலைமகட்குச் சொல்லியது.

199. செல்லார் மலர்ப்பொழில் சூழ்முது குன்றர் செழுஞ்சிலம்பர்
கல்லா ரரியுடன் வேங்கையு மேவிய காரிருளின்
வல்லார் தனம்புணர் வேட்கையி னெஞ்ச மயங்கிநின்றே
அல்லார் குழலாய் வருந்திவந் தேனென் றறைந்தனரே. (கக)

### என்பிழைப்பன்றென்று இறைவி நோதல்.

200. நச்சிப் பணியும் விதிமுது குன்றர் நவில்சிலம்பின்
மெச்சிப் பணியும் விறற்கா வலரை விரும்பியின்று
நொச்சிக் கருமல ரூழ்நள் ளிருளினை நோக்கியுற்றும்
இச்சிப் பறமறந் தாளென் றலர்மொழி யெய்தினனே. (கஉ)

### தாய் துஞ்சாமை.

201. பாயு முழைகொள் காமுது குன்றர் பனிவரைமேற்
காயும் வடிவுடை வேலினர் செய்குறி காண்பதற்கிங்
கேயு முயிர்க ளிணைவிழி மூடினு மீன்றிடுநற்
தாயின் றுணைவிழி மூடா திருந்ததென் றன்வினையே. (கங)

---

197. எல் - இரவில்.

199. செல் - மேகம். கல் - மலை. அரியுடன் - சிங்கத்துடன்.

200. விதி நச்சிப் பணியும்; விதி - பிரமதேவர். பகைவர்கள் மெச்சிப் பணியும் விறல். ஊழ்த்தல் - பதனழிந்து வீழ்தல். நொச்சிக் கருமலர் ஊழ் நள்ளிருள்: "நொச்சிப் பூவுதிர் நள்ளிரு ணடுநாள்" கல்லாடம், உ.

201. வடி - கூர்மை; வடித்தலுமாம்.

பி-ம். 'என் றாழ்குழலே'

நாய் துஞ்சாமை.

202. கருவிற் புகுதா தருண்முது குன்றர் கவின்சிலம்பிற்
செருவிற் கொருவ ரெனும்விறன் மன்னவர் சேர்பொழுதிற்
பொருவிற் கொருவ ரிலாவனை துஞ்சினும் பொங்கிருளில்
தெருவிற் சுணங்கன் றுயிலா திரைந்ததென் சேயிழையே.(கச)

ஊர் துஞ்சாமை.

203. துதியைப் பொருந்துந் திருமுது குன்றர் சுடர்க்கிரிமேற்
பதியைப் பிரிந்த வெனது விழிதுயில் பற்றிலபோல்
நுதியைப் பொருந்து நெடுவேற் குறவர் நுவன்றிடுமூர்
மதியைப் பொருந்து முகத்தா யுறங்கா வழிபுகலே. (கரு)

காவலர் கடுகுதல்.

204. கார்காவல் கொள்பொழில் சூழ்முது குன்றர் கவின்சிலம்பில்
வார்காவல் கொண்முலைக் குன்று மருவியின் வார்விழிநீர்
ஏர்காவ னீக்கித் துயர்செயிரவி னிடையடங்கா
ஊர்கா வலர்பறை யோயா திருந்ததென் னொள்ளிழையே.(கசு)

நிலவு வெளிப்படுதல்.

205. துங்கம் பொருந்தும் பெருந்தோண் மகிணர் துயரகலச்
சங்கம் பொருவுங் களத்தாய் முதுகுன்றர் தண்சிலம்பிற்
பொங்குங் கடலிற் பிறந்தேழ் புவியும் புணர்நிலவின்
அங்க முழுது மறுவா யிருக்கி னழகியதே. (கஎ)

கூகை குழறுதல்.

206. தோகைக் கொருபுற மீந்தோர் முதுகுன்றர் தொல்வரைமேல்
வாகைக் கொருவ ரெனுநம் மகிணர் வரவெதிரப்
போகைக் கிடையஞ்ச வாய்குழ றுநின்ற புல்லறிவின்
கூகைக் கெதுபயன் கூடிடு மோமலர்க் கொம்பனையே. (கஅ)

---

202. செருவிற் கொருவ ரெனும்விறன் மன்னவர்: "வாகைக் கொருவ ரெனுநம் மகிணர்" (உ0சு) என்பர் பின். பொருவிற்கு - ஒப்பினுக்கு.

203. உறங்கா வழி - உறங்காதிருத்தற்குக் காரணத்தை.

204. கண்ணீர்க்கு அருவி உவமை.

205. நிலவின் - நிலவையுடைய சந்திரனது; நிலவு: சினையாகுபெயர்.

206. நாம் போகைக்கு என ஒருசொல் வருவிக்க. கூகை - கோட்டான்.

### கோழி குரற் காட்டல்.

207. மைக்கொண்டல் சூழும் பொழின்முது குன்றர் மணிவரைமேல்
வைக்கொண்ட வார்கணை நம்விழிக் கேற்ற மகிணனைக்கண்
டிக்கொண்டை வாரணந் தன்னையெப் போது மெழின்மலரார்
கைக்கொண்ட வேலவர் வந்தா ரெனக்குரல் காட்டியதே.(கக)

---

## கரு. வரைதல் வேட்கை.

### தலைமகளைப் பாங்கி பருவரல் வினாதல்.

208. ஆரணம் போற்றுந் திருமுது குன்ற ரணிவரைமேற்
பாரணங் கோவெனும் பைந்தொடி யாய்நின் பருவரற்குச்
சீரணங் காகு மனைகுறை யோபண்ணை செய்குறையோ
காரண மேது மனத்துள் ளதனைக் கழறுவையே. (க)

### தலைமகள் அருமறை செவிலி அறிந்தமை கூறல்.

209. நிலந்தன் பகலத் திகழ்முது குன்றர் நெடுவரைமேல்
வலந்தன் புடைகொளும் வேல்விழி யாயென் வருத்திடுவேன்
நலந்தன் புடைகொளும் பொன்னே ரனையின் னடுவிருளிற்
கலந்தன்பர் போகு மிடத்திற்கண் டாணங் களவினையே. (உ)

### தலைமகள் தலைமகன் வருந்தோழிற்கு அருமை சாற்றல்.

210. பற்றார் புரமெரி செய்முது குன்றர் பனிவரைமேல்
நற்றாய் முடுவல் குறிச்சி துயின்றில நண்ணுறுங்காப்
புற்றார் வருத்துவர் திங்க ணிலவுறு மோங்கிசைகள்
வற்றாக் குடிஞையுஞ் சேவலு மென்றுயர் மாற்றிலவே. (ங)

---

207. வை - கூர்மை. கொண்டை - தலையிலுள்ளசூட்டு; "பூந்தலை வாரணப்போர்" (சீவக. 120.) வாரணம் - கோழி. மலரார் கை - மலர்போன்ற கை; ஆர்: உவமவுருபு. வேலவர் - வேலையுடைய முருகக்கடவுள். வாரணம் காட்டியது.

பி-ம். 'தம்மையெப் போதும்'

208. பார் அணங்கோ - பூமியிலுள்ள தெய்வமகளோ. அணங்கு ஆகும் அனை குறையோ - துன்பஞ் செய்பவளாகிய தாயால் நேர்ந்த குறையோ. பண்ணை - மகளிர் கூட்டம்.

209. வலம் - வெற்றியை. பொன் நேர் அனை - திருமகளை ஒத்த தாய். இல் நடு இரவில் - வீட்டில் நள்ளிரவில்.

210. முடுவல் - நாய். குறிச்சி - குறிஞ்சிநிலத்தார். காப்புற்றார் - ஊர் காவலர். குடிஞை - கோட்டான். மாற்றில: அதிகப்படுத்தின என்பதுகருத்து.

தலைமகள் தலைமகன் ஊர்க்குச் செல ஒருப்படுதல்.

211. மண்ணுக் கினிய திருமுது குன்றர் மணிவரைநங்
கண்ணுக் கினியர் நமைமறந் துற்ற கவின்பதிக்கு
நண்ணித் துயரினைக் கூறுது மோவிண் ணகைமதிபோற்
பெண்ணுக் குயரெழில் பெற்றிடு வாண்முகப் பெய்வளையே.(௪)

பாங்கி இறைவனைப் பழித்தல்.

212. துன்பிற் படுமெனை யாண்முது குன்றர் சுடர்க்கிரிமேல்
முன்கற் புனத்திடை நம்மைத் தொடர்ந்து மொழியிதத்தால்
வன்பிற் புணர்ந்து மறந்தார் பதியிடை வல்லிருளின்
அன்பிற் றொடரிற் றகுமோ நமக்கிங் கவிரிழையே. (௫)

தலைமகள் இயற்பட மொழிதல்.

213. செம்மைத் திருமுக மஞ்சுடை யார்முது சீர்மலையார்
நம்மைப் புரந்தவவ் வெற்பரை நோவது நன்றலமுன்
தம்மைத் தொடர்ந்த வினைப்பய னென்பதைச் சார்குநர்க்குக்
கொம்மைத் தடமுலை வார்குழற் கூர்ங்கட் கொடியிடையே. ()

தலைமகள் கனவு நலிவுரைத்தல்.

214. கற்பனை யொன்று மிலாமுது குன்றர் கவின்சிலம்பிற்
பொற்புறு தோள ருடல்வருந் தாதெனைப் பொங்கிருளிற்
சொற்பன மொன்று தினம்புணர்ந் தாரவர் சூழ்ச்சியைநீ
விற்பன மாக வறிந்திலை வார்குழன் மெல்லியலே. (௭)

தலைமகள் கவின் அழிவுரைத்தல்.

215. விண்டடுத் தோங்கு முதுகிரி வாணர் வியன்சிலம்பில்
வண்டடுத் தார்க்கும் வணர்வார் குழலுடை மானனையாய்
பண்டடுத் தார்புனம் வந்தவர்க் கன்றிப் பயனடையா
துண்டுடுத் தீயார் பொருள்போன் றதென்ற னுடலழகே.(௮)

---

211. பதிக்கு - பதியை; உருபுமயக்கம்.

213. முதுசீர்மலை - முதுகுன்றம். சார்குநர்க்கு நோவது நன்றல்லவென இயைக்க.

214. சொற்பனம் - கனவு; "சொற்பன மோவென்ன வற்புத மோவங்குத் தோன்றியதே" (திருவாவடுதுறைக் கோவை, 34.) ஒன்று தினம் - பொருந்திய தினத்தில். விற்பனம் - விந்தை.

215. விண்ணைத் தடுத்து. பயனடையா......அழகே: "ஈயார் பொருளு மிறையாக் கிணறுமென......நலமிழந்தேன்." திருவெங்கைக். 219.

தலைமகள் தன்துயர் தலைமகற்கு உணர்த்தல் வேண்டல்.

216. முன்னோர் சசிவன்னன் சூழ்முது குன்றர் மொழிவரைமேல்
என்னோர் குறையினைக் காவலர் பாற்போ யிசைப்பவர்தாம்
பின்னோர் குறையு மடையாம லென்றும் பெரும்புவியில்
மன்னோர் பணிய நெடுநா ளிருப்பர் வளமுறவே. (கூ)

பாங்கி நின்குறை நீயே சொல்லெனச் சொல்லல்.

217. எட்டா ருருவர் திருமுது குன்ற ரெழில்வரைமேல்
மட்டார் மலர்செறி வார்குழ லாய்நின் வடிவிடைமால்
விட்டா ரலரெனின் வேறே யொருவர் விளம்புவதென்
ஒட்டார் பரவு நெடுவேற் கரங்கொ ளொருவருக்கே. (கo)

தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக் கிளவி.

218. கனங்க டவழுந் திருமுது குன்றர் கவின்சிலம்பிற்
புனங்க டிரிந்து நமையவர் கண்ட பொழுதநங்கன்
சினங்கள் புரிந்தெய் மலர்க்கணை தம்மினுஞ் சேயிழைநஞ்
சனங்கள் புகலு மலர்மொழி நெஞ்சிற் றரிப்பரிதே. (கக)

ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி.

219. விளைகொள் வயல்புடை சூழ்முது குன்றர் வியன்சிலம்பிற்
றுளைகொள் கரமுடைத் தோலு முழுவையுஞ் சூழ்புனத்தில்
வளைகொள் கரமுடை மாதே யவர்வந்து போம்வழியிற்
களைகொள் ளெனது மனம்போய்த் தொடர்ந்து கலந்திடுமே. ()

---

216. சசிவன்னனென்பவன் வழிபட்டுப் பேறுபெற்றமை, இத்தல புராணத்திலுள்ள சசிவன்னச் சருக்கத்தால் விளங்கும். காவலர் - தலைவர்.

பி-ம். 'இசைத்தவர்க்குப்'

217. எட்டாருருவர் - பிருதிவி முதலிய எட்டாகிய திருவுருவத்தையுடையவர்; "அட்டமூர்த்தி வெண்காடடை நெஞ்சே" (தே. திருநா); "அட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான்" (கம்ப.) மட்டு - தேன், மணம். அலரெனின் - அல்லராயின். ஒட்டார் - பகைவர்.

பி-ம். 'விளம்புமதென்'

218. கனம் - மேகம். அநங்கன் - மன்மதன்.

பி-ம். 'புரிந்து மலர்க்கணை யெய்யினும்'

219. தோல் - யானை. களைகொள் - களைத்தலைக்கொண்ட. மனம் போய்த்தொடர்ந்து கலந்திடும்; "அடும்பின் மென்கொடி துமியக் கடும் பகற், கொடுங்கழி மருங்கின் வந்தருள், நெடுந்தோ ளண்ணல்பின் சென்ற தென் னெஞ்சே" பழம்பாட்டு.

காமமிக்க கழிபடர் கிளவி.

220. விதிசா ரதியாக் கொளுமுது குன்றர் வியன்சிலம்பிற்
பதிசார் விலாத வெனைப்போல் விழிதுயில் பற்றிலிர்நீர்
மதிசா ருயர்வு கொளும்பா டலத்தின் மருவளிகாள்
துதிசார் சுரும்பின நீங்கின வோவிங்ஙன் சொல்லுவிரே. (கங)

இதுவுமது.

221. நம்பா லருளுடை நன்முது குன்றர் நவில்சிலம்பர்
தம்பான் மனம்வைத் தெனைப்போற் றணந்து தளர்ந்தனையோ
அம்பாற் குழைந்துதென் காலா லசைந்தேயளிவிழச்சேர்
வம்பா ரலருடன் பொன்பூத்த மேனி வழையணங்கே. (கச)

தலைமகள் நெறி விலக்குவித்தல்.

222. செற்றார் புரமெரி செய்முது குன்றர் செழுஞ்சிலம்பில்
நற்ரு யினுமவர் நல்லவ ராகி நவிலவர்பால்
உற்ரு ரெனின்வல் லரிதிரி கானி லுருதொழியச்
சொற்ரு ரெனின்முன் பறியாத செல்வமுந் தேய்குவரே. (கரு)

தலைமகள் குறிவிலக்குவித்தல்.

223. முறிச்சிக்கை நம்பிகட் செய்முது குன்றின் மொழிமனற்கு
மறிச்சுப் புனங்காப் பதற்கனை போக வகுத்தனணீர்
நெறிச்சிக் குடைய விலங்கினஞ் சாரு நெடுமலைச்சார்
குறிச்சிக் கிருளில் வராதொழி வீரெனக் கூறுகவே. (கசு)

---

220. விதி - பிரமதேவனை. பதி - தலைவர். அளிகளென்றது பெண் வண்டுகளை. சுரும்பென்றது ஆண்வண்டுகளை.

221. அம்பால் - மன்மத பாணத்தால், நீரால். அளி விழ - அன்பு நீங்குதலால், வண்டுகள் வந்து விழுதலால். அலர் - பழிமொழி, பூ. பொன் - பசலை, பொன்னிறம். வழை - சுரபுன்னை.

222. அரி - சிங்கம்.

223. முறிச்சிக்கை - ஆவண ஓலையில் அகப்படுத்திக் கொள்ளுதலை. நம்பிகண் - சுந்தரமூர்த்தி நாயனரிடத்தே. மன்னற்கு - அரசனுக்கு. மறிச்சு= மறித்து - மறுபடியும். நெறிச்சிக்கு - பல வழிகளும் கலந்திருத்தல். மன்னற்குக் கூறுகவென இயைக்க.

பி-ம். 'குன்றர் மொழிமனற்கு', 'கூறுமின்னே.'

### வெறி விலக்குவித்தல்.

224. மன்னா ரிசைகொளுஞ் சீர்முது குன்றர் வரையணங்கே
இன்னா ரிசைகொள் ளசுணம் பறையடி யேற்றதொப்ப
ஒன்னார் பரவும் புரவல ராற்பிணி யுற்றவெற்கு
மின்னா ரனைவெறி யாட்டயர் வித்திட வேண்டினளே. (கஎ)

### பிறர் விலக்குவித்தல்.

225. கரும்பாடு மோசை கொளுமுது குன்றர் கனகவெற்பில்
அரும்பா முலைவிலை பொன்மணி வேண்டிய வானையின்மேல்
சுரும்பார் குழலி கொணர்ந்தா ரெனல்செவி சூழனற்போல்
விரும்பா துவந்தனவென்செய்கு வேனிம்மிகுதுயர்க்கே. (கஅ)

### குரவரை வரைவெதிர்கோள்ளுவித்தல்.

226. சங்கூர் வயன்முது குன்றர்தம் வெற்பிற் றடங்கணிநீ
நங்கூ ரயிலுடைக் குன்றினர் நின்சொ னலமதென்பர்
தங்கூழ் விதிகற்பு மானனை யார்க்கெனச் சாற்றினையேற்
பைங்கூழ் மழைகண் டதுபோலப் போகம் பருவரலே. (கக)

---

## கசா. வரைவு கடாதல்.

### வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

227. கொங்காற் சிறந்த விதழி முதுகுன்றர் கூர்வரைத்தாய்
நங்கா தலிவிழி நீருட னிற்ற னவிலுகென்னச்
செங்காற் பசுங்கிளி சொற்கேட் கிலவெனத் தேம்பினளென்
றங்காற் பிறிது மறைத்துரைத் தேன்மல ராயிழைக்கே. (க)

### அலரறிவுறுத்தல்.

228. கணிப்பில் புகழுடை நன்முது குன்றர் கவின்சிலம்பா
தணிப்பி லுனது வடிவாகுந் தென்றன்மெய் தாக்குதலாற்

---

224. அசுணம் பறையேற்ற தொப்ப: "அசுணங் கொல்பவர் கைபோ னன்றும், இன்பமுந் துன்பமு முடைத்தே" நற்.304: 8-9

225. "பொருபான்மதி" (தஞ்சை. 226) என்னும் செய்யுள் இதனோடு ஒப்பிடற்பாலது.

226. பைங்கூழ்......பருவரலே: "நாடன், வந்தனன் வாழி தோழி யுலகம், கயங்க ணற்ற பைதறு காலைப், பீளொடு திரங்கிய நெல்லிற்கு, நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே" நற். 22: 7-11.

227. கணிப்பு - அளவு.

பணிப்பின் னிடுமல்குற் பைங்கொடி யாதும் பசுங்கொடிதான்
துணிப்பி லலரொடு தோன்றிய தெங்கள் சொலும்பதியே. (உ)

## தாயறிவுறுத்தல்.

229. எய்த கணையரி யாமுது குன்ற ரெழிற்சிலம்பா
கொய்த மலரணி வார்கூந்தன் மாதின் குறைவறுமெய்
செய்த மணியோ வியம்போல நின்றநின் றிண்புயத்திற்
கைதை மணமத ஞலறிந் தாணுங் களவனையே. (௩)

## வெறியச்சுறுத்தல்.

230. காத்திற் படுபிணிக் கின்கான் முடமெனக் கட்டுதல்போல்
அரத்திற் கசைவறு வேற்கணி நின்னு லயர்பிணிக்குப்
புரத்திற் கெரிவிடும் வாய்முது குன்றர் பொருப்பிறைவா
வரத்திற் கவின்பெறத் தாய்வெறி யாட்டை மதித்தனளே. (௪)

## பிறர்வரைவுணர்த்தல்.

231. பணியாகப் பாம்பைக் கொளுமுது குன்றர் பனிவரையாய்
கணியாகக் கந்தனைச் செய்தாள் பிறந்த கவின்மரபுக்
கணியாக வந்திடு மெம்பெரு மாட்டிக் கணியணிந்து
தணிவாய் வரைய நினைந்தே யரசர்கள் சார்ந்தனரே. (௫)

## வரைவெதிர்வுரைத்தல்.

232. தும்பை யணிந்த சடையார் முதுகுன்றர் தொல்வரையாய்
வம்பை யணிந்த மலர்வார் குழலியை மன்பதைமுன்
கொம்பை யணிந்த வியமார்ப்ப நீமணங் கொள்ளவரின்
அம்பை யணிந்த குறவோர் மகிழ்வதற் கையமின்றே. (௬)

---

228. கொடி அலரொடு தோன்றிய தென்பது இதிலுள்ள நயம். உன்னென்றது தலைவனை.

229. அனை - செவிலித்தாய்.

பி-ம். 'அறிந்தாணங் களவனையே'

230. காத்திற்......கட்டுதல்போல்: "தலைமேற் படுமெறிக் கோர்கான் முடக்குந் தகைமையென்னக், கொலைமேற் பயிலு மெமர்வெறி யாடல் குறித்தனரே" திருவெங்கைக். 234.

பி-ம். 'நின்னு லமர்பிணிக்கு'

231. பணியாக - ஆபரணமாக. கணி - வேங்கை மரம். செய்தாள் - வள்ளிநாயகியார்.

232. வம்பு - மணம்.

### வரையுநாளுணர்த்தல்.

233. சூலுக் குளைவளைச் செய்முது குன்றர் சுடர்ச்சிலம்பா
சேலுக் குறழ்கணி கொங்கை சுணங்கினைச் சேர்ந்ததுநீள்
மாலுக் குறழ்கணி பொற்றூ துகுத்தன வான்மதியம்
பாலுக் கணிந்திடு மூரு மணநாள் பகர்ந்ததுவே. (௭)

### தலைமகளறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்.

234. தன்னைக் கடுத்தவ ரின்முது குன்றர் தடஞ்சிலம்பா
பொன்னைக் கடுத்த வெமதா யிழைநினைப் புந்தியில்வைத்
தென்னைக் கரந்து நினைப்பழி கூறுவ னென்றதனாற்
பின்னைப்பிறமொழியொன் றுஞ்சொல்லாதுபிறங்கினளே. (௮)

### குறி பெயர்த்திடுதல்.

235. சீரார் பெருமைத் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பா
சேரா ரலர்மொழி சொல்லினுஞ் சொல்லுவர் தீங்கறவே
காராரு மிப்பொழில் விட்டோர் பொழிலிற் கவின்பெறவே
தாரார் குழலி யொடுவிளை யாடத் தருமுனக்கே. (௯)

### பகல் வருவானை இரவு வருகென்றல்.

236. சூலக் கரத்தர் திருமுது குன்றர் சுடர்ச்சிலம்பா
கோலக் கணைக்கண் புணர்முலைச் செவ்வாய்க் கொடியிடைதன்
நீலக் கருங்குழல் போலிருள் சேர்ந்து நிகழிரவிற்
சேலக் கொடிமத னல்விழ வெய்திடச் சேர்ந்தருளே. (௧௦)

---

233. *நீள் மாலுக்கு உறழ்* - நீண்ட திருமாலை ஒத்த. *கணி* - வேங்கை மரம். *ஊர்* - பரிவேடம்; பரிவேடத்தைக் கோட்டை யென்று வழங்குவர். வேங்கைமரம் மலர்தலும் சந்திரன் பரிவேடத்தை உறுதலும் மணநாளைப் புலப்படுத்துவன என்பர்: "வேங்கையு மொள்ளிணர் விரிந்தன, நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே" அகநா. 2: 16-7.

234. *தன்னைக்கடுத்தவர்*: "தாமே தமக்கொப்பு மற்றில்லவர்" (திருச்சிற். 22.8) *பொன்னை* - திருமகளை. பழிகூறுவ னென்றதனால் என்னைக் கரந் தென இயைக்க. *என்னைக்...பிறங்கினள்*: "தன்னெவ்வங்கூறினு நீசெய்த வருளின்மை, என்னையு மறைத்தாளென் றோழி யதுகேட்டு, நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றானஞ்சி" கலி. 44: 8-10.

பி-ம். 'கூறுவ ரென்றதனாற்'

236. *குழல் போலிருள் சேர்ந்து நிகழிரவு*: "கொன்காட்டி லுன்குழல் போலே யிருண்டவிக் கூரிருள்வாய்" (திருவெங்கைக். 182.) *மதன்விழவு*: "காமவேள் விழவாயின்" கலி. 27: 24.

இரவு வருவானைப் பகல் வருகென்றல்.

237. சங்கந் தவழ்பணை சூழ்முது குன்றர் தடஞ்சிலம்பா
சிங்கந் தனைநிகர் மெல்லிடை நிற்காச் செழும்புனத்தில்
அங்கந் தழையிற கெங்கும் விரித்த வணிமயில்கள்
பொங்குந் தனிநட நோக்கும் பகலினிற் போந்தருளே. (கக)

பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.

238. அகலுந் தடப்பொழில் சூழ்முது குன்ற ரணிவரைமேற்
புகலும் பெருந்திறற் றிண்டோ ளுழவரிற் போர்வலியோய்
இகலும்பகைகொலும்வைவேனெடுங்கணிவள்பொருட்டாற்
பகலு மிரவும் வரல்வேண்டு நீயிப் பகர்குறிக்கே. (கஉ)

பகலினும் இரவினும் அகலிவனென்றல்.

239. நெல்லுங் கரும்புஞ் செறிசெய் முதுகுன்றர் நீள்வரையாய்
கல்லும் வனமு மிடையு நெடிய கடுநெறியின்
வல்லு முகையு மிணையற வுற்று வருமுலைக்கா
எல்லு மிரவும்வா ராதொழி வாயிங் கியல்குறிக்கே. (கங)

தலைமகன் நாடு மூருங் குலனு மரபும் புகழும்
வாய்மையுங் கூறல்.

240. வான்றொட்ட கோபுரஞ் சேர்முது குன்றர் மணிவரையாய்
கான்றொட்ட கூந்தலை நீவரை யாது கலந்தனையேற்
றேன்றொட்ட சோலைநின் னூடும் பதியுஞ் செழுங்குலமுங்
கோன்றொட்ட நற்குடி யும்புகழ் வாய்மையுங் கோதுறுமே. ()

ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி.

241. விசையன் றனுவடி கொண்முது குன்றர் வியன்சிலம்பா
திசையின் றெனவிருள் சேர்நள் ளிரவிற் சிறுநெறியில்
நசையென் றெழிற்றிரு வன்னவட் காக நவில்குறிப்பால்
வசையின் றெனநீ வருவது நீங்கி வதிகுவையே. (கரு)

ஆற்றுத் தன்மை யாற்றக் கூறல்.

242. கருவேலை வீழா தருண்முது குன்றர் கவின்சிலம்பில்
இருவேலை யாறு மொருவாது பாயு மெனமயலாம்

---

237. மெல்லிடை - தலைவி. மயிலின் நடம் பார்த்தல்; திருச்சிற். 118; இறை. சூ. உ, உரை.

239. வல் - சூதாடுகருவி. இணை - ஒப்பு.

241. குறிப்பால் - குறியினிடத்தில்.

பி-ம். 'திசையன் று,' 'நள்ளிருளிற்,' 'நசையென் றெழிற்'.

வருகோடை யால்வெம்பி வாடித் தவிக்கு மலர்க்கொடியை
இருகோடுபோற்புயத்தாய்மணஞ்செய்தினிதெய்துவையே. ()

காவல்மிகவுரைத்தல்.

243. நடமாடு நாயொடு காவல ருந்துயி லெண்ணிடினும்
தடமார் முதுகுன்றர் தண்சிலம் பாவனை சாய்ந்துறங்காள்
படமா ரரவு நெறியிடை யூரும் படரிருள்வாய்
விடமார் கருங்கணின் மெல்லியற் காகநீ மேவலையே. (கஎ)

காமமிகவுரைத்தல்.

244. மாகத் தளவு பொழின்முது குன்றர் வளர்சிலம்பா
சோகப் பிணிகொண் மடவாள்வெங் காமத் துயர்க்கடற்குக்
காகத் திருவிழிக் கோர்பாவை போலக் கருதுமிரண்
டாகத் துயிரெனு நீயே பிணைவரைந் தாற்றுவையே. (கஅ)

கவினழிவுரைத்தல்.

245. அனங்கேடு மைந்து முடியென வேகொடி யார்சிகரி
வனைந்தா டகவெயில் சூழும் பழமலை வாணர்வெற்பா
தனந்தார் குழலெழில் வாடப் பசப்புத் தழைத்ததன்பால்
மனந்தான் விடுத்தெதிர் பார்த்தொளி சோர்ந்தது வாள்விழியே.(ககூ)

கனவுநலிவுரைத்தல்.

246. விண்போற் சிறந்த திருமுது குன்றர் வியன்சிலம்பா
பண்போற் சொலியுனை நன்பகற் காட்டிப் பரிந்திரவிற்
றிண்போர்த் திரடோள் பொருந்துங் கனவுந் திகழ்ந்திடலாற்
கண்போற்பிறவுறுப்பில்லையென்றோர்ந்தனள் காரிகையே.(உ0)

---

242. கரு வேலை - பிறவியாகிய கடலில். இருவேலை என்றது தலைவியின் கண்களை. என - என்று கண்டோர் சொல்லும்படி. வேலை ஆருய்ப்பாயு மென்பது ஒரு நயம். கோடு - சிகரம்.

243. அரவு நெறியிடை யூரும்: "முன்னா ரரவுந் தெரியா விருணெறி" தஞ்சை. 187.

244. காகத்......நீ: 374; "காக்கை யிருகணி னொருமணி போலக், குன்றுகெழு நாடற்குங் கொடிச்சிக்கும், ஒன்றுபோன் மன்னிய சென்றுவா ழுயிரே" (தொல். களவு. சூ. 23, மேற்.); "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர், ஆகத் துளோருயிர் கண்டனம் யாம்" திருச்சிற். 71.

245. விழி ஒளிசோர்ந்தது: "கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே" (குறுந். 44); "வாளற்றுப் புற்கென்ற கண்ணும்" குறள், 1261.

246. கண்போற் பிறவுறுப் பில்லை: "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யாவதுங் காட்டியதே" தஞ்சை. 4.

## கஎ. ஒருவழித் தணத்தல்.

தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல்.

247. பொன்பதித் தோழர் திருமுது குன்றர் பொருப்பிடத்தில்
நின்பதிக் கோரமு தாகிய கோதையை நின்னையல்லால்
அன்பதிக் கில்லை யெனநின் றவளை யணியிழையாய்
என்பதிக் குப்போய் வருமள வுந்நீ யினிதருளே. (க)

பாங்கி தலைமகனைச் செலவு விலக்கல்.

248. கம்மூர் பொழில்புடை சூழ்முது குன்றர் கவின்சிலம்பா
விம்மூர் பசலை கொளுமுலை மாதை விரும்பலிரங்
கும்மூ ரவர்களைக் கண்டான் மறந்தே யுறைந்திடுவீர்
எம்மூ ரகன்று முறையல நீர்பிரிந் தேகுதலே. (உ)

தலைவன் நீங்கல் வேண்டல்.

249. சோலைப் புறமுடைச் சீர்முது குன்றர் சுடர்க்கிரிமேல்
நூலைப் பொருவு மிடையாள் வருந்திட நேக்கியுற்றுஞ்
சேலைத் தடம்பதிக் கேகித் திரும்பச் செயலுடைத்தால்
மாலைப் பொழுதில் விரைந்தே வருகுவன் வார்குழலே. (ங)

தலைமகனைப் பாங்கி விடுத்தல்.

250. சேவிற் றிகழுங் கொடிமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
ஏவிற் றிகழுங் கருங்கணி னீர்சேர்ந் திருப்பவள்பாற்
பாவிற் சுழலுங் குழல்போ லடிக்கடிப் பண்பொடுற்று
மேவிப் பிரிகுவை யும்மூ ரிடத்தினில் வேலவனே. (ச)

பாங்கி தலைவிக்கு அவன்செலவுணர்த்தல்.

251. கொன்றைச் சடைமுடி நன்முதுகுன்றர் குளிர்சிலம்பிற்
குன்றைப் பொருமுலை மின்னனை யன்பர் கொடிநகர்க்குச்

---

247. பொன்பதித் தோழர் - திருமாலின் தோழர்; பதி - கணவன். திக்கு - புகலிடம்; "தேசிகனே நீகண்டாய் திக்கு" அருணகிரியந்தாதி, 2.

248. பிரிந்தேகுதல் முறையல.

பி-ம். 'விரும்பலையங்', 'மறைந்தே யுறைந்திடுவீர்'.

249. பி-ம். 'திரும்புஞ் செயலுடைத்தால்'

250. ஏவின் - அம்பைப்போல; ஏ - அம்பு. பாவிற் சுழலுங் குழல்: "பாவி னேடுவண் குழலெனத் திரிதலைப் பாராய்" பிரபு. வசவண்ணர். 12.

சென்றிப் பொழுதினி லேவரு வேனெனச் சென்றனராற்
குன்றிப் பருவரல் கொள்ளா துனையுறக் கூறியின்றே. (ரு)

தலைவி நெஞ்சோடு புலத்தல்.

252. மஞ்சார் கொடிமதில் சூழ்முது குன்றர் மணிவரைப்பால்
நஞ்சார் கரியெதிர் நண்ணிய போது நமைமனத்தில்
அஞ்சா துறுமென் றளித்தாவி தந்த வருளுடையார்
நெஞ்சே பிரிந்து கொடுமைசெய் தாலென் னிகழ்த்துவதே. (சு)

சென்றோன் நீடலிற் காமமிக்க கழிபடர்கிளவி.

253. விரிகா முதுகுன்றர் வெற்பரை நீங்கி விழிதுயில்போய்க்
கருகா வுடம்பொடு நின்றேனுக் கொன்று கழறுகிலாய்
பெருகா வருளுட னுன்றுணை யோடு பெரிதுவந்தே
ஒருவா மலரணைக் கண்டுயின் மேவி யுறுகுருகே. (எ)

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

254. நம்மைப் பிரிந்தார் பதிக்கே புகுந்து நவின்றவவர்
தம்மைப் பொருந்துறுஞ் சீரினைப் பாடுவஞ் சார்பெரிய
அம்மைப் பரிவு பெறுமுது குன்ற ரணியணங்கே
செம்மைத் தடமலர் நங்கருங் கூந்தற் செருகுவமே. (அ)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமை உணர்த்தல்.

255. சேணைப் பொருந்து மதின்முது குன்றர் சிலம்பிடைநின்
நாணைக் கடந்த விழிநீர் வறப்பவு நல்லணிசேர்
பூணைத் தரித்த முலைமேற் பசப்பினைப் போக்கிடவும்
தூணைக் கடுத்த புயத்தார் விரைவுடன் றோன்றினரே. (கூ)

---

251. அனை - அன்னை; என்றது தலைவியை; விளி. குன்றிப் பருவரல் - குன்றுகின்ற இப்பருவரல்; குன்றிமணி யளவாகிய பருவரல் எனினுமாம்; பருவரல் - துன்பம்.

252. நஞ்சுஆர் - நஞ்சை ஒத்த. கரி - யானை; 340.

253. என்னிடத்தே பெருகாத என ஒரு சொல்லை வருவிக்க. குருகே - நாரையே!

254. "ஆடுகம் வாநம் மகன்றவ ரூரக லாப்புதுநீர், பாடுகம் வாபொற் பசலைதந் தார்திறம் பாங்கினெல்லாம், தேடுகம் வாதஞ்சை வாணனன் னாட்டன்பர் தேர்வழிநாம், சூடுகம் வாகவ லீர்தவர் கானற் றுறைமலரே"(தஞ்சை. 255) என்னும் செய்யுள் இங்கே ஒப்புநோக்கற்பாலது.

255. நாணைக் கடந்த விழி: "நாணில மன்றவெங் கண்ணே" குறுந். 35.

பி-ம். 'பசப்பையும் போக்கிடக்கற்'

பாங்கி வந்தோன்றன்னொடு நொந்து வினாதல்.

256. கொந்தார் கடுக்கைத் திருமுது குன்றர் குளிர்சிலம்பா
நொந்தாவி சோருந் திருவினை நீகண்டு நும்பதியிற்
சிந்தா குலந்தீர்ந் துறைந்து மறந்தனை செப்பிலுன்போற்
சிந்தார் புவியிடை வன்கணர்க் கண்டிலந் தேர்ந்திடினே. (௧௦)

தலைவன் பாங்கியோடு நொந்து வினாதல்.

257. வேனிற் றுணைவன் மலர்வாளி பாயந்த வெய்யபுண்ணின்
வானிற் கலைமதி வெங்கதிர் பாய வருந்தெனைப்போற்
றேனிற் பெருமழைக் காமுது குன்றர் திருந்திழையீர்
ஊனிற் படுமுயி ரெவ்வாறு தாங்கி யொதுங்கினிரே. (௧௧)

பாங்கி தலைவியை ஆற்றுவித்த அருமை
தலைமகற்கு உரைத்தல்.

258. கூற்றைக் கடந்த பதமுது குன்றர் குளிர்சிலம்பா
மாற்றிப் பெருந்துய ரல்லும் பகலும் வகுத்தசொல்லால்
காற்றைப் பிடித்துக் கரகத் தடைத்த கதையெனவே
தேற்றிக் கடத்தின னீசெல் தினங்களைச் சேயிழைக்கே (௧௨)

---

## ௧௮. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

என்பொருட் பிரிவுரை ஏந்திழைக் கென்றல்.

259. தன்பொற் பதங்க ளருண்முது குன்றர் தடஞ்சிலம்பில்
நின்பொற் றனங்கொள் விலைதர நெஞ்சி னினைந்தவராய்
உன்சொற் றவறு மயிலனை யாட்கென் னுரையெனநீ
நன்சொற்புணர்த்தியகல்வமென்றாரென்றிந்நாளுரையே. (௧)

பாங்கி நின்பொருட்பிரிவுரை நீ அவட்கென்றல்.

260. நீர்மலி வேணித் திருமுது குன்றர் நெடுஞ்சிலம்பா
சீர்மலி செல்வத் திடைகலி சேர்ந்திடு செய்தியைப்போற்

---

256. சிந்து ஆர் - கடல் சூழ்ந்த.

257. வேனிற்றுணைவன் - மன்மதன்.

258. பெருந்துயரை மாற்றி. காற்றைப் பிடித்துக் கரகத்தடைத்தகதை: "காற்றைப் பிடித்துக் கரகத் தடைத்து" (சிலப். அடியார். சிறப்புப்); "காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி" தாயுமானவர்.

259. பொற்பதங்கள்: "பொன்னார் திருவடிக்கு" திருநா. தே.

கீர்மலி கூந்தலின் பற்றினிற் றுன்பைக் கலந்திடுதல்
ஏர்மலி நீயே பொருட்பிரி வாக விசைத்தகலே. (உ)

நீடே னென்றவ னீங்கல்.

261. வல்லிற் றிகழு மணிமுலை யாய்மக மேருவென்னும்
வில்லிற் றிகழ்முது குன்றர்தம் வெற்பில் விளங்கிழையை
எல்லிற் றிகழுந் தினமணி மேற்றிசை யெய்துறநீர்
அல்லிற் றிகழுஞ் சுடர்காண் குறுமுன் னடைகுவனே. (௩)

பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தல்.

262. வரளை குதிக்குந் தடமுது குன்றர் மணிவரையார்
பாளை விரிக்குங் கமுகின் கழுத்துடைப் பைங்கொடியாய்
ஆளை முனிந்து வரிதிரி நங்குன் றகன்றுனையே
நாளை மணஞ்செய் முலைவிலைக் காக நடந்தனரே. (௪)

தலைமகள் இரங்கல்.

263. அன்னஞ் செறிதடஞ் சூழ்முது குன்ற ரணிவரையார்
பின்னம் புடைய திணிதோட் குறவரின் வெய்யவராய்
முன்னம் புனத்திற் பிரிகில மென்ற மொழிபிறழ்ந்து
வன்னெஞ் சுடையவ ராய்ப்பிரிந் தாரவர் வார்குழலே. (௫)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

264. புனத்திற் கிளிக டினையோ டிறவினைப் போக்குதலை
மனத்திற் றரியா தவருன் பிரிவினை மாற்றுதற்காத்
தனத்திற் குறுவிலைக் கேகினர் பாற்குறை சாற்றலென்னீ
அனத்தற் கருள்சிவ னூர்முது குன்றி லணியிழையே. (௬)

---

260. கலி - வறுமை; நளன் செல்வத்தை அனுபவித்தபொழுது கலிபுருஷன் இடையே அவனை அடைந்தமை இங்கே அறிதற்பாலது.

261. வல் - சூதாடுகருவி. எல் - ஒளி. தினமணி - சூரியன். சுடர் - தீபம்; மகளிர் மாலையில் விளக்கேற்றுதல்: "வினைமுடித் தன்ன வினியோள், மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே" (நற். 3.); "மாலைமணிவிளக் கங்காட்டி" (சிலப். 9: 3).; அந்திக் காலத்திற்குள் வருவேனென்பது கருத்து.

262. வரி - புலி; கோடுகளையுடையதென்பது; ஆகுபெயர்.

263. அம்புடையதோள், திணிதோள்.

264. அனத்தற்கு - பிரமதேவர்க்கு.

தலைமகள் கொடுஞ்சொற் சொல்லல்.

265. வண்டுஞ் சுரும்பும் படிகா முதுகுன்றர் மானனையாய்
கண்டும் புரிதுய ரென்மேற் கருணை கடக்கினுநீ
மண்டும் பெருவிலங் கெப்போது நீங்கா வழித்துயரைப்
பண்டு மறிந்து மவர்க்கேது மின்னல் பகர்ந்திலையே. (எ)

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

266. செய்யின் மணிநென் மிகுமுது குன்றர் சிலம்பமுதே
வெய்யில் வருத்தங் கலைதுணை தீர விலக்குதலைப்
பொய்யில் புரவலர் கண்டுனை யெண்ணிப் பொருந்துறுவார்
மெய்யிற் பசலை தனையொழித் தேயினி மேவுவையே. (அ)

பருவங் கண்டு பெருமகள் புலம்பல்.

267. ஈர்மஞ் சுறுமுது குன்றர்தம் வெற்புறு மேந்திழையாய்
கார்மஞ் சுறைபெயக் கண்டில ரோவென் கணைவிழிநீர்
வார்துஞ் சிளமுலை மீதே வழிய வளைகழல
ஏர்துஞ் சிருபுயர் தந்துணை மஞ்ஞைக ளின்புறவே. (௯)

இகுளை வம்பென்றல்.

268. மறியார் கரமுடை நம்முது குன்றர் வரையணங்கே
சிறியார்சிறுபொருள் கண்டான் மகிழ்வினைச்சேர்ந்திடல்போல்
வெறியா ரசோக வனமயில் வம்பை மிகுமழையென்
றறியா தகங்களித் தாடல்கொண் டின்ப மடைந்தனவே. (௧௦)

தலைமகள் மறுத்தல்.

269. நம்பாற் கருணை யிருத்து முதுகுன்றர் நாட்டிடையே
வம்பாற் பொழியு மழையெனின் மஞ்ஞை மகிழ்வுறுதல்
தப்பா லடையு மெனன்மலர்த் தோன்றியுஞ் சார்வுறுதல்
செம்பாற் றிகழுறு கோபமுந் தோன்றலென் சேயிழையே.()

---

265. படிகின்ற கா. புரி துயர் கண்டும் என இயைக்க.

266. கலையானது வெய்யில் வருத்தத்தைத் துணைக்குத் தீர்த்தலை; கலை - ஆண்மான்; துணை - பெண்மான்.

267. உறை - துளி. விழிநீர் வழிய, வளை கழல, மஞ்ஞைகள் இன்புற, மஞ்சு உறைபெய இருபுயர் கண்டிலரோ வென இயைக்க.

268. வெறி - நறுமணம். வம்பு - காலமல்லாத காலத்துப் பெய்யுமழை.

269. செம்பால் திகழுறும் - செம்மையான பக்கத்தால் விளங்கும், செவ்விய இடத்தில் விளங்கும், செம்பைப்போல விளங்குமெனினும் ஆம்.

### அவர்தூதாகிவந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றல்.

270. பின்னுஞ் சடிலத் திருமுது குன்றர் பெருவரையார்
மன்னுந் தனங்க ளளவில கொண்டுவந் தாரெனவே
முன்னம் பொருந்தி நமைத்தேற்ற வந்த முகிலணங்கே
உன்னெஞ் சயர்வு மடுத்தமெய் வாட்ட மொழிகுவையே.(௧௨)

### தலைமகள் ஆற்றல்.

271. விரிந்தார் கடுக்கை யணிமுது குன்றர் வியன்சிலம்பர்
பிரிந்தாற் றுயர்வரு மென்றறி யாதெனைப் பின்பிரிந்தே
வருந்தா தருடர வந்தே முடிப்பர் மனநினைவைச்
சரிந்தார் குழலி யினன்றீ மழையினைத் தாங்கலொத்தே.(௧௩)

### அவனவட்புலம்பல்.

272. பாரலர் கொண்டு பணிமுது குன்றர் பனிவரையிற்
காரலர் கொண்டு வதிந்தென நீண்ட கருங்குழன்மின்
ஊரலர் கொண்டு சொலும்வே தனையை யொழிந்திடவே
நீரலர் கொண்டு விழிபாய் துயரொடு நின்றிடுமே. (௧௪)

### மீண்டு வருகின்ற காலத்துத் தலைமகன் பாகனொடு சொல்லல்.

273. பதிசேர்ந் திராதிப் பொழுதே குறுகினர் பண்பொடென்னக்
கதிசேர் புரவி விரைவின் வலவ கடவுதிநீ
துதிசேர் முதுகுன்றர் தொல்வரை மாது சுடர்படத்தன்
மதிசேர் மயனோய் வருத்தத் தளர்ந்து மயங்குமுன்பே. (௧௫)

---

270. பின்னும் சடிலத் திருமுதுகுன்றர்: "பினலஞ் செஞ்சடை மேற்பிறை யுந்தரு, புனலுஞ் சூடுவர் போலும்புத் தூரரே" (தே.) மடுத்த - கலந்த. அயர்வையும் வாட்டத்தையும் ஒழிகுவை.

271. விரிந்து ஆர்ந்த கொன்றைமலர். இனன் - சூரியன்; சூரியனால்வெப்பமும் மழையும் உண்டாதல்: "தினஞ்செய்வோன் வெய்தா, விரிந்ததன் கதிரினலைகட லுடுத்த மேதினி யிடத்தபைங் கூழ்கள், கரிந்தன தளிர்ப்ப வெள்ளிவீ ழன்ன கணமழை பொழிவது கடுப்ப" (நைடதம், அன்னத்தைத் தூது. 5.) தாங்கல் ஒத்து மனநினைவை முடிப்பரென முடித்துக்கொள்க.

272. பார் - பூமியிலுள்ளார்; இடவாகுபெயர். ஊர் அலர் - ஊரார்கூறும் பழிமொழி. நின்றிடும் - நின்றிடுவாள்.

273. சுடர் - சூரியன். மயல் நோய் - மயக்கமாகிய நோய். மயங்கும்முன்பு கடவுதியென இயைக்க.

தலைமகன் மேகத்தோடு சொல்லல்.

274. மின்னிப் பொழியு முகிலினங் காணீர் விரைந்துமுன்போய்
வன்னிக் கரமுடை நன்முது குன்றர் மயிற்குமன்னர்
பொன்னிற் பெருவள மெல்லா மடைந்து பொருந்தினரென்
றுன்னிப் பெருந்துய ரெல்லா மொழிய வுரைமின்களே. (கசு)

பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

275. மால்போல நீண்ட பொழின்முது குன்றர் மணிவரைமேல்
வேல்போல நீண்ட விழியாய் முலைகளின் மேற்பசப்பின்
வால்போக மன்னவர் வந்திடு மோகை வகுத்தனவாற்
பால்போலக் காணும் வலம்புரி யார்க்கப் படுங்குரலே. (கஎ)

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

276. இறைவண்டினங்கண்மதுவுண்மலர்த்தொடைத்திண்புயத்தார்
இறையின் வளையுகச் சென்றவர் சேர்த விசைத்தலினால்
மறையின் முடிப்பொரு ளாய்முது குன்றினில் வாழ்ந்திடுநம்
இறைவன் புகழென விச்சங்க மென்று மிலங்குகவே. (கஅ)

தலைமகன் வந்துழிப் பாங்கி
தம்மை நினைத்தமை வினாதல்.

277. இருளுக் கிடமாங் களமுது குன்ற ரெழிற்சிலம்பில்
அருளுக் கிடமீ சிறிது மிலாம லணுகுறுசீர்ப்
பொருளுக் ககன்ற விடத்தே யெமையுமுன் புந்திவைத்துத்
தெருளுற்றதுவுமுண்டோசொல்லுவாயெழிற்றிண்புயனே. ()

தலைவன் நினைத்தமை செப்பல்.

278. பண்டார் குறுமுனி தாழ்முது குன்றர் பனிவரைமேல்
விண்டார் பெரிய வடவியு நாடும் விலங்கினங்கள்
கொண்டார் மலைகள் கடந்துசென் றாலுங் குறிப்பிடையே
வண்டார் குழலி மறந்தறி யேனுங்கள் வாண்முகமே. (உ0)

---

274. பி - ம். 'ஒழிகுவை யென்றுரையே'

275. பசப்பின் வால் - பசப்பின் மிகுதி; "வால் வெண்மை மிகுதி" (சூடாமணி.) வலம்புரி - வலம்புரிச்சங்கம். பால்போலும் சங்கம்: "பானிற வெண்சங்கம்" (இறை. சூ. 55. மேற்.) குரல் - குரல்கள்.

276. இறை - கை; இறையை உடையது; "இறைக்குவளையும்" பழமலை.

278. பண்டு - பழமை. விண்டு - மேகம்.

தலைமகளை ஆற்றுவித் திருந்தமை
பாங்கி தலைமகற்குக் கூறல்.

279. சங்கம் பொருந்தும் வயல்சூழ் முதுகுன்றர் தண்சிலம்பா
அங்கம் வெதும்பி யிளமுலை மேற்பசப் பாரநின்ற
தங்க நிலவன லாலுரு காமற் றளர்வகற்றிப்
பொங்கு முனது புகழ்கூறி யாற்றினன் போனபின்னே. (உக)

---

## ௧௬. வரைவு மலிவு.

காதலன் முலைவிலை விடுத்தமை
பாங்கிகாதலிக்குணர்த்தல்.

280. மங்கைக் குடம்பு பகுமுது குன்றர் வரையரின்று
கொங்கைக் குனது விலைகொடு வந்தனர் கூறிடுபொன்
அங்கைக் கடங்கு விழிநீ ரொடுநின் னலர்மலரார்
செங்கைக் குருகு விழாதொழி வாயினிச் சேயிழையே. (௧)

காதலி நற்று யுள்ளமகிழ்ச்சி யுள்ளல்.

281. கன்னிக் கிடத்தை யருண்முது குன்றர் கனகவெற்பா
பொன்னிற் பெருவள மெல்லா மடைந்து புகலுமணந்
தன்னைப் பொருந்த விரைவினில் வந்தமை சாற்றுவரேல்
அன்னைக்கு நம்மினு மெண்மடங் காகு மகமகிழ்வே. (௨)

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தல்.

282. போதைத் துறந்திம் மலையிடங் கொண்டிடு பொற்கொடியே
சூதைப் பொருந்து மலங்கலை நம்மன் றருபொருளை
மாதைப் பொருந்து முதுகுன்றர் நாடர் மகிழ்ந்தெதிர்ந்துன்
சூதைப் பொருந்து முலைவிலை யாக்கினர் துன்பகலே. (௩)

---

279. தங்கமென்றது தலைவியை. நிலவாகிய அனலால்.

280. அங்கைக்கடங்கு விழி. "குடங்கையி னெடிய கண்ணால்", "குடங்கையி னெடியன குவளை யுண்கணே"(சீவக. 1290, 2006). செங்கைக் குருகு - வளையல்; வெளிப்படை; "குருகைவிடுத் தானெனக் குருகே கூறாய்." காசிக் கலம்பகம்.

282. போதைத் துறந்து - தாமரைப்பூவை விட்டுநீங்கி; போதை... கொடியே: இது தலைவியைத் திருமகளென்றது.

தலைமகள் உவகையாற்றாது உளத்தோடு கிளத்தல்.

283. சோலைக் கமுகு செறிமுது குன்றர் சுடர்க்கிரியார்
வேலைத் தாளம் பசும்பொன் முலையிலை மேவியுற்றார்
மாலைச் செறிவுறு நெஞ்சே யுனது வருத்தமற்றுக்
காலைப் பொழுதிற் கதிர்போல் விளங்கிக் கவினுவையே. (ச)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

284. காவற் புனத்தினி னீயன்று சூட்டுங் கடிமலரை
மூவர்க் கரிய திருமுது குன்றர் மொழிவரையாய்
நாவற் பெருந்தீ வனைவருங் கூடு நவின்மணத்தில்
தேவர்க் குரிய வியமார்ப்ப நின்று திகழ்த்துவையே. (ரு)

தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை
பாங்கி தலைமகற்குக் காட்டல்.

285. இடபக் கொடியர் திருமுது குன்ற ரெழிற்சிலம்பில்
மடமைக் கொடிநின் மணம்வேண்டி யின்று மலையணங்கின்
அடியைப் பலமலர் கொண்டேத்தி நின்றே யகமெலிந்து
படியிற் பணிதலைத் தின்றேளின் மன்னவ பார்த்தருளே. ()

தலைமகள் அணங்கைப் பராநிலை கண்ட
தலைமகன் மகிழ்தல்.

286. வத்திர மைந்து பெறுமுது குன்றர் வரைமணத்தாற்
சித்திர மொத்த விளையா டனங்க டிருந்துமுன்னே
பத்திரங் கொண்டு பணிந்தே யணங்கைப் பரவுறுதல்
எத்திறம் வந்த திறம்பூதி தான னியம்பரிதே. (எ)

---

## உய. அறத்தொடு நிற்றல்.

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

287. பண்டவ் விடத்தை யுண்ணுமுது குன்றர் பனிவரையில்
வண்ட லிழைத்து மலரார் கரங்கள் வருந்தியவோ
கொண்டல் கடுத்த குழலாய் சிறுமொழி கூறினளோ
உண்ட லொழித்து நெடுங்கண் கலுழ்த லுரையணங்கே. (க)

---

283. தாளம் - முத்து. மாலை - மயக்கத்தை.
284. இயம் ஆர்ப்ப - வாத்தியங்கள் ஒலிப்ப.
286. வத்திரம் - முகம். பத்திரம் - இலை.
287. கொண்டல் கடுத்த - மேகத்தை ஒத்த. ஆய் - செவிலி.

தலைமகள் கலுழ்தற்குக் காரணங் கூறல்.

288. கஞ்சப் பதமுது குன்றர்தம் வெற்பரைக் காரிகையாய்
மஞ்சுற் றலைபொழிற் கண்டணி கண்டு மகிழ்ந்ததற்பின்
துஞ்சப் புசிப்ப மனமில தாகித் துலைவிலதோர்
நெஞ்சத் துயரத னாற்கலுழ்ந் தேனவர் நீங்குபின்னே. (உ)

தலைவன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறல்.

289. அன்பின் விளங்குந் திருமுது குன்ற ரணிவரையார்
முன்பிற் புனத்திடைத் தெய்வதங் காட்டி மொழிந்ததற்குத்
தன்முன் கரியாய்க் குருகொன் றுறவுந் தனிமறந்தார்
என்புன் மனத்திடை மெய்யாக் கருதி யிடருறவே. (ங)

தலைமகன் இகந்தமை இயம்பல்.

290. மறிபொற் கரமுடை நன்முது குன்றர் வரையரிந்நாள்
செறிமுட் புனத்திற் கரிபிற ரில்லெனத் தேற்றுசொல்லைச்
சிறுவிற் புருவ மயிலே மறந்தவண் சென்றனரேல்
அறிவிற் பெரியர் மொழிபிற ழாரென்ப தற்றதுவே. (ச)

அது கேட்ட பாங்கி இயற்பழித்தல்.

291. மெய்யுற் றவர்சிந்தை சேர்முது குன்றர்தம் வெற்பணங்கே
வையுற்ற வேலவர் தெய்வமுன் னாக வரும்பிரிவு
செய்யுற் றிலனெனக் கூறியு மின்றிது செய்தனரேற்
பொய்யிற் பெரிய ரவரல தில்லையிப் பூமியினே. (ரு)

தலைமகள் இயற்பட மொழிதல்.

292. குளத்திற் கிசைந்த விழிமுது குன்றர் குளிர்சிலம்பில்
உளத்திற் கிசைந்தநம் மன்னவ ரன்றி யொளியிழையாய்
வளத்திற் கிசைந்த வடிவுடை வேந்தர் மறிகடல்சூழ்
தளத்திற் கிசைந்தவ ராவினி யாரவர்ச் சாற்றுதியே. (சா)

தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல்.

293. பொன்னே ரனைய மலர்க்கொடி யேயனம் பூங்கமலம்
துன்னேர்த் தடமுது குன்றர்தம் வெற்பினர் சூளுரையை

---

290. அறிவிற் பெரியர் மொழிபிறழார்: "பழிமாற் றியபுகழ் வெங்கை புரேசர் பனிவரைமேல், மொழிமாற் றெனும்பொருள் கோளினல் லாமன் மொழிபிறழார்." வெங்கைக்கோவை. 29.

292. குளம் - நெற்றி.

உன்னோர்சொல்குற்றுரைதைத்தெய்வமேபொறுத்தருண்மகிழ்வாய்
எந்நோ மேத்துவ மென்றே பராவுதற் கேகுவமே. (எ)

இல்வயிற் செறித்தமை சொல்லல்.

294. அறுகு மெருக்கு மணிமுது குன்ற ரணியிழையே
சிறுகும் பிறைநுத லாயவர் கேட்டிடு செய்தியினல்
மறுகு மனத்தி னெகிழாது புல்லினண் மன்னியுண்ணூர்
இறுகும் படிக்கு முடிந்திடும் பொன்னென வென்றனையே.(அ)

செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்.

295. பங்கா ருமையர் திருமுது குன்றர் பனிவரையார்
கொங்கார் குழலிருள் கூர்ந்திடு நாட்குக் குறிக்கணுறல்
நங்காத னின்னன்னை கண்டே யயிர்த்தன ணம்மனைபின்
தங்கார் முறுவ னிலவுண வந்த சகோரமென்றே. (கூ)

செவிலிதலைமகள்வேற்றுமைகண்டுபோங்கியைவினுதல்.

296. வினைகாவ னீக்கி யருண்முது குன்றர்தம் வெற்பணங்கே
மனைகாவ லுற்றபின் கொங்கைப் பசப்பும் வரிவிழியாம்
நனைகாவி நீரும் பொருந்தி யனத்தினை நண்ணுகிலாள்
தினைகாவ லுற்றபின் வந்ததென் னேநந் திருந்திழைக்கே. (க0)

பாங்கி வெறிவிலக்கல்.

297. இருவர்க் கருளு மொருமுது குன்ற ரெழில்வரையில்
மருவிக் குடிகொண் மலைத்தெய்வ மேயெம் மயிலினுக்குத்
திருகிக் கவிந்த மருப்பிற் றகரைச் செகுபலிக்கா
உருகிக் கலங்கப் பிணிநீ கொடுத்த லுயர்ச்சியன்றே. (கக)

செவிலி தோழியை வெறிவிலக்கியவழி வினுதல்.

298. கையுற்ற நவ்வியர் நன்முது குன்றர் கவின்சிலம்பிற்
பொய்யுற்ற மெல்லிடை மங்கைநல் லாள்பிணி போக்குதற்கு
மையுற்ற கண்ணி குடித்தெய்வம் போற்றன் மறித்தனைநீ
நையுற்ற நோய்தணிப் பாயு லுபாய நவிலுதியே. (கஉ)

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

299. நிறையும் புனற்செய் மலிமுது குன்றர் நெடுவரைச்சார்
உறையு நறும்பொழிற் கண்விளை யாடி யுறும்பொழுதிற்
பிறையும் பணியுந் திருநுத லாட்கொர் பெருந்தகையோன்
அறையு நறுமல ரொன்றளித் தேயங் ககன்றனனே. (கந)

294. ஆய் என்றனைப்புல்லினளென இயைக்க. 297. தகரை - ஆட்டை.

புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

300. மருப்புத் தலைச்சே வுடைமுது குன்றர் மணிவரையில்
விருப்புறு மலைநீர் படிந்திடு காலை விழுமடுவிற்
றரிப்புற்ற நின்மகட் கண்டோர் பெருந்திறற் றண்ணளியான்
பொருப்புத் தலையார் புயத்தணைத் தேகரை போந்தனனே. ()

களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

301. வரைத் தடஞ்சேர் பெறுமுது குன்றர் வரைப்பொழில்வாய்
ஆளைப் பொருது மழைமத யானை யடர்ந்துவர
வேளைப் பொருவுறு மோரெழிற் காளைகை வேலொடுறத்
தோளைத் தழுவிப் பயந்தீர்ந் தனணின் சுடர்க்கொடியே. (௧௫)

பிறர் மணம் விலக்கல்.

302. பைங்கேழ்ப் புரவி யினன்றாழ் முதுகுன்றர் பார்வரைக்கண்
தங்கூழ் கொணர்ந்து பொருத்துந் தடம்புயன் றாெருவன்
செங்கேழ் மணிவடஞ் சூட்டினன் போகநின் சேயிழையாள்
பொங்கேழ் மதிமுகத் தாயே பிறர்க்குப் பொருந்திலளே. (௧௬)

தலைமகள் வேற்றுமை கண்டு
நற்றாய் செவிலியை வினாதல்.

303. மடைவைக்குஞ் சங்த மணியீன் முதுகுன்றர் மால்வரைநீள்
தொடைவைக்குங் கூந்தலள் கொங்கைப்பசப்புந் துணைவிழிகள்
இடைவைக்கு நீருமுற் றாணை யிழந்திங் கிருந்ததென்னோ
படைவைக்கு நீள்விழி மாதே யயிர்ப்பறப் பன்னுதியே. (௧௭)

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்.

304. தேவிக் கருளுந் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
வாவிக் கலையொன் றுவந்ததுண் டோவென வான்புனத்தின்
மேவிக் குழன்முடி சேர்முன மோகம் விளங்கிழையைக்
காவிக் கிகலும் விழியா யொருவன் கலந்தனனே. (௧௮)

---

300. சே உடை - இடபவாகனத்தையுடைய.

302. மணிவடம் - முத்துமாலை; "ஊசி முனையினின்று, வண்டவஞ் செய்திங்கு வந்தகண் டீரிம் மணிவடமே" (வெங்கைக்கோவை,101.) எழ் - எழுச்சி; "எழ்ச்சியு மிறுதியுஞ் சூழ்ச்சியு முணர" பெருங். ௧: 58: 58.

304. குழன்முடி சேர்முனம்: "முருகு தலைச்சென்ற கூழை முடியா" சிற் 104.

நற்றாய் தமருக்கு அறத்தோடு நிற்றல்.

305. கருஞ்சேற் றகல்வயல் சூழ்முது குன்றர் கவின்சிலம்பில்
இருஞ்சே லுறழ்விழி நம்பட மாதையொ ரேந்தலுக்கிங்
கருஞ்சார்பு செய்குவம் வில்லார் விலையி லவிர்மணியைத்
தெரிஞ்சோர் பசும்பொனில் வைத்திழைத் தாங்குத் திகழ்ந்திடவே.()

## உக. உடன் போக்கு.

பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்.

306. தேங்கும் புனற்சடை சேர்முது குன்றர் சிலம்பணங்கை
வீங்கு மிருளிடை யுன் னூர்க் குடன்கொண்டு மேவலன்றி
ஓங்கு முமக்கு வழிவே றிலையெம ருற்றுமன்று
தாங்குந் தாணி முலைவிலை யாக்கினுந் தந்திலரே. (க)

தலைவன் உடன்போக்கு மறுத்தல்.

307. புலத்தகம் போகா கருண்முதா குன்றர்தம் பூஞ்சிலம்பில்
அலத்தகஞ் சேர்ப்பினு மஞ்சு மடிமல ராயிழையைச்
சொலத்தக வல்ல கொடும்பாலை யார்வழி தோய்ந்தனல்சேர்
நிலத்தக மெவ்விதநான்கொடு போவது நேரிழையே. (உ)

பாங்கி தலைமகளை உடன்படுத்தல்.

308. கனங்கொள் பொழில்சூழ் திருமுது குன்றர் கவின்சிலம்பிற்
சினங்கொண் டவிர்கழை விற்பூட்டி யெய்த திருமலராம்
அனங்கன் கணையினு மன்னையர் சொல்லினு மன்பினர்போம்
வனங்கள் கொடியன வோசொல்லு வாய்புகழ் மன்னவனே.()

தலைவன் போக்கு உடன்படுதல்.

309. விண்ணிற் கரிய திருமுது குன்றர் வியன்சிலம்பிற்
கண்ணிற் குரிய வமுதனை யாடன் கடிமலர்க்கால்
புண்ணிற் குரியதன் றுக்கி யமளி பொருந்தலைப்போற்
பண்ணற் குரியவன் மாதே சுரமயிற் பண்ணவனே. (ச)

---

306. உமக்கு என்றாள் தலைவியையும் உளப்படுத்தி. உன்னால் தாங்கப் பட்ட தாணியை.

307. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு; அலத்தகம் சேர்ப்பினும் அஞ்சும் அடி: "அரக்கார்ந்த, பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனா, அஞ் சிப்பின் வாங்கு மடி" நாலடி. 396.

308. கனம் கொள் - மேகத்தைக் கொண்ட. அனங்கன் - மன்மதன்.

309. விண்ணிற்கு - தேவர்களுக்கு; ஆகுபெயர். சுரத்தைப் பண்ணற் குரியவன். அயிற் பண்ணவன் - வேலையுடைய முருகக்கடவுள்.

பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

310. காவன்ன பூம்பொழில் சூழ்முது குன்றர் கவின்சிலம்பா
பூவன்ன சீறடி கூர்ம்பரல் தாக்கப் பொறுப்பதெங்ஙன்
மாவன்ன பூங்கொடிக் கென்றுனைத் தார்மிக வார்துதிசேர்
ஏவன்ன கூர்விழி யாயவ ரெண்ணு மியம்பரிதே. (ரு)

தலைவி நாணழிபிரங்கல்.

311. காணற் கரியரு ளன்முது குன்றர் கவின்சிலம்பிற்
பூணிற் பொலியும் புணர்முலை யாயிப் புவியிடத்திற்
கோணிக் கவின்பெறு நன்னுதல் சேர்ந்திடு கோதையர்க்கு
நாணிற் சிறந்தது போல்வே றுளதோ நவின்றிடினே. (சு)

கற்பு மேம்பாடு பாங்கி கூறல்.

312. கற்புக் கருந்தவஞ் செய்முனி வோருங் கருதரிய
எற்புக் கறிவருங் காமுது குன்ற ரெழிற்சிலம்பிற்
பொற்புக் கிணையறு நன்மட வார்கள் பொருந்துயிர்க்குக்
கற்புக் கிணையுறு மோர்துணை யுண்டோ கனங்குழையே. (எ)

தலைவி ஒருப்பட்டெழுதல்.

313. போராரும் வேலர் பிசாமுது குன்றர் பொருப்பிடைநாம்
ஏராருந் தோள ருடனே பொருந்தியங் கேகியபின்
காராரு மென்குழ லாரலர்ச் சொற்கள் கழறினுமென்
ஊரார்வாய் மூட வுலைமூடி யுண்டோ வொளியிழையே. (அ)

பாங்கி சுரத்தியல்புரைத்தழித் தலைமகள் சொல்லல்.

314. பாட்டிற் குரிய வெழிற்சுந் தரற்குப் பரவையினைக்
கூட்டி யருளுந் திருமுது குன்றர் குளிர்சிலம்பில்
தோட்டிற் குரிய வளைக்காதி னேற்கனை சொல்கடியும்
வீட்டிற் கொடியது வோமன்னை ஞேடுசெல் வெஞ்சுரமே. (கூ)

---

310. கா - கற்பகச்சோலையை. மா - திருமகள்.

312. கல் புக்கு - மலைக்குகையில் புகுந்து. எல் - சூரியன். எல் புக்கு அறிவரும் கா: "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும் பாண். 374.) பொற்புக்கு - அழகுக்கு.

313. ஊரார்வாய் மூட உலைமூடி உண்டோ?: "ஊரைவாய் மூட வுலை மூடி தானிலையே" பொய்யாமொழியார்.

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல்.

315. துளிக்கு மதமழை பெய்கா முதுகுன்றர் தொல்வரையாய்
களிக்கு மனைக்கிவ ளல்லாது வேறிலை காரிகையார்
அளிக்கு மலர்த்தா ரிவள்கருங் கூந்த லவிர்மதிபோல்
வெளுக்கும் பருவத்து மன்புட னேநீ விரும்புவையே. (கO)

பாங்கி வைகிருள் விடுத்தல்.

316. சேயேனந் தேடிடு நம்முது குன்றர் சிலம்பனைக்குத்
தாயே யிரங்கா யெனச்சொல்லி மாதே தணிவுசெய்து
யாயேதுஞ் சொல்லாதிவ் வூரடக் கிப்பின்னர் யான்வருவேன்
நீயேது நெஞ்சி னினையாம லன்பர்பின் னேயகலே. (கக)

தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல்.

317. அறிவில் விளங்கிய மாமுது குன்ற ரணிவரைமேற்
பொறியில் விளங்கிய வேருடை யாய்நின் பொருந்தியசெம்
முறியில் விளங்கிய மெல்லடி நோவ முதுக்குறைவில்
சிறிய வுளங்கவ றீர்ந்திட மெல்லெனச் சென்றருளே. (கஉ)

பொழில் கண்டு வியத்தல்.

318. வெங்கோ லரசன் புரியுங் கொடுமையை வேறொருபாற்
செங்கோ லரச னழிக்குந் திறம்போற் றிருந்திழையாய்
நங்கோலம் வாட்டுங் கொடுஞ்சுரத் தீண்மை நாமகலச்
செங்கே ழலர்க்கா முதுகுன் றர் வெற்பிடைச் சேர்ந்தனமே.()

தலைமகன் தலைமக ளசைவறிந் திருத்தல்.

319. அந்திச்செவ் வானன்ன நம்முது குன்ற ரடங்கலரூர்
சிந்திக் கெடவடு தீப்போற் கொடிய செறிவனத்தின்
வந்துற்ற நோயை யகற்றிடப் பூங்கா மலரமளி
சந்திச் சடிகண் மகிழ விரும்பொழில் சார்குவமே. (கச)

---

315. நரைமயிர்க்கு மதி உவமை: "சுடர்மதிக் கதிரெனத் தூநரை யோரும்" பரிபாடல், ப. 167: 43.

317. பொறி - திருமகள். முறி - தளிர். முதுக்குறைவு இல் - பேரறிவு இல்லாத. கவல் தீர்ந்திட.

319. அந்திச் செவ்வா னன்ன முதுகுன்றர்: "செவ்வா னன்ன மேனி" (அகநா. கடவுள்.) பாலைக்கு முப்புரத்தை எரித்த தீ உவமை கூறப்படுதல், கலி. 2: 1-8 அடிகளாலும் விளங்கும்.

### தலைமகன் தலைமகளை
### உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்.

320. மெய்க்குப் பொருந்தும் பணிபூண் முதுகுன்றர் மென்சிலம்பிற்
பொய்க்குப் பொருந்துஞ் சிறுநுசுப் பாயுன் புகல்குழற்கு
நெய்க்குப் பொருந்து நறுமலர் சேர்த்தி நிகழ்ந்திடுமென்
கைக்குப்பொருந்துந்தவம்போலச்செய்ததைக்கண்டிலனே. ()

### கண்டோர் அயிர்த்தல்.

321. ஆடுங் கொடிமுது குன்றர்தம் வெற்பி லமர்ந்தவரோ
பாடும் புகழுறு பண்ணவ ரோவிவர் பார்க்குறுமெய்
வாடும் பரிசு மிகவும் வருந்திட வந்தவர்கள்
நாடும் படியயிர்ப் போடே பொருந்திட நண்ணினரே. (கசு)

### கண்டோர் காதலின் விலக்கல்.

322. இரதி யொடும்வரும் வேளனை யாயின னிப்பகற்றன்
புரவி தனையும் வருத்திடு மாதவம் போக்கிமுந்நீர்
விரவி யிருளுமுன் னெம்மூரின் மேவி விடியலிலே
அரவு பணிமுது குன்றர்தந் நாட்டை யடைகுவையே. (கஎ)

### கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்.

323. வேலைக் கடந்த திருமுது குன்றர் வியன்சிலம்பிற்
காளைப் பருவ முடையமன் னநின் கடிநகரை
வாளைப் பொருவும் விழியாளு நீயு மகிழ்ந்தடைவீர்
நாளைப் பகலிச் சிறுகுன்றை நீங்கி நடந்திடினே. (கஅ)

### தலைவன் தன்பதி அடைந்தமை
### தலைவிக்கு உணர்த்தல்.

324. திருத்துங் குழல்கள் சரியக் கயிற்புறஞ் சிற்றிடையைப்
பொருத்தும் புணர்முலை வாட்டமுந் தாங்கிப் புகுவனச்சி

---

320. மெய்க்கு - திருமேனியில்; உருபுமயக்கம். பணி - பாம்புகளை. நெய் - தேன்; நெய்யரி யென்னும் பெயர்க்காரணம் இங்கே அறிதற்பாலது.

321. பாடும்பண்ணவர் - இசைபாடும் கின்னரர். வருந்திடவும் பொருந்திடவும் நண்ணினர்.

பி - ம். 'வந்தவரை'

322. ஆதவம் - வெயில். அரவு: பதஞ்சலிமுனிவர்.

323. காளைப்பருவம் - பதினாறு பிராயமுள்ள பருவம்; தக்க. 5, உரையைப் பார்க்க.

இருத்தும்பொழுதுமிடர்கொடுங்கேடந்தெய்த்தபொன்னே
வருத்தந் தணிநீ முதுகுன்ற மாநகர் வந்தனமே. (கசு)

## உஉ. கற்பொடு புணர்ந்த கௌவை.

செவிலி பாங்கியை வினுதல்.

325. விண்ணைக் கடந்த புகழ்முது குன்றர் வியன்சிலம்பிற்
கண்ணைக் கடந்து மணிபோன தென்னக் கனங்குழையாய்
பண்ணைக் கடந்த மொழிமக ளெங்குப் படர்ந்தனளால்
எண்ணைக் கடந்த திரட்பாங் கியர்க ளிடருறவே. (க)

பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்.

326. அலர்கூ றியமொழி நம்மவர் கேட்டு மடைந்தவர்க்குப்
பலர்கூடி நன்மணஞ் செய்யா தொறுத்த பரிசுகண்டு
மலர்கூறு கொள்குழ லுன்மக ளன்பர் வழியடைந்தாள்
கலர்கூ றினுஞ்சுத்த மாக்கு முதுகுன்றர் கார்வரையே. (உ)

பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவோர்க்கு
எதிரழிந்து மொழிதல்.

327. அஞ்சத் தவன்பணி மாமுது குன்ற ரணிவரைமேற்
கஞ்சத் திருவுற ழென்மகள் பாலையிற் காந்தனுடன்
வஞ்சித் தலர்மொழி யான்கேட்கப் போன மனத்துயர்க்குத்
துஞ்சத் துணிகுவ தல்லாற் பிறிதொரு சூழ்ச்சியின்றே. (ங)

செவிலி தன்னறிவின்மை தன்னைநோந்துரைத்தல்.

328. குலவும் விடைமுது குன்றர்தம் வெற்பிலென் கொம்பனையாள்
இலகும் புகழ்நளன் பின்னே தமயந்தி யேந்துறுகான்
விலகும் படியன்றிச் சென்றதை யில்லுறு மெல்லியலார்க்
குலகம் பழுது சொலுமோவெ னுரைதை யோர்ந்திலனே. ()

---

324. குழல்களென்று பன்மையாகச் சொன்னது ஐம்பாலென்பது பற்றி; "கடை குழன்ற கருங்குழல்கள்" (சீவக. 164) என்பதையும் அதன் உரையையும் பார்க்க. குழல்கள் கயிற்புறம் சரிய; கயில் - பிடரி. எய்த்த - இளைத்த.

325. கண்மணி தலைவிக்கு உவமை: "மணிவாழ் பாவை நடைகற் றன்னவென், அணியியற் குறுமக ளாடிய, மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே" நற். 184.

326. கலர் - கீழ்மக்கள்.

327. கஞ்சம் - தாமரைமலர். துயர்க்கு - துன்பம் நீங்குவதற்கு.
பி - ம். 'பிறவொரு சூழ்ச்சி.' 'துஞ்சத் தணிகுவது'

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

329. தேவர்க் கரியர் திருமுது குன்றர் சிலம்புறையும்
காவற் குரிய விருந்தெய்வ மேயென் கருங்குழற்கு
மேவற் கரிய தழற்பாலைத் துன்பம் விலக்கியில்லில்
ஆவற் பெருக வரப்பண்ணி னுன்றெழும் பாருவமே. (ரு)

செவிலி நற்றாய்க்கு அறத்தோடு நிற்றல்.

330. துள்ளி யெழுமான் கரமுது குன்றர் சுடர்க்கிரியில்
வள்ளி யறுமுகன் பின்போன தென்ன மடந்தைநல்லாய்
கள்ளி யடரு மழற்கான வழியிற் கணவனுடன்
வெள்ளி யெழுமுனஞ் சென்றா ளுனதா வியன்மகளே. (சா)

நற்றாய் பாங்கிதன்னோடு புலம்பல்.

331. திணியுற்ற வங்கம் புனைவோர் முதுகுன்றிற் செய்யசிந்தா
மணிபெற் றிழந்தவர் போல்யான் பெரிது மனமறுக
அணிபெற்ற கொங்கை யெனதா ருயிரை யடவிசெல்லத்
துணிவுற் றகற்றிய பின்சொல்லி னென்பயன் சூழ்கொடியே.()

நற்றாய் பாங்கிதன்னோடு புலம்பல்.

332. மாதே யனையுங் கழங்கா டிடமும் மலர்பறிக்கும்
தாதே சொரியுஞ் செழுங்காவு நோக்கித் தளர்வுறனீ
போதே யனைய வடிபர ருக்கப் பொறுத்ததெங்ஙன்
தீதே தமில்லாச் சிவன்முது குன்றினஞ் சேயிழைக்கே. (அ)

அது கேட்ட தோழியழுங்கல் கண்டு நற்றாய் புலம்பல்.

333. பொன்கண் ணனைய திருமுது குன்றர் பொருப்பிடத்திற்
றன்கண் ணனைய மடவீர் புலம்பத் தனித்தெனைவிட்
டென்கண் ணனைய வெழின்மா தொருதிற லேந்தலின்பின்
வன்கண் ணனையவர் போலே கியதுயர் மாற்றரிதே. (கூ)

---

331. அங்கம் - எலும்பை. மணிபெற்றிழந்தவர்போல் யான் மனமறுக: "அரும்பெறன் மாமணி, ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று" (மணி 2: 72 - 3.) அடவி - சுரம்.

332. மாதே யென்றது பாங்கியை. போதே அனைய - மலரை ஒத்த.

333. பொன் - திருமகள். தன் என்றது தலைவியை. வன்கண் அனையவர் போல்.

நற்றாய் அயலவர்தம்மோடு புலம்பல்.

334. கற்றார் பரவுந் திருமுது குன்றர் கவின்சிலம்பிற்
பெற்றா லலர்பழி செய்யா மகளிர்தம் பேறுநன்றால்
உற்றா லவர்பிறப் பீனறோர் கிளைஞரென் றோதினர்கட்
கெற்றாற் குறையுண் டிகபர மென்னு மிரண்டினுமே. (௧௦)

நற்றாய் தலைமகள் பயிலிடந்தம்மோடு புலம்பல்.

335. அளிசே ரிதழி யணிமுது குன்ற ரவிர்சிலம்பிற்
றெளிசேர் சுனையே மலர்ப்பொழி லேசெய் சிறுமனையே
ஒளிசே ரிழைமுலை யென்மக டன்பதி யோடுசெல்காற்
களிசேர் மொழியெனக் கென்சொல்லிப் போயினள் கானகத்தே.(௧௧)

தெய்வம் போற்றல்.

336. அங்க மனலெனக் கொண்முது குன்ற ரவிர்சிலம்பிற்
றங்கம் புரைநிறத் தென்மக ளில்லிற் றனிவரவே
சிங்கந் திரியும் வனமார் கொடியெனுஞ் சீதெய்வமே
பொங்கு முனதருள் செய்தாற் புரிகுவம் பூசைகளே. (௧௨)

நற்றாய் சுரந்தணிவித்தல்.

337. பணியுற்ற மெய்யர் திருமுது குன்றிற் பரவுறுநன்
மணிமுத்த மாநதி யாயுறு மெங்கண் மகளினுக்குத்
திணியுற்ற தோளுடைக் காந்தனைக் கூடிச் செலுஞ்சுரந்தான்
தணியுற்று வெம்மை பரன்மல ராகித் தயங்குகவே. (௧௩)

நற்றாய் தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

338. பொன்னற் கரிய பதமுது குன்றர் பொருப்பிடையென்
மின்னற் றிகழிடை மெல்லியல் பூவடி மேதகுபால்
அன்னச் சிறகி னணைமே லிருக்கினு மஞ்சுவதாம்
உன்னற் கரிய கடுந்தீச் சுரத்தெங்ங னுற்றதுவே. (௧௪)

---

334. அலர் பழி செய்யா - பரவுகின்ற பழிமொழியைச் செய்யாத. உற்றால் அவர் பிறப்பு - அத்தகையவர் பிறந்தால்.

335. அளிசேர் இதழி - வண்டுகள்சேர்ந்த கொன்றைப்பூவை; இறைவன் அருளால் அளிசேர்ந்தது; "வண்டுமொய்த் தாற்றும் பிண்டி" (சீவக. 271) என்பதனையும் அதனுரையையும் பார்க்க. பதி - தலைவன்.

336. தங்கம் புரை நிறம்: "பொன்னேர் மேனி" (குறுந். 319.) வனமார் கொடியெனும் சீதெய்வம் - வனதுர்க்கை; சீ - ஸ்ரீ.

337. பணி - பாம்பு. வெம்மைதணியுற்று - வெப்பம்தணிதலுற்று. பரல் - பருக்கைக்கல். சுரம் மணிமுத்த மாநதியாயுறும்; பரல் மலராகித் தயங்குக.

நற்றாய் தன்மகள் இளமைத் தன்மைக்கு
உளமெலிந்து இரங்கல்.

339. சேவைக் கொடிகொளுஞ் சீர்முது குன்றர் சிலம்பிடைத்தன்
கோவைச் சிறுமுலைப் பாலருந் தாமற் குரலிழந்த
பாவைப் பிணிக்குறு பச்சிலை தேடும் பருவத்தினாள்
மாவைப்பொருந்தும்வனத்தன்பன்பின்செலும்வாறெதுவே.()

நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

340. நெஞ்சார் துரிசறுத் தாண்முது குன்றர்த நீள்சிலம்பில்
நஞ்சார் மதகரி வெங்குரற் கேட்டு நடுக்கமுற்ற
மஞ்சார் குழலினள் காந்த னுடன்செல மாழ்கியங்கண்
தஞ்சார் பெவரைத் துணையாகக் கொண்டு தளர்வறுமே.(௧௫)

கண்டோ ரிரக்கம்.

341. நீங்காத துன்பமு நீக்கு முதுகுன்றர் நீள்சிலம்பிற்
பாங்கான தோழியர் நெஞ்சம் பதைக்கப் படரவள்கொய்
பூங்காவும் பந்தும் புரியம் மனையும் புணர்விழியாற்
றாங்காணிற் றாயர்க ளெவ்வாறு தாங்குவர் சாற்றுதுன்பே. ()

செவிலி ஆற்றாத் தாயைத் தேற்றல்.

342. அருகின் மடந்தைய ராயமெல் லாஞ்சொல வன்னையிப்போ
தருகின் வருவதென் றன்போய் மகளை யுடன்றருவேன்
குருகின் விளங்கிய பூந்தடஞ் சூழ்முது குன்றான்கண்
முருகின் விளங்கிய காளையெங் கேகொண்டுமுந்தினுமே.(௧௮)

ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

343. கலனைந் தலைப்பணி பூண்முது குன்றர் கவின்சிலம்பில்
நிலனைந் தினுந்திரிந் தங்கங் கிருப்பதை நிச்சயஞ்சொல்
புலனைந்தும்வென்றமுக்கோற்பகவீர்கண்டுபோந்ததுண்டோ
வலன்மைந் திருத்து மொருவன்பின் னெங்கண் மகட்செல்வமே.(௧௯)

---

339. கோவை - முத்தின் கோவை. வாறு - விதம்; ஆறென்பது வாறெனவும் வழங்கும்; "வல்லா னுலாவந்த வாறென்ன" சொக்க. உலா. 168.

340. துரிசு - குற்றம். மஞ்சார்குழலினள்: "மஞ்சொக்கு மளக வோதி" கம்ப.

341. தாயர்களென்றது ஐவகைத் தாயரை; சீவக. 363, உரைபார்க்க.

343. சொல் பகவீரென இயைக்க.

மிக்கோர் ஏதுக் காட்டல்.

344. தேவிற் பெரிய திருமுது குன்றர் செழுஞ்சிலம்பிற்
காவிற் கனியைக் கனிபறித் துண்பார் கடுப்பவுங்கள்
பூவிற் றிகழுந் திருவனை யாளைப் புறனொருவன்
மேவிற் பழுதில தாகமுன் வேதன் விதித்தனனே. (உ0)

செவிலி எயிற்றியோடு புலம்பல்.

345. குறப்பாவை நண்பனை யீன்றமுது குன்றர் குளிர்சிலம்பிற்
சிறப்பாவை யந்தரு மெய்ம்மலைச் சாரலோர் திண்புயத்தான்
உறப்பாவை யென்மக ளன்னவ னோடே யுடனடந்தாள்
மறப்பாவை யேய்வர் செல்வழி தன்னை வகுக்குவையே. (உக)

செவிலி குரவோடு புலம்பல்.

346. கூனனை யாகப் பிறைகொண் முதுகுன்றர் கூர்சிலம்பிற்
கானனை பூங்குழ லாய்மணை முன்னர்க் கணவனிற்போம்
மானனை யார்க்குப் பழியல வோவென வான்குரவே
தேனனையாளைத்தடுத்தாற்பழியென்கொல்செப்புகவே. (உஉ)

செவிலி சுவடுகண் டிரங்கல்.

347. மாறன் பிரம்படி கொண்முது குன்றர் மணிவரைமேற்
கோறன் மரபெனக் கொள்குற வோர்தங் கொடும்பிடிப்பின்
வீறம் புயமுடை மேவற்கரத் தானடி மேவிதுதான்
தூறென் மிசைவைத்துப் போனா ளடியின் சுவடிதுவே. (உங)

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

348. மலையின் னிடங்கொ டிருமுது குன்றர் மணிவரைமேற்
கலையின் றொடர்ந்த விளமா னெனவொரு காளையின்பின்
அலையின வருபவ ளொத்தே யொருபெ ணடைந்ததுண்டோ
தொலையி னிருந்து செறிகான் வழிவரு தூயவரே. (உச)

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்.

349. திணிய புயமுடை யோர்வேற் கரத்தனைச் சேர்ந்துடனே
அணிய வழகு மிகுவடி வாலோ ரணங்கனையாள்

---

345. குறப்பாவை நண்பனை - முருகக்கடவுளை. வையம் - தேர்.

346. கூன் நனை - வளைந்த அரும்பு. பழியலவோ வென்னும் வினா பழி யுண்டென்பதைக் குறிப்பிக்கின்றது.

347. மாறன் - அரிமர்த்தனபாண்டியன். தூறு - பழிச்சொல்.

348. தொலை - நெடுந்தூரம்.

துணிய வழலிற் சுடுசுரம் போன துயர்முழுதும்
தணிய மகிழ்வின் முதுகுன்றர் மாநகர் சார்ந்தனளே. (௨௫)

செவிலி தலைவியைக் காணாது கவலை கூர்தல்.

350. காற்றார்பவனெழில்கொள்வோனொருவன்பின்கன்னிசெல்லச்
சேற்றார் வளைவயல் சூழ்முது குன்றர் சிலம்பிலென்மின்
வேற்றா ருறவில் லடைந்தன ளென்று விளம்பிவந்தேன்
தூற்றா ரலர்க்கென சொலமாறு மாது தொடர்ந்தபின்னே. ()

## ௨௩. மீட்சி

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

351. தேடு மிருவர் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
வாடு நசைப்புடை யன்னை நமது மலர்க்குழலி
சூடுந் தொடைப்புயத் தோர்காளை பின்னே தொடர்ந்திருளிற்
காடு மலையுங் கலுழியு நீங்கிக் கடந்தனளே. (௧)

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்.

352. மண்டும் பிறைச்சடை கொண்முது குன்றர் மணிவரையிற்
கண்டுங் கரும்பு முறழ்மொழி யாயிக் கவின்மலையும்
வண்டுஞ் சுரும்புஞ் செறியுமிச் சோலையும் வாவிகளும்
பண்டிம் மலைநா மிருந்தா டிடமிவை பார்த்தருளே. (௨)

தலைவி முன்செல்வோர் தம்மொடு
தான் வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல்.

353. பிணைகொள் கரமுடை நன்முது குன்றர் பிறங்குநகர்த்
துணைகொள்சனத்தொடெஞ்சிறார்க்குப்போகுறுந்தூயவரே
பிணைகொள் புயமுடை யோர்வேல னோடும் பிறங்கிழையாள்
அணையுந் திருநக ருற்றாளென் றோதுமெ னையமுற்றே. (௩)

முன் சென்றோர் பாங்கியர்க் குணர்த்தல்.

354. மாலைக் குழலி மனமார் கவின்கொண் மகிழ்நனுடன்
பாலைக் கொடுஞ்சுர மெல்லாங் கடந்து பரிவுடனே
சோலைக் கருங்குயில் போலுறு வீர்சென்று சூழலைசேர்
வேலைக் கருவிட முண்டோன் முதுகிரி மீண்டனளே. (௪)

---

350. காற்று ஊர்பவன் - மன்மதன். விளம்பி - ஊரிலுள்ளாருக்குச் சொல்லி. மாறு - விடை. 351. கலுழி - காட்டாறு.

353. பிணைகொள் கரம் - மானைக் கொண்ட திருக்கரம். பிணை கொள் - விரும்புதலைக்கொண்ட; பிணைத்தலைக் கொண்ட வெனினும் பொருந்தும்.

354. பி - ம். 'குயில்போலுறுவார்', 'முதுகிரிமேவினளே'

பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல்.

355. நீர்கொள் சடையர் திருமுது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
சீர்கொள் எனையே கடுஞ்சுரம் போன திருந்திழையாள்
கூர்கொள் எயில்வே லவனொடு மிங்கே குறுகுமென்று
பார்கொள் சனங்கள் பகர்ந்தார் நினது பரிவகலே. (ரு)

நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதல்.

356. எல்லா முணர்ந்த திருமுது குன்ற ரிடத்தொருவர்
சொல்லாது முக்கா லமுமறி நெஞ்சத் தொடர்பினரே
வல்லார் தனத்தியைக் காவலன் கொண்டென் மனைவருமோ
அல்லாது தன்னில் வரைகுவ னோவைத் தறைகுவிரே. (சு)

---

உச. தன்மனை வரைதல்.

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினாதல.

357. திங்கட் சடையர் திருமுது குன்றர் சிலம்பிறைவர்
எங்கட் கினிய மகண்மண மிங்குற் றியற்றுவரோ
தங்கட் குரிய மனையின் முடித்துத் தருக்குவரோ
துங்கக் கணைவிழி யாயெங் கியற்றினுஞ் சொன்மகிழ்வே. (க)

செவிலிக்கு இருவர் வரைந்தமை உணர்த்தல்.

358. செந்தீ யுருவர் திருமுது குன்றர் சிலம்பிலன்னோர்
வந்தீ விழுமலர்க் கூந்தனம் மாதை மணந்தனரென்
றந்தீ வருண ரறைந்தன ராயே யதைநவின்றால்
நொந்தீன் றவளென் படுமோ துயரினை நோக்கிரே. (உ)

---

355. பரிவு அகல் - துன்பத்தை நீக்கு.

பி - ம். 'குறுகினளாய்ப் பார்'

356. முக்கா லமுமறி நெஞ்சத் தொடர்பினரே: "கைக்கால சூலத்தர் வெங்கையி லேநற் கடவுடர, முக்கா லமுமுணர்ந் தீர்" (வெங்கைக். 356.) வைத்து - கழங்கு வைத்து; வைத்து என்பது ஒரு சொன்னடையுமாம்.

பி - ம். 'வல்லார் தனத்தனை'

357. பி - ம். 'முடித்துத் தரிக்குவரோ'

358. ஈ - தேனீ; "வந்தீ விழுங்கடிப் பூங்குழலாள்" 373. அந்தீவருணர் - அந்தணர்; முத்தீவருண ரென்று கூறப்படுவர்.

இச்செய்யுள், 373 - ஆம் செய்யுளோடுசிலவகையில் ஒருவாறு ஒத்துளது.

வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உரைத்தல்.

359. சிந்தா குலந்தீர்த் தருண்முது குன்றர் சிலம்பனையே
நந்தா மணிவிளக் கன்னநம் மாதை நலமிகுநாள்
சந்தார் புயத்தர் மணம்புரிந் திங்கே தடங்கணிபின்
வந்தார் நமதில் வருவது தூதர் வருத்தனரே. (௩)

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு
இயம்புகென்றல்.

360. ஐயா னனமுடை நன்முது குன்ற ரணிவரையார்
வையார் நெடுவேல் விழிநந் தலைவியை வார்கனன்முன்
னையா துடனே மணஞ்செய் தவளுட னண்ணினனென்
றையாரு மாதே நுமரிடைப் போய்நீ யறைகுவையே. (௪)

பாங்கி யான் அது முன்னே சாற்றின னென்றல்.

361. தோயம் முடிகொ டிருமுது குன்றர் சுடர்க்கிரியாய்
நேயம் பிறிதின்றி நின்பான் மனம்வைத்த நேரிழையைப்
போயம் மனல்முன் வரைந்தது நீமுன் புகன்றனனற்
றாயம் மொழிசெவி கேட்டுத் துயரந் தணிந்தனளே. (௫)

---

## ௨௫. உடன்போக்கிடையீடு.

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தல்.

362. பொன்னொத்தகொன்றைத்திருமுதுகுன்றர்பொருப்பிடத்தில்
மின்னொத்த நீள்சடை யீருரைப் பீரெம் விரைக்குழலார்க்
குன்னத் தகாத கொடுஞ்சுர நீந்தினு மொள்ளிழையாள்
வன்னத்திவரொடுங்கூடிச்சென்றுளெனும்வார்த்தையையே.

---

359. நந்தா - கெடாத. சந்து ஆர் - சந்தனக்குழம்பு ஆர்ந்த.

360. வை - கூர்மை. ஐ - அழகு.

361. தோயம் - ஆகாய கங்கையை. நீவரைந்ததை முன் புகன்றனனென இயைக்க.

362. பொன்னொத்த கொன்றை: "கார்விரி கடுக்கைப் பொன்னேர் புது மலர்" (அகநா. கடவுள்.) வார்த்தையை உரைப்பீரென இயைக்க.

தலைமகள் தன்செலவு ஈன்றாட் குணர்த்தி விடுத்தல்.

363. பண்ணைப் பழித்திடு சொன்மா திடங்கொள் பழமலையார்
விண்ணைப் பழித்திடு நாட்டிற் றவத்தீர் விளம்பிடுவீர்
பெண்ணைப் பயந்து மிலர்போ லிருந்திடர் பேசலைக்குக்
கண்ணைப் பொருவுறு காளைபின் யான்கான் கடப்பதுவே. (உ)

நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

364. வெள்ளப் புனற்சடை சேர்முது குன்றர் வியன்சிலம்பிற்
றுள்ளப் படுமுழைக் கண்மட மின்னே சுரத்திலுன்மின்
பள்ளப் பயமெனக் காளைபின் சேறல் பகருமென்றாள்
விள்ளப் படுமெனை யீன்றாட் கெனத்தன் விருப்புடனே. (௩)

நற்றாய் அறத்தோடு நிற்றலின் தமர் பின்சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தல்.

365. தேடு மிருவர்க் கரியார் முதுகுன்றர் சீர்ச்சிலம்பிற்
காடு துருவிக் கடுஞ்சிலை வாங்கிய கானவர்கள்
ஓடு மிரதம் வளைத்தார் பெரும்புயத் தொப்பிகந்து
நீடும் வலிகொள் சிலைதாங்கி நின்ற நெடுந்தகையே. (௪)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

366. வானத் துயர்பொழில் சூழ்முது குன்றர் வரையணங்கே
தேனத் திருலீச் செறிவிடைச் செங்கனல் சேருதல்போற்
கானத் தவரைநின் றன்முகத் தாக்காக் கடிந்திலன்யான்
ஊனத் திடாமற் றுரப்ப னிவணீ யுறுசிறிதே. (௫)

தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல்.

367. காத்தென் குடியை யருண்முது குன்றர் கவின்சிலம்பில்
ஆர்த்திங் கடைந்த விறற்கா னவரழி யாதுறவே
ஏத்துந் தலைவர் கரத்திற் பிடித்த வெழிற்சிலைதான்
பார்த்தன் பிடித்த சிலைபோல் விளங்குக பாரிடையே. (௬)

---

364. பள்ளப் பயம் - பள்ளத்தில் ஓடும் நீர்: "பள்ளத் தூப் பாயுநன்னீ ரனையவர்" கம்ப. உலாவியற். 4. பி - ம். 'காதலன் பின்செல்'

365. துருவி - தேடி.

366. தேனத் திருலீச் செறிவிடைக் கனல் சேருதல்: "ஒருவன் றேரினுல், உடைதுஞ் சுடுவிற் றேனுடைந்த வண்ணமே" சீவக. 416.
பி - ம். 'திரையிச் செறி' 367. பார்த்தன் - அருச்சுனன்.

## உகூ. வரைதல்.

வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியது.

368. *பூளைச் சடைமுடி சேர்முது குன்றர் பொருப்பிடத்தில்
வேளைப் பொருவு மிவன்கனன் முன்னே வெளியிலுருப்
பாளைக் கமுகின் மிடற்றாளை நன்மணம் பண்ணினனால்
வாளைக் கடற்புலிக் கண்ணிவர் போல்யார் மணந்தவரே.*

---

## உஎ. இல்வாழ்க்கை.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

369. *செங்காவி நீர்த்தடஞ் சூழ்முது குன்றர் செழுஞ்சிலம்பிற்
சங்காழி மேவுங் கரத்தணங் கேயுன் றலைவியைநான்
இங்காருங் காண மணஞ்செய நீமுன் னிசைந்ததனாற்
பொங்காழி யாகு முவகையின் மூழ்கினன் பொற்புறவே.* (க)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

370. *நற்குன்ற மாகுந் திருமுது குன்றர் நவில்வரையாய்
பொற்குன்ற மன்ன புணர்முலை யாளைப் புணர்ந்துலகிற்
கற்குன்றம் வார்கட னீங்கினு நீங்காக் கவினொடுநீர்
அற்பின்று போலென்று நீங்காமல் வாழி யகலிடத்தே.* (உ)

வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை
பாங்கி தலைவியை வினாதல்.

371. *வெண்ணீ றணிந்த திருமுது குன்றர் வியன்சிலம்பிற்
றெண்ணீர் விளைந்த செழும்பூ மலரிற் சிறந்தமன்னர்
உண்ணீர்மை யோடு மணஞ்செய் யளவுமிவ் வூரலர்ச்சொல்
பெண்ணீர்மை மேவிய மாதே பொறுத்தது பேசுகவே.* (ங)

---

369. சங்கு - வளையல். ஆழி - மோதிரம்.
பி - ம். 'மூழ்கிப் பொலிந்தனனே'

370. அற்பு - அன்பு.

371 தெண்ணீர்......மன்னர்: "சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ், நூற்றிதழலரி னிரைகண் டன்ன, வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து, வீற்றிருந் தோரை" புறநா. 27.

தலைமகள் வருந்தாதிருந்த காரணங் கூறல்.

372. மைந்நாகன் றாதை மகள்சேர் முதுகுன்றர் மால்வரையிற்
பைந்நாக வல்குற் பணிதாழ் மலைமுலைப் பைந்தொடியாய்
கைந்நாக மொத்த கடுந்திறன் மன்னவர் கண்ணருளால்
என்னுகந் தாங்கி யிருந்தேன் மணவினை யெய்தளவே. (௪)

பாங்கி தலைவனை வரையுநாளளவும்
நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல்.

373. செந்தீ வணர்ந்த திருமுது குன்றர் செழுஞ்சிலம்பா
வந்தீ விழுங்கடிப் பூங்குழ லாடன் மணத்தளவும்
அந்தீ வருத்து மதன்மலர் வாளி யடைதுயரால்
நொந்தீங் குறும விருந்ததெவ் வாறு நுவலுதியே. (௫)

பாங்கி மணமனைச் சென்ற செவிலிக்கு
இருவரன்பும் உரைத்தல்.

374. மாகத் தளவு மதில்சூழ் முதுகுன்றர் வான்சிலம்பிற்
காகத் தளவு மிருவிழிக் கோர்மணி காட்டுதல்போல்
பூகத் தளவெழில் கொள்களத் தாட்கும் புரவலர்க்கும்
தேகத் தளவுயி ரொன்றாகக் கண்டேன் றிருந்தனையே. (௬)

பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்கு உரைத்தல்.

375. அடியார்க் கருளு முதுகுன்றர் வெற்பி லமரனையே
மிடியார்க் குதவி செயுமில் லறத்தினில் மெய்வருத்தும்
படியார்க் குதவி விருந்திடு மையர்கள் பாற்பணிபைந்
தொடியார்க் குரிய ளெனநின் புதல்வி துலங்கினளே. (௭)

---

372. மைந்நாகன் தாதை - மைந்நாகமலையின் தந்தையாகிய இமவான்; மகள் உமாதேவியார்.

பி - ம். 'பணிதாழ் புயமுலை'

373. அந்தீ வருத்தும் - மாலைப் பொழுதில் வருத்தும்; அந்தி: நீட்டல் விகாரம்.

375. மிடியார்க்கு - தரித்திரர்க்கு. மெய்வருத்தும்படியார் - துறவறத்தார். ஐயர்கள் - முனிவர்கள்; "ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" (தொல். கற்பு. சூ. 5.) யார்க்குரியளென்னும் வினு தலைவியின்மேம்பாட்டைப் புலப்படுத்தி நின்றது.

பி - ம். 'மெய் வெறுத்திடும்', 'குதவிக்கிடுந்திடும்', 'பாற்பணியத்'

மணமனைச் சென்று வந்த செவிலி
தலைமகள்கற்பு நற்றாய்க்கு உணர்த்தல்.

376. நடைசேர் பயணம் பொருந்தினர்க் கென்று நலமடையத்
தொடைசேர் கருங்குழ லம்மாது மங்கலந் தோன்றநின்றாள்
[illegible]டைசேர் முதுகுன்றர் வெற்பிடை யாயே வியன்புவிவிட்
டடைவோர் குறிப்பின் படிபுரி யாளவ் வருந்ததியே. (அ)

செவிலி நற்றாய்க்குத்
தலைமகள் மனைவாழ்க்கைத் தன்மை உரைத்தல்.

377. சேமன் கொடியர் திருமுது குன்றர் சிலம்பிலன்னே
வீமன் புதல்வி நளன்றோளின் மாலையை வேயுமில்லிற்
காமன் றனைநிகர் கட்டழ கெய்திய காந்தனுடன்
பூமன் கருங்குழ லம்மாதின் மாடம் பொலிந்ததுவே. (கூ)

செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்.

378. சுரும்பார் குவளை வயன்முது குன்றர் சுடர்க்கிரியில்
இரும்பார் வலியுடைத் திண்டோளின் மன்ன ரெதிர்ந்தவர்தம்
பெரும்பார் கொளுந்திறற் போர்பயி லுளும் பிணைவிடியாள்
அரும்பார் முலைநம் மடந்தையின் முன்வர லந்தியிலே. (கo)

---

## உஅ. பரத்தையிற் பிரிவு

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு
ஏது இஃதாம் அவ்விறைவிக் கென்றல்.

379. மலையிற் பெரும்புகழ் சேர்முது குன்றர் மணிவரையிற்
கலையுற் றவிர்விழி மானினஞ் சூழ்ந்தெனக் காவலரைச்
சிலையிற் பொருறுதல் வல்லியர் சூழ்தற் றெரிந்திடின்மின்
நிலையிற் கலங்கிய வூடலைத் தாங்கி நெடிதுறுமே. (க)

தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல்.

380. புங்கம் பொருந்து மதில்சூழ் முதுகுன்றர் பொற்கிரியார்
சங்கங் கழன்றிட வென்னிறை கொண்டு தணந்ததற்பின்

---

376. பயணம் - பிரயாணம்; "விட்டவதி கைப்பதியி னின்றுபய ணம்ப யணம் விட்டுவிளை யாடியபயன்" கலிங்கத்துப்பரணி. 287.

377. சேமன் - இடபம் நிலைபெற்ற. வீமன் புதல்வி - தமயந்தி. இல்லின் - வீட்டைப்போல

அங்கங் குழைந்து மனந்தளர் வெய்த வருந்துயராற்
பங்கம் பொருந்தின ரென்போ லொருவரிப் பாரிலையே. (உ)

ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல்.

381. மரியா திருந்திட வேண்டிய பேர்கண் மரித்தனரேற்
பரியா துடலருள் சீர்முது குன்றர் பனிவரையார்
தரியா தனது திருமனை வாயிலிற் சார்ந்தவிற்
பிரியா திருந்தும் பிரிந்தாரிற் றன்பெண்கொல் பெய்வளையே.()

இறையகன் புறத்தொழுக் கிறைமகள் உணர்த்தல்.

382. கலைமாது பாடும் புகழ்சேர் முதுகுன்றர் கார்வரையார்
கொலைமாது வாழுந் தமதிரு தோள்கள் கொடுத்திடுபொன்
விலைமாதர் தம்வச மாக்கிநம் மில்லினின் மேவிலரால்
அலைமாது போன்ற வணியுடை யாயெங்ங னாற்றுவனே. (ச)

தலைவியைப் பாங்கி கழறல்.

383. பலத்திற் கரிய பலமாகும் வீடு பயத்தலின்றல்
நிலத்திற் கரிய திருமுது குன்றர் நெடுவரையில்
நலத்திற் குரிய கொழுநனெவ் வாறு நடந்திடினும்
குலத்திற் பிறந்த குடிமாதர்க் காமோ குறைசொல்லலே. (ரு)

தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி உழையர்கண் டழுங்கிக் கூறல்.

384. கொங்குனி வண்டு விழுகா முதுகுன்றர் கூர்சிலம்பிற்
செங்கனிக் கொவ்வை யிதழமு தேசெம் மலர்புனைந்து
பங்குனி மாதம் பலாசலர்ந் தென்னப் பழிக்குநர்முன்
இங்குநீ வந்த தலர்தழைப் பெய்தி யிருந்ததுவே. (சு)

---

380. புங்கம் - இடபம். சங்கம் - வளை. தணந்ததற்பின் - நீங்கியபின்.

381. மரியாது - இறவாமல். உடல் பரியாது அருள் என மாற்றி இயைத்துக்கொள்க; உடல் பரியாது அருள் - சரீரத்தைச்சுமக்காத வண்ணம்அருளுகின்ற.

382. கொலைமாது - துர்க்கை. அலைமாது - திருமகள்.

பி - ம் 'எங்ங னாற்றுவதே'

384. கொங்கு - தேனை. உனி=உன்னி - நினைத்து. பங்குனி மாதம் பலாசு அலர்ந்தென்ன: "பங்குனி மலர்ந்தொளிர் பலாசவனமொப்பார்" கம்ப. ஊர்தேடு. 70.

பரத்தையர் கண்டு பழித்தல்.

385. அவிர்கொன்றை வேணியர் சீர்முது குன்ற ரணிவரைமேற்
கவிரொன்று பூத்துக் கருஞ்சூற் புயற்றலை காட்டினபோல்
தவிர்கின்ற தின்மயற் காமப் பரத்தையர் சார்மறுகில்
நவில்செம் மலர்வேய்ந் திவள்வந் தனளிங்கு நாண்டுறந்தே. (எ)

பரத்தை உலகியல் நோக்கி விடுத்தலின்
தலைவன் வரவு கண்டு வந்து வாயில்கள் மொழிதல்.

386. பன்னகப் பூணணி நன்முது குன்றர் பணிவரைமேல்
மின்னலைக் கண்டிடு கேதகை பூநனை மேவுதல்போற்
கன்னலைக் கண்டைப் பழித்தசொன் மாதே கழறுமன்னர்
உன்னிலைக் கேகு மடவார்பின் வந்தா ருலகியற்கே. (அ)

தலைமகன் வரவு பாங்கி அரிவைக் குணர்த்தல்.

387. சிறுப்பார் களஞ்சேர் முதுகுன்றர் வெற்பிற் கழறுநமை
வெறுப்பார் நமது திருமனை வாய்தலின் மேவினரேல்
மறுப்பார் மனம்விட் டவரெதிர் சென்று மனமகிழ்நீ
பொறுப்பார் தமக்குப் புகழல வோசொலும் பூங்கொடியே. ()

தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.

388. கணங்கட் கிறைவர் திருமுது குன்றர் கவின்சிலம்பீர்
மணங்கட் கிடமெனும் பூவீ ழளியென மங்கையர்பால்
இணங்கிப் பிரியுமை நெஞ்சத் திருத்தி யியம்புறும்யான்
வணங்கிப் பரவ வரவிட்ட பேரிங்கு வாழியவே. (கo)

புணர்ச்சியின் மகிழ்தல்.

389. தொடுநீ ருலகந் தொழுமுது குன்றர் சுடர்க்கிரியில்
அடுநீ ரறுபான் மதுக்கலந் தாறு வளவுமின்பே

---

385. கவிர் - முள்ளுமுருங்கை. புயலென்றது கூந்தலை.

386. மின்னலைக் கண்டு தாழை மலர்தல்: 114 - ஆம் செய்யுளின் குறிப்பைப் பார்க்க.

387. மறுப்பு ஆர் - மறுத்தல் பொருந்திய. 407; பொறுப்பார் தமக்குப் புகழலவோ சொலும்: "ஒறுத்தார்க்கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்" (குறள்.) சொலும் - சொல்லப்படும்.

388. கணங்கட்கு - பூதகணங்களுக்கு. பூ வீழ் அளி - பூவில் விழுகின்ற வண்டு; "தோடு மன்னு சுரும்பென வீழவே" வி - பா: சம்பவச்.

வடுநீர்மை கொள்விழி மங்கைநல் லாடரு மாறிலின்பம்
படுநீர்மை யாலங்க மெல்லாங் களித்துப் பயன்பெற்றதே. (கக)

வெள்ளணி அணிந்து விடுத்துழித்
தலைமகன் வாயில் வேண்டல்.

390. காமடுச் சூழுந் திருமுது குன்றர் கவின்சிலம்பில்
மாமலர்த் தென்ன வெளுப்பணி பூண்டு வருமடவாய்
பாமுக நீங்கித் தலைவிதன் னூடலைப் பண்படுப்பாய்
இராவரும் வேள்கணை யென்மேற் பொருந்தா திடாறவே (கஉ)

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்.

391. சுதையுற் றெழுந்த மதின்முது குன்றர் சுடர்க்கிரியில்
உதையத் தெழுந்த விளங்கதிர் போல வொருமகனை
சிதைவற்ற செல்வத் திறைவா வுயிர்த்துத் திருமனையில்
வதிவுற்று நெய்யாடி னண்மேனி யெங்கள் வரிவிழியே. (கங)

தலைமகன் தன்மனத்து உவகை கூர்தல்.

392. தஞ்சங் கலந்த விமையவர்க் காகத் தனியருளால்
நஞ்சங் கலந்த களமுது குன்றர் நவில்சிலம்பிற்
கஞ்சங் கலந்தபொன் போல்பவள் பெற்றநங் காதலனை
நெஞ்சங் கலந்த மகிழ்வொடு காண்பதெந் நேரமதே. (கச)

தலைவிக்கு அவன் வரல் பாங்கி உணர்த்தல்.

393. பொதுவி னடம்புரி நம்முது குன்றர் பொருப்பிடத்தில்
இதுவி னமதென வெண்ணுமற் போன விறைவரின்று
விதுவில் விளங்குஞ் சிறுவனைக் காண விருப்படைந்து
மதுவில் விருப்புறு வண்டென வாய்தன்மு ம வந்தனரே. (கரு)

---

389. தொடுநீர் - சகரரால் தோண்டப்பட்ட கடல்; பால் மறுக்கலந்தால் நாவளவும் இன்பே. நீர்மை - மாவடுவின் தன்மையை.

390. மடு - புண்ணிய மடு.

391. சுதையுற் றெழுந்த மதில்; சுதை - சுண்ணச்சாந்து; "மஞ்சுசூட்டி யன்ன சுதைமதில்" (தஞ்சை. 141.) உதையத்.........உயிர்த்து: "பொருகடற் பருதி போலப் பொன்னனான் பிறந்த போழ்தே" சீவக.

392. கஞ்சங் கலந்த பொன் - திருமகள்; கஞ்சம் - தாமரைமலர். வெண்கலம், பொன்னென்னும் உலோகப்பெயர்களும் இதில் தொனிக்கின்றன.

393. இது நமது இல் என. விதுவில் - பிறைச்சந்திரனைப்போல; "மாகம் மீன்ற மாமதி யன்னான் வளர்கின்றான்" சீவக.

தலைவி உணர்ந்து தலைவனோடு புலத்தல்.

394. மின்மேனி கொள்ளுந் திருமுது குன்றர் வியன்சிலம்பில்
நன்மேனி குன்றி மடவா ரிடைமுக நாணிநின்ற
என்மேனி மைந்தனைப் பெற்றழுக் குற்ற வெனைத்தொடினின்
பொன்மேனி மாசுறுங் காலையி னீர்போம் பொருந்திடத்தே.()

தலைமகள் பாணனை வாயில் மறுத்தல்.

395. மடுவால் வளையூர் வயன்முது குன்றர் மணிவரைமேற்
படுகூவல் வீழ்பொரு டாங்கொள நீர்நிலை பார்க்குநர்போல்
நெடுவே லிறைவர் நினையென் கருத்தி னினைவறிய
விடுதூத னாக்கினர் பொய்ப்பாண வென்முன மேவலையே. ()

வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

396: செய்யால் விளங்குந் திருமுது குன்றர் சிலம்பின்மன்னர்
நெய்யால் விளங்குறு மெம்பெரு மாட்டி நினக்குரைத்த
பொய்யால்விளங்குமொழிகூறிவாவெனப்போந்தவென்கண்
கையா லெறிந்தது 'கல்லல்ல நின்மலர்க் கண்ணருளே. (௧௮)

விறலி வாயில் மறுத்தல்.

397. தூயர் மனங்கொளு நம்முது குன்றர் சுடர்க்கிரியிற்
காய மெலிந்து மனநொந்த வென்கண் கருணையிலார்
வாயன் மருவின ரென்றோது பாணர் மடமகளே
தேயர் நகைப்ப வெனதுமுன் னேநீ செறியலையே. (௧௯)

விருந்தோடு வந்துழித்
தலைமகள் பொறுத்தல் கண்டு
தலைமகன் மகிழ்தல்.

398. தீராத பாவந் திருமுது குன்றரைச் சேர்ந்தவர்பால்
வாரா தெனவே மலர்வார் குழலி மனப்பிணக்குச்
சீரார் விருந்து வரவெதிர் கண்டதுந் தீர்ந்ததுகாண்
ஏரார் பெரியரைக் காணி லிகத்தினு மின்பமுண்டே. (௨0)

---

394. மின் - உமாதேவியாரை. நன்மேனி - நல்லநிறம். எல் மேனி - விளக்கத்தையுடைய மேனி.

395. கூவல் - கிணற்றில்.

விருந்துகண் டொளித்த ஊடல் வெளிப்பட நோக்கிச்
சீறேலென்றவள் சீறடி தொழுதல்.

399. புகழ்வாரைப் புங்கவ ராக்கு முதுகுன்றர் பூஞ்சிலம்பில்
இகழ்வார் கருங்குழற் றேனே மனச்சினந் தீர்ந்திடுவாய்
அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யடைதலில்லா
இகழ்வாரைத் தாங்க லலந்தமிழ் வேத மிசைத்ததுவே. (உக)

இஃது எங்கையர் காணின் நன்றன்றென்றல்.

400. கண்ணன் பரவுந் திருமுது குன்றர் கவின்சிலம்பா
எண்ணந் தவிர்த்தெனை யெந்திழை யார்முன மிங்குறுநீ
உண்ணெஞ்ச வென்னடி வீழ்ந்ததே முகம னுரைத்தனையால்
நண்ணுந் திறமிதை யெங்கையர் காண்குறி னன்றலவே. (உஉ)

அங்கவர் யாரையும் அறியே னென்றல்.

401. இந்திரற் கஞ்சாத் திருமுது குன்ற செழில்வரையிற்
சந்திரற் கொத்த திருமுகத் தாய்நினைச் சார்ந்ததற்பின்
ஐந்தரு நீழ லரம்பைய ரேனு மகநினையேன்
சிந்தையில் வேறு நினையா'தொழிதல் சிறப்புடைத்தே. (உ௩)

தலைமகள் காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

402. காசி சுடலை யெனமுது குன்றுறு கண்ணுதலோன்
மாசி மகநம் மறுகிடைத் தேரிலென் மைந்தனைக்காண்
தாசி யொருத்தி தழுவ நினக்குறு தங்கையென்றூர்
கூசி மனையிற் புகுந்தேன் மகளிர் குழுவகன்றே. (உ௪)

---

399. புங்கவர் - தேவர். தமிழ்வேதம் - திருக்குறள். அகழ்வாரை...... இசைத்ததுவே: "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" குறள்.

400. எங்கையர் - என் தங்கையார்; என்றது பரத்தையரை.

401. இந்திரற்கு அஞ்சாத் திருமுதுகுன்றர் - இந்திரன் மலைகளின் சிறகரிந்த கதையை உட்கொண்டு இங்ஙனம் கூறினர்; "புரந்தர னஞ்சு பழமலை வாணன்" பழமலையந்தாதி, 42.

402. மாசி மகம், இத்தலத்தில் பிரம்மோத்ஸவத்திற்குரிய நாள்.

### தலைமகளைப் பாங்கி புலவி தணித்தல்.

403. வெள்ளிக் கிரியை வெறுத்த முதுகுன்றர் வெற்பிடத்தில்
எள்ளிற் பழுதாம் பதம்வீழ் கணவனை யேந்திழையாய்
வள்ளிக் குருகித் திரிந்துபின் கொள்குகன் வந்தபின்னர்
தள்ளிச் சினமுற் றனளோ புரந்தரன் றன்மகளே. (உரு)

### தலைவி தணியாளாகத் தலைமக னூடல்.

404. கடலைக் குடித்த முனிதாழ் முதுகுன்றர் கார்வரைமேல்
அடலைக் குறித்த வயில்விழி மங்கை யகனெடுவாள்
தொடலைக் குறித்த மலைச்சாரல் வந்திடு தோகையல்லள்
உடலைக் குறித்த வருநதுயர் நெஞ்சே யுறுவதென்னே. (உசு)

### பாங்கி யன்பிலை கொடியை யென்று இணர்த்தார் மார்பனை இகழ்தல்.

405. வான்சேர் பொழில்சூழ் திருமுது குன்றர் மணிவரைமேல்
மான்சேரும் பூச்செண் பகமல ரென்ன மதித்தனைமுன்
கான்சேர் குழலியை யிப்போது நீளுங் கவிர்மலரா
ஊன்சே ரயிலுடை நீள்கர மன்னவ வுன்னினையே. (உஎ)

### மகனும் ஆற்றுமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடல்.

406. வானம் பொருந்தும் புகழ்முது குன்றர் மணிவரைமேல்
மானம் பொருந்தும் பெரியோர் சிறிய மடமையர்பால்
ஊனம் பொருந்த வருகுவ ரோவதை யுன்னலராய்க்
கானம் பொருந்திய பூந்தார்ப் புயமுடைக் காவலனே. (உஅ)

### தலைமகன் புணர்ந்து நீங்கியபின் வந்த பாங்கியோடு தலைவி தன்மகனைப் புகழ்தல்.

407. கறுத்தே விளங்குங் களமுது குன்றர் கனகவெற்பில்
வெறுத்தே நமது மனையைக் கடந்தவர் வேண்டிநம்மிற்
குறித்தே யடைந்திடத் தோன்றிடு சேயாற் குறையனைத்தும்
பொறுத்தே யிருந்திடு நாம்புகழ் பெற்றனம் பூங்கொடியே. ()

---

403. எள்ளின் - இகழ்ந்தால். பதம் வீழ் - காலில் வீழ்ந்த. குகன் - முருகக் கடவுள். புரந்தரன் மகள் - தெய்வயானை.

405. கவிர் மலரா உன்னினை யெனக் கூட்டுக.

பி - ம். 'மான்சேரும் பூச்'

406. உன்னலராய் வருகுவரோ என இயைக்க.

### தலைவி தலைவனைப் புகழ்தல்.

408. ஏந்தெழின் மங்கை யிடமுது குன்ற ரிருஞ்சிலம்பர்
பூந்துணர்ச் சோலையிற் கண்டவந் நாளன்பு போக்கிலராய்
மாந்தளிர் மேனி யழுதே யுலகில் வனிதையர்க்குக்
காந்தனைப் போல வுறவிலை யென்பது காட்டினரே. (௩௰)

### பாங்கி தலைவியைப் புகழ்தல்.

409. நலத்திற் சிறந்த முதுகுன்றர் வெற்பிடை நம்மிறைவி
நிலத்திற் கிடந்தமை கால்காட்டு மென்னு நிகழ்மொழிபோல்
வலத்திற் சிறந்த மகிழ்நர்செய் குற்ற மனம்பொறுத்தே
குலத்திற்பிறந்தகுடி காட்டிக்கற்பினைக்கொண்டனளே (௩௧)

---

## ௨௯. ஓதற் பிரிவு.

### கல்விக்குப் பிரிவு தலைமகனு லுணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்.

410. இறைவிக் கொருதுணை யாமுது குன்ற ரெழிற்சிலம்பர்
துறவிக் கருந்துணை பேரறி வாகச் சொலுமதுதான்
மறவிக் கிகலுறு கல்வியி னால்வரு மற்றதனைப்
பிறவிப் பயன்பெறக் கற்றிடப் போயினர் பெய்வளையே. (க)

### தலைமகள் கார்ப்பருவங் கண்டு வருந்தல்.

411. வணர்வார் குழலா ளிடமுது குன்றர் மணிவரையார்
உணர்வார் பெருங்கல்வி கற்றிடப் போயின ருன்னிலராற்
புணர்வார் முலையாய் கடன்மேய்ந்த கொண்டற் பொலிகுரலைப்
பணர்வார் பொழிலகங் கேட்டன ளுள்ளம் பதைத்திடவே.()

---

408. பூந்துணர்.........போக்கிலராய்: "மகிழ்நர் முன்னாள், உண்டா கியபழங் கேண்மையிந் நாளு மொழிந்திலரே" (தஞ்சை. 406.) வனிதை யர்க்கு......காட்டினரே: "கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை" (நான்மணிக். 56); "கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லை குறிப் பினென்று, தண்டா தவர்சொன்ன சால்புகண்டேன்" (தஞ்சை.406.)

409. கால் - முளை: நிலத்திற்.........மொழி: "நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும், குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்" குறள்.

411. பணர் - மரக்கிளை.

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

412. செற்றா ரெழும்பணி சீர்முது குன்றர் செழுஞ்சிலம்பர்
கற்றார் பயன்பிறர் தீமையை நீக்கல் கடனெனத்தாம்
உற்றா ருரைப்பது கேட்டிங் குறுவ துரைப்பதற்குப்
பற்றார்வ மோடு முனம்வந்த தாலிப் படர்முகிலே. (௯)

---

## ௯௦. காவற் பிரிவு.

காவற்குப் பிரிவு தலைமகனால் உணர்ந்த தோழி
தலைமகட்கு உணர்த்தல்.

413. செய்யம் புறுகயல் பாய்கா முதுகுன்றர் சீர்ச்சிலம்பில்
மையம் பனவிழி மங்கையர் நாட்கு மதியனையாய்
ஐயம் பவன்றனை யேரால் வெலுநம் மரசரின்று
வையம் பரித்தல் பெறவகன் றார்தம் வலியுடனே. (௧)

தலைமகள் கூதிர்ப்பருவங் கண்டு வருந்தியது.

414. தளிர்படு மேனி யுமைசேர் முதுகுன்றர் தண்சிலம்பிற்
களிபடு சிந்தையர் முன்னெனை நீத்துக் கருதிலராய்
அளிபடு கூந்த லவிரிழை மாதே யகமொருவிக்
குளிர்பனிவாடைக்கெனைக்கொடுத்தேகினர்கொற்றவரே. (௨)

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

415. பூநந் திடங்கொளுஞ் செய்முது குன்றர் பொருப்பிடத்தில்
நீநந்த லென்கொல் வரிவிழி மாதே நினைநினைந்து
மாநந்த வேல்விடு காளையை யொத்துறு மன்னரின்று
கூனந்த வார்சரற் காலங் குறித்துக் குறுகுவரே. (௩)

---

413. நாட்கு - நட்சத்திரங்களுக்கு. மங்கையர் நாட்கு மதியனையாய்: "பன்மீனாப்பட் பான்மதி போல, இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (சிறுபாண். 219-20.) ஐயம்பவன் - மன்மதன்.

415. பூ நந்து இடம் கொளும் - தாமரைப்பூவைச் சங்கு இடமாகக் கொள்ளும். மா நந்த - சூரனாகிய மாமரம் கெடும்படி. காளை - முருகக்கடவுள். கூன் நந்த ஆர் சரற்காலம் - யாவருக்கும் வளைதல் மிகும்படி ஆர்ந்த சரற்காலம்.

### ௯௧. தூதிற் பிரிவு.

தூதிற்குப் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி
தலைமகட்கு உணர்த்தல்.

416. பரவைக்குச் சந்து செலுமுது குன்றர் பனிவரையார்
உரவுக் கருங்கடன் மாநில மன்ன ருறுமுரண்போய்
விரவிக் கலந்துறு நட்பாகச் செய்து விடைகொடுப்ப
அரவுக் குறழிடைப் பைந்தொடி யாயின் றகன்றனரே. (௧)

தலைமகள் முன்பனிப் பருவங்கண்டு வருந்தியது.

417. சூலங் கரத்திடைக் கொண்முது குன்றர் சுடர்க்கிரியார்
ஞாலங் கருத்திடைக் கொள்ளர சர்க்கு நடுவுரைக்குஞ்
சீலங் குறித்தவர் செல்போது முன்பனி சேர்ந்ததுதான்
காலங் குறித்த பகைபோ லெனக்கின்று காட்டியதே. (௨)

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

418. பண்ணோ டியசொல் லுமைசேர் முதுகுன்றர் பன்வரையார்
கண்ணோ டியவழி யுள்ளம் பொருந்து கடிதடைந்தார்
விண்ணோ டியல்புவி முன்பனி மூடுதன் மேவவிரார்
பெண்ணோ டவரும் பிறந்தவ ராதலிற் பெய்வளையே. (௩)

---

### ௯௨. துணைவயிற் பிரிவு.

பாங்கி தலைமகட்கு உணர்த்தல்.

419. பூமே வியதடஞ் சூழ்முது குன்றர் பொருப்பிறைவர்
மாமே வியதமை நட்டோ ரிடுக்கணை மாற்றுதற்குத்
தாமே வியதுணை யன்றிப்பின் னில்லர் தணந்துநினை
நோமே வியபின் பனிக்காலம் போயினர் நோக்கிலரே. (௧)

தலைவி பின்பனிப்பருவம் கண்டு வருந்தியது.

420. வேலைக் கருநஞ் சுணுமுது குன்றர் வியன்சிலம்பில்
மாலைப் புயமுடை யன்பரிப் போது மனம்பொருந்தி

---

416. முரண் - பகைமை.

பி - ம். 'அரவுக்குறழல்குற்'

418. பண்ணோடிய - பண்தோற்றோடுதற்குக் காரணமான. இராராய் அடைந்தாரென முடிக்க.

காலைப் பணியு நலமறு வாடையுங் கண்டகன்றார்
கோலைப் பெறுதனு மன்னவர்க் குற்றுழிக் கூடுதற்கே. (உ)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

421. பொன்னங் கிரியை வளைமுது குன்றர் பொருப்பணங்கே
பன்னுந் துணையினர்க் குற்றுழிப் போன பரிவெனநீ
மன்னுந் துயர்பெறப் பின்பனிக் காலம் வருத்துதலை
உன்னுங் கணவர் வருவரிப் போதே யொழிதுயரே. (௩)

---

## ௩௩. பொருள்வயிற் பிரிவு.

பொருள் வயிற்பிரிவு தலைமகனுலுணர்ந்த
தோழி தலைமகட்கு உணர்த்தல்.

422. மின்கொண்டன்மேவும்பொழின்முதுகுன்றர்வியன்சிலம்பில்
வன்கொண்ட கொங்கை மலர்த்திரு வொத்திடு வார்குழலாய்
முன்கண் டறியா தவர்போல வின்று மொழிநசையாற்
பொன்கொண் டடைந்திடப் போயின ரின்று புரவலரே. (க)

தலைமகள் இளவேனிற்பருவங்கண்டு வருந்தியது.

423. பைந்துணர்க் கொன்றை புனைமுது குன்றர் பனிவரையார்
செந்தளிர்ச் சூத மரமேறிப் பூங்குயில் சேர்குரலால்
வந்தது நல்லிள வேனிலென் றேசொல் வருத்திடவும்
புந்தியிற்செம்பொன்விருப்படைந்தன்பின்றிப்போயினரே. ()

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

424. துடியா ரிடையாய் முதுகுன்றர் வெற்பிற் றுணர்ப்பொழிலாம்
படியாரு மாதர் புதுவணி தாங்கிப் பரிவுறநல்
வடிவார் மதனன் புயமே விரதி மலர்த்தொடைவேய்
கடியார் மணமென்று பொன்கொண்டு வந்தனர் காதலரே.(௩)

---

420. கோலை - அம்பை. மன்னவர்க்கு உற்றுழி - பிற அரசர்களுக்குத் துன்பம் வந்தவிடத்து; "வேந்தர்க்குற்றுழி" இறை. சூ. 35.

422. வன்கொண்ட - வன்மையைக் கொண்ட.

423. குயில்......போயினரே: "விரிகாஞ்சித்தாதாடி யிருங்குயில் விளிப்பவும், பிரிவஞ்சாதவர்" (கலி. 34.); "சூரமாங்குயிற் சின்னங்கள் . காமத் துரைவந்தான் றுரைவந்தானென்றூத" திருக்குற்றலக்குறவஞ்சி, 46.

பி - ம். 'செம்பொன் வியப்படைந்து'

தலைமகள் உருவெளிப்பாடு கண்டு தலைமகன் சொல்லியது.

425. உமையுற்ற பங்கர் முதுகுன்ற வாண ருயர்வரையில்
சுமையுற்ற கொம்மைப் புணர்மா முலையுஞ் சுரிகுழலும்
அமையுற்ற தோளு மயிலார் நெடுங்கணு மாயமைய
இமையுற்ற வேல்விழி பார்க்குந் திசைதோ றெதிர்ப்படுமே. ()

பாசறை முற்றி மீண்டுவந்த தலைமகன்
பாகற்குச் சொல்லியது.

426. பொலமன்னு கொன்றை யணிமுது குன்றர் பொருப்பிடத்தில்
பலமன்னர் தங்களை வென்கண் டனமினிப் பாய்பரித்தேர்
வலமன் னியபுயங் கொள்வல வாகம் மணிநகர்க்கு
நலமன் னுறுகல மம்புவிற் போல நடத்துவையே. (௫)

தலைமகன் கார்ப்பருவங் கண்டு உவந்து சொல்லியது.

427. பெண்கட் கரசி யிடமுது குன்றர் பிறழ்சிலம்பிற்
கண்கட் கினியனும் யானுமொன் றாகக் கலந்துநெஞ்சம்
பண்கற் றனங்கடன் மேய்ந்து விசும்பிற் படர்முகில்காள்
மண்கட் கினியன இகவன்றும் மாரி வழங்குகவே. (௬)

---

முன்பு அகப்படாமல் இருந்தமையின் பதிப்பிக்கப்படாமல் இருந்த இந்நூலின் 48 - ஆம் செய்யுள் வேறு ஒரு பிரதியில் தனியே எழுதப்பட்டிருந்தது; அது வருமாறு:—

பாங்கன் எவ்விடத்து எவ்வியற்றென்றல்.

* விரைசேர் மலரவன் போற்றும் பழமலை மெய்யர்வெற்பில்
உரைசேர் பசும்பொற் குடமுலை வாட்க ணொளிர்முகிலின்
நிரைசேர் வளைய கருங்குழற் செவ்வாய் நிகழ்கொடிக்குப்
புரைசேர் விலாவிட மேதியல் பேது புகலுவையே.

---

425. அமையுற்ற - மூங்கிலை ஒத்த; உற்ற - உவமவுருபு; "செப்புற்ற கொங்கை" (திருச்சிற். 354.) வேல்விழி - தலைவி; எழுவாய்.

426. கலம் அம்புவிற்போல - மரக்கலம் நீரிற் செல்லுதலைப்போல; அம்பு வடமொழியாதலின் உயிர்வந்தவழி உகரம் கெடவில்லை. தேரை நகர்க்கு நடத்துவை யெனமுடிக்க.

427. பெண்கட்கரசி - உமாதேவியார். பண் - அமைவு.

* விரை - வாசனை. முகிலின்நிரை - மேகத்தின்வரிசை. புரைசேர்வுஇலா - குற்றம் சேர்தலில்லாத.

பழமலைக்கோவை முற்றுப்பெற்றது.

உ

# சிறப்புப்பாயிரச் செய்யுட்கள்.

(விருத்தம்.)

1. பங்கயத் தயன்செய் மலைகளி லுயர்ந்த
பழமலை யிடத்துறை யிறைவன்
பொங்கிய புகழ்சே ரைந்திணைக் கோவை
புதுமொழித் தமிழினாற் செய்தான்
செங்கயற் செய்யுஞ் சோலையுஞ் சூழ்ந்த
சீர்த்துறை மங்கைமா நகரிற்
சங்கையில் கருணைச் சிவப்பிர காசன்
தருசாமி நாதபா வலனே.

(கட்டளைக் கலித்துறை.)

2. கோடார்முதுகுன் றுடையாருக்கைந்திணைக்கோவைசெய்தான்
தோடா ரலர்த்தண் டலைசூழ் துறைமங்கைத் தொன்னகர்வாய்ப்
பீடார் கருணைச் சிவப்பிர காசையன் பெற்றெடுத்த
சேடார் புகழ்தருஞ் சீர்ச்சாமி நாதைய தேசிகனே.

3. இருவோருந் தேடும் பழமலை நாத ரெழிற்சடைமேல்
திரையாருந் தன்குல மாமகி ழன்னையுஞ் சி............
............ாருங் ...காவையுஞ் .........சுவாமி நாதனுயர்
வரமாரு முத்துக் குமாரனென் றோதுறு மன்னவனே.

---

1. துறைமங்கை - துறைமங்கலம். சங்கை - அளவு.

2. கோடு - சிகரம். தோடு - பூவிதழ்.

3. இச் செய்யுள் எழுதப்பட்டுள்ள ஏடு சிதைந்திருத்தலின் இதன்முழு உருவமும் புலப்படவில்லை.

# பழமலைக் கோவை

செய்யுள் முதற்குறிப்பகராதி.

[எண்—பக்கஎண்.]


| | |
|---|---|
| அகலுந்தடம் | 52 |
| அங்கமனையெனக் | 72 |
| அஞ்சத்தவன் | 70 |
| அடியர்க்கிரங்கு | 30 |
| அடியார்க்கருளும் | 80 |
| அடியார் பிறவி | 13 |
| அணிபுற்றநீள் | 10 |
| அத்திச்செவ் | 68 |
| அப்பிசைந்தாரும் | 40 |
| அரங்கையகற்றும் | 8 |
| அரவின் குழை | 35 |
| அருகின்மடந்தைய | 73 |
| அருள்விழிகொண்ட | 28 |
| அலர் கூறிய | 70 |
| அலையிலிருந்தவன் | 43 |
| அவிர்கொன்றை | 83 |
| அளிசேர்தழி | 72 |
| அறவர் வழுத்தும் | 17 |
| அறிவில் விளங்கிய | 68 |
| அறுகு பெருக்கும் | 64 |
| அன்பின் விளங்கு | 63 |
| அன்னஞ்செறி | 57 |
| அனந்தேடுடைந்து | 53 |
| அனமே செறியுந் | 41 |
| ஆடுங்கொடிமுது | 69 |
| ஆரணம் போற்றுங் | 45 |
| ஆவிக்குறுதுணை | 9 |
| ஆற்றில் விடுத்த | 8 |
| இசையார் பெரு | 12 |
| இடபக்கொடியார் | 62 |
| இந்திரன்சந்தா | 86 |
| இரவியொடும் | 69 |
| இருவர்க்கருளு | 64 |
| இருவோரும் (சிறப்) | 93 |
| இருளுக்கிடமாய் | 60 |
| இலங்குமயிலற் | 39 |
| இலங்கதிரென்ன | 29 |
| இறைவிக்கொருதுணை | 88 |
| இன்னுரிவரென் | 16 |
| ஈர்மஞ்சுறு | 58 |
| உணர்வார்க்கரிய | 28 |
| உமைபுற்றபங்கர் | 92 |
| உழைகண்ட | 13 |
| எட்டாருருவர் | 47 |
| எமையாளுமையர் | 8 |
| எய்தகணையரி | 50 |
| எருக்குமிதழியு | 23 |
| எல்லா முணர்ந்த | 76 |
| ஏந்தெழின் மங்கை | 88 |
| ஏலக் கருங்குழல் | 2 |
| ஏற்றுக் கொடியர் | 9 |
| ஏறூர் கொடியர் | 5 |
| ஐயானனமுடை | 77 |
| கஞ்சப்பத | 63 |
| கஞ்சன்றலை | 4 |
| கடலைக் குடித்த | 87 |
| கண்ணான் பரவுந் | 36 |
| கண்ணூர் நுதலர் | 11 |

| | | | |
|---|---|---|---|
| கணங்கட் கிறைவர் | 83 | காலின் வலை முத் | 40 |
| கணிப்பில் | 49 | காவற் புனத்தினி | 62 |
| கம்மூர்பொழில் | 54 | காவன் பூம் | 67 |
| கரத்திற்படு | 50 | காற்றார்பவ | 75 |
| கராம்புச்சூழுங் | 84 | குருகார்மலர்த் | 35 |
| கருகுங்களத்தர் | 41 | குலவும் விடை | 70 |
| கருஞ்செற்றுகல் | 66 | குலைசாய்கதலிகள் | 10 |
| கரும்பாடு மோசை | 49 | குளத்திற் கிசைந்த | 63 |
| கருவிற்புகுதா | 44 | குறப்பாவை நம்பனை | 74 |
| கருவேலை வீழா | 52 | கூற்றைக் கடந்த | 56 |
| கலர்கண்டு | 42 | கூனையாகப் | 74 |
| கலைமாது பாடும் | 82 | கூனிரும்பால் | 33 |
| கலையாகத் தோலைப் | 35 | கூனும்பிறையணி | 25 |
| கலையார் புகழ் | 38 | கைக்கா ககங்கணர் | 10 |
| கலையிற் பரந்த | 34 | கையார் மழுவர் | 2 |
| களவேகருங் | 11 | கையுற்றநவ்வியர் | 64 |
| கற்பனையொன்று | 46 | கொங்காற் சிறந்த | 49 |
| கற்புக் கருத்தவஞ் | 67 | கொங்குணி | 82 |
| கற்றூர்பரவுந் | 72 | கொந்தார் கடுக்கைத் திரு முதுகுன்றர் | 56 |
| கறுத்தே விளங்கும் | 87 | | |
| கறுப்பார்களஞ் | 83 | கொந்தார் கடுக்கை முது குன்றர் | 37 |
| கன்னிக்கிடத்தை | 61 | | |
| கனய்கடவழும் | 47 | கொழிக்குந் தரள | 7 |
| கனய்கொள் | 66 | கொன்றைச் சடைமுடி | 54 |
| கனத்திற்திகழ் | 22 | கொன்றைச் சடையார் | 3 |
| காசி நடலை | 86 | கோடார் (சிறப்) | 93 |
| காணிற் கதியருள் | 67 | கோழிக்கொடியன் | 27 |
| காத்தென்குடியை | 78 | சங்கந்தவழ்பணை | 52 |
| காதார ரவக் | 3 | சங்கந் தவழ்வயல் | 10 |
| கார்காட்டு | 24 | சங்கம் பொருந்தும் | 61 |
| கார்காவல் கொள் | 44 | சங்கார்பணை | 6 |
| காருமதியுந் | 13 | சங்காழ்புனற் | 24 |
| காலனைத்தலைப் | 73 | சங்கூர்வயல் | 49 |

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் மேவு | 21 | செறிதழையாது | 36 |
| சிந்தாகுலந்தீர்த் | 77 | செறிமாதவர்தாழ் | 19 |
| சிலையுங்கணையும் | 17 | சேணும் பரவுந் | 27 |
| சிறைவண்டினங் | 60 | சேணைப்பொருந்து | 55 |
| சினங்கொண்ட | 39 | சேமன்கொடியர் | 81 |
| சீர்தங்கு | 1 | சேயெனத்தேடி | 68 |
| சீரார்பெருமை | 51 | சேவிற்றிகழுங் | 54 |
| சுதையுற்றெழுந்த | 84 | சேலைக் கொடிகொளும் | 73 |
| சுருதிப்பொருளர் | 9 | சேலைக்கொடியில் | 19 |
| சுரும்பார் குவளை | 81 | சோன்மாலைவேய்ந்த | 31 |
| சூலக்கரத்தர் | 51 | சோலைக் கமுகு | 62 |
| சூலங்கரத்திடை | 90 | சோலைத்திருமுது | 22 |
| சூலார்முகில் | 12 | சோலைப்புறமு | 54 |
| சூலார்வளைகள் | 6 | தஞ்சங்கலந்த | 84 |
| சூலுக் குளைந்து | 29 | தண்ணார் மலர் | 5 |
| சூலுக் குளைவளை | 51 | தணிக்கும்பவத்தர் | 9 |
| செங்காவிரீர் | 79 | தம்மாதிடத் | 28 |
| செங்காற்பசிய | 33 | தளிர்படுமேனி | 89 |
| செத்தார்பிறவா | 15 | தன்பொற்பதங்கள் | 56 |
| செந்தாதிதழிச் | 26 | தன்னைக்கடு | 51 |
| செந்தாமரை | 22 | தன்னைக்கண்டார் | 25 |
| செந்தீயுருவர் | 76 | தாவுமுழைகொள் | 16 |
| செந்தீவணர் | 80 | தாழுங்குழல் | 3 |
| செந்நெற்செறி | 4 | தாழுமவர்க்கருள் | 5 |
| செம்மேனியையர் | 20 | திங்கட்சடையர் | 76 |
| செம்மைத் திருமுக | 46 | திணியபுயமுடை | 74 |
| செய்யம்புறு | 89 | திணியுற்ற | 71 |
| செய்யால் விளங்குந் | 85 | திருத்தங்குழல் | 69 |
| செய்யின்மணி | 58 | திருந்தாரரணம் | 26 |
| செய்வேள் சிலையார் | 38 | தீராதபாவந் | 85 |
| செல்லார்மலர்ப் பொழில் | 43 | துக்கம் பொருந்தும் | 44 |
| செற்றார்புரமெரி | 48 | துடியாரிடை | 91 |
| செற்றாரெழும் | 89 | துதியைப் பொருந்தும் | 44 |

| | |
|---|---|
| தும்பையணிந்த | 50 |
| துள்ளியெழுமான் | 71 |
| துளிக்குமது மழை | 68 |
| துறவிக்குலங்கள் | 37 |
| துறவுவிரும்பி | 35 |
| துன்பர் தமக்குத் | 41 |
| துன்பிற் படுமெனை | 46 |
| தூயர்மனங் | 85 |
| தெருளும் பொருள் | 2 |
| தேங்கும்புனற் | 66 |
| தேடிப்பதியைக் | 31 |
| தேடுமிருவர்க்கரியார் | 78 |
| தேடுமிருவர் திருமுது குன்றர் | 75 |
| தேயுற்றவெண் | 24 |
| தேவர்க்கரியர் | 71 |
| தேவிக்கருளுந் | 65 |
| தேவிற்பெரிய | 74 |
| தேன்வீழுஞ்சோலை | 4 |
| தேனுண்டவண்டு | 6 |
| தொடுநீருலகந் | 83 |
| தோகைக்கொருபுறம் | 44 |
| தோயங்குடிகொள் | 39 |
| தோய முடிகொ | 77 |
| நச்சிப்பணியும் | 43 |
| நஞ்சார் மிடற்றர் | 14 |
| நஞ்சுக்குரியகளமுது | 33 |
| நஞ்சுக்குரிய மிடற்றார் | 9 |
| நடமாடு | 53 |
| நடைசேர் பயணம் | 81 |
| நந்தாமணிவிளக் | 18 |
| நந்திக்கொடியுடை.........<br>......அந்திப்பிறை | 14 |
| நந்திக்கொடியுடை.........<br>.......தந்திக்கிணை | 31 |
| நம்பாவருளுடை | 48 |
| நம்பாற்கருணை | 58 |
| நம்மைப்பிரிந்தார் | 55 |
| நலத்திற் சிறந்த | 88 |
| நற்குன்றமாகுந் | 79 |
| நனைகாவலர் பொழி | 32 |
| நிலந்துன்பகலத் | 45 |
| நிறையும்புனற் | 64 |
| நீங்கருமாதின் | 39 |
| நீங்காததுன் | 73 |
| நீர்கொள்சடை | 76 |
| நீர்மலிவேணித் | 56 |
| நீர்மேவு செஞ்சடை | 14 |
| நீரார்சடையர் | 30 |
| நீரும்பிறையு | 16 |
| நெஞ்சார் துரிசு | 73 |
| நெல்லுங் கரும்புஞ் | 52 |
| நேரின்றிய புகழ் | 19 |
| பங்கமிலாத | 35 |
| பங்கமுழுதுந் | 39 |
| பங்கயத்தயன் (சிறப்) | 93 |
| பங்காருமையர் | 64 |
| பங்கேருகத்தடம் | 8 |
| பண்டவ்விடத்தை | 62 |
| பண்டார் குறுமுனி | 60 |
| பண்ணைப்பழித்திடு | 78 |
| பண்ணேடிய | 90 |
| பணியாகப் பாம்பை | 50 |
| பணியாரரவைக் | 3 |
| பணியுற்ற மெய்யர் | 72 |
| பணியேறுசெஞ் | 22 |

| | |
|---|---|
| பணையார்தடங்கள் | 11 |
| பதிசேர்ந்திரா | 59 |
| பந்தங்கெடுத் | 12 |
| பந்தந்தவிர்க்குந் | 37 |
| பந்தாடுமங்கையர் | 38 |
| பரவைக்குச் | 90 |
| பரைப்பால் | 30 |
| பலத்திற் கரிய | 82 |
| பற்றூர்புரமெரி | 45 |
| பன்னகப் பூணணி | 83 |
| பன்னாட்டத்திந்திரன் | 36 |
| பாட்டிற்குரிய | 67 |
| பாந்தளம் பூணணி | 36 |
| பாம்பாகிய | 12 |
| பாம்பையடுத்த | 14 |
| பாயுமதிக்கரத் | 34 |
| பாயுமுழைகொள் | 43 |
| பார்மேலமர் | 32 |
| பாரலர்கொண்டு | 59 |
| பாரும் விசும்பும் | 5 |
| பாரோர்தவத் | 25 |
| பாளைக்க பூகு | 17 |
| பிணைகொள் | 75 |
| பிளவுமதி | 15 |
| பிறக்குமுயிர்க்குத் | 32 |
| பிறவாவழி | 30 |
| பிறைகொண்ட | 12 |
| பின்னுஞ்சடிலத் | 59 |
| புகழ்வாரைப் | 86 |
| புங்கம்பொருந்து | 81 |
| புல்லையுரித்த | 38 |
| புலத்தகம் போகா | 66 |
| புலமன்னு கொன்றை | 92 |
| புனத்திற்கிளி | 51 |
| பூரந்திடங்கொளும் | 89 |
| பூமேவியதடம் | 90 |
| பூவும் பொழியும் | 1 |
| பூளைச்சடை | 79 |
| பெண்கட்கரசி | 92 |
| பெண்ணுக்கருங்கல | 8 |
| பைங்குவளை | 13 |
| பைங்கேழ்ப் | 65 |
| பைந்துணர்க் | 91 |
| பொடியேயணியும் | 40 |
| பொதுவினடம்புரி | 84 |
| பொருந்தாரரணம் | 11 |
| பொன்கண்ணனைய | 71 |
| பொன்பதித் | 54 |
| பொன்னங்கிரியை | 91 |
| பொன்னற்கரிய | 72 |
| பொன்னேரனைய | 63 |
| பொன்றொத்த | 77 |
| போதைத்துறந்திம் | 61 |
| போர்கொண்ட | 36 |
| போராரும் வேலர் | 67 |
| மங்கைக்குடம்பு | 61 |
| மஞ்சார்கொடி | 55 |
| மடுவால்வளை | 85 |
| மடைதங்கு | 37 |
| மடைவைக்குஞ் | 65 |
| மண்டும்பிறைச் | 75 |
| மண்ணின்ப | 29 |
| மண்ணுக்கினிய | 46 |
| மணிமுத்தமாநதி | 21 |
| மணிமுத்தவாறு | 34 |
| மணியார்மிடற் | 34 |

| | | | |
|---|---|---|---|
| மதுமழை | 21 | முறிச்சிக்கை | 48 |
| மரியாதிருந்திட | 82 | முன்பார்த்தவன் | 26 |
| மருப்புத்தலைச் | 65 | முன்பேலெழுந்த | 17 |
| மல்லைத்கரித்த | 22 | முன்னமயற்கருள் | 32 |
| மலைபெற்ற | 6 | முன்னீர்குடிக்கும் | 4 |
| மலைமின்னிடங் | 74 | முன்னீர்பருகு | 15 |
| மலையிற்பெரும் | 81 | முன்னோர் சசிவன்னன் | 47 |
| மழைதாழ்பொழில் | 7 | முனிவோர் பரவுந் திருமுது குன்றர் | 27 |
| மழையைக் கொளும் | 28 | முனிவோர் பரவுந் திருமுது குன்றினர் | 31 |
| மறிபொற்கர | 63 | மெய்க்குப்பொருந் | 69 |
| மறியார்கர | 58 | மெய்யுற்றவர் | 63 |
| மறையார்புகழுடை | 16 | மைக்கொண்டல் | 45 |
| மறையோரெரிமுன் | 20 | மைந்நாகன் | 80 |
| மன்மாலறியா | 16 | வண்டார் | 1 |
| மன்னுரிசை | 49 | வண்டுஞ் சுரும்பும் | 58 |
| மாகத்தவர்கள் | 42 | வணர்வார் | 88 |
| மாகத்தளவு பொழின் | 53 | வத்திரமைந்து | 62 |
| மாகத்தளவு மதில்சூழ் | 80 | வயலாற்சிறந்த | 19 |
| மாதுகவரு | 3 | வல்லிற்றிகழு | 57 |
| மாதேமனையுங் | 71 | வள்ளற்றகைமை | 23 |
| மால்போல | 60 | வளவேருழுவயல் | 5 |
| மாலைக்குழலி | 75 | வன்னிக்குறுசொல் | 24 |
| மாறன்பிரம்படி | 74 | வனத்தன்பில் | 32 |
| மாணீன்ற கண்ணி | 2 | வனைவார் குழலி | 18 |
| மாறென்றுகை | 27 | வாடாத சீருடை | 39 |
| மின்கொண்டல் | 91 | வாணற்கருள்புரி | 34 |
| மின்போன்றவிர் | 19 | வாவித்தடமலர் | 42 |
| மின்மேனிகொள் | 85 | வாழுமுதுகிரி | 26 |
| மின்னார்சடையர் | 2 | வாழைக்குலையினை | 25 |
| மின்னிப்பொழியு | 60 | வாளைகுதிக்குந் | 57 |
| மின்னேயிடை | 11 | வாளைத்தடஞ்சீர் | 65 |
| முகமைந்துடைய | 7 | | |
| முத்தாறுசூழும் | 4 | | |

வான்செய்த பூசை 43
வான்சேர்பொழில் 87
வான்ரெட்ட 52
வானத்துயர் பொழில் 78
வானம் பொருந்தும் 87
வானலங்கொண்ட 42
வானிற் செறிபொழில் 24
வானுந்தொழு 20
விசையன்றனு 52
விடங்கொண்ட 7
விடர்த்தங்கு 38
விடும்பற்றுடை 23
விடைகாட்டிய 25
விண்கொண்ட 13
விண்டடுத்தோங்கு 46
விண்டிடுபூவார் 40
விண்டுவந்தேத்தும் 10
விண்டென்றுங் 29
விண்ணம் விரும்பு 17
விண்ணளக்கும் 23
விண்ணிற்கரிய 56
விண்ணிற்சிறந்த திருமுத்துகுன்றர் 6
விண்ணிற்சிறந்தவிருத்தாசலர் 14
விண்ணைக்கடந்த 70
விண்போற்சிறந்த 53
விதிசாரதியாக் 48
விதியும்பணியுந் 20
விந்தமடக்கும் 41
விரிக்குந்தலை 15
விரிகா முதுகுன்றம் 55
விரிந்தார்கடுக்கை 59
விரைசேர் 92
விரையார்மலர் 11
விளைகொள்வயல் 47
விற்றேருடைய 21
வினைகாவனிக்கி 64
வெங்கோலரசன் 68
வெண்ணீறணிந்த 79
வெள்ளப்புனற் 18
வெள்ளிக்கிரியை 87
வெளியுமுருவு 33
வேணித்திருமுடி 27
வேதன்படைத்த 18
வேலைக் கடுவிட 26
வேலைக்கருநஞ் 90
வேலைப்பிடித்த 37
வேளைக்கடந்த 69
வேளைப்பொடித்த 29
வேனிற்றுணைவன் 56